"பைந்தமிழ்"

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு—திருக்குறள்.

தொகுதி	ருத்ரோத்காரி௵ வைகாசிமீ	பகுதி
1	1923௵ மேமீ	5

கடவுள் வணக்கம்.

விநாயகா.

" சத்தி யாயசிவ மாகித் தனிப்பர
முத்தி யானை முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொரு ணல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே."

ஆறுமுக நாயனார்.

" ஆறுமணி மவுலியுங்கண் ணீராறுங் குழைகளீ ராறும் பால
மாறுநற் பவளவா யாறுமா றுவெழுத் தாறுமானோ
னாறுமிளிர் துணைடமுந்தோ ளீராறுங் கரங்களீ ராறுஞ்சோதி
யாறுவத னமுந்தொழுவோ ராறுத பிறவியினைப் பாறுவாரே."

---

1. தெரிவாக வூர்வன நடப்பன பறப்பன
செயற்கொண் டிருப்பன முதல
தேகங்க ளத்தனையு மோகங்கொள் பௌதிகஞ்
சென்மித்த வாங்கிறக்கும்
விரிவாய பூதங்க ளொன்றொடொன் றாயழிவு
மேற்கொண்ட சேட மதுவே
வெறுவெளி நிராலம்ப நிறைசூனிய முபசாந்த
வேதவே தாந்த ஞானம்

பிரியாத பேரொளி பிறக்கின்ற வருளருட்
    பெற்றோர்கள் பெற்ற பெருமை
பிறவாமை யென்றைக்கு மிறவாமை யாய்வந்து
    பேசாமை யாகு மெனவே
பரிவா யெனக்குநீ யறிவிக்க வந்ததே
    பரிபாக கால மலவோ
பராக்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
    பரிபூர ஞானந்தமே.

தில்லையில் நடனு போற்றி திகம்பர சிவமே போற்றி
யல்லலை யடர்ப்பாய் போற்றி யரியயற்கரியாய் போற்றி
யெல்லையில் குணனே போற்றி யெழிலுரு மெழிலாய் போற்றி
பல்வினை யொழிப்பாய் போற்றி பார்ப்பதிபாகா போற்றி.

தமிழ்க்கடலில் கரைகண்ட மகா-ள-ள-ஸ்ரீ ஸ்ரீமான் மகாமகோபாத்யாய வே. சாமிநாதையரவர்கள். நமது பைந்தமிழைப் பற்றி எழுதியது:—

"சென்னை, திருவல்லிக்கேணியிலுள்ள மகா-ள-ள-ஸ்ரீ கே. ஜகதிசையர், B A., அவர்களால் வெளியிடப் பெற்றுவரும் பைந்தமிழென்னும் மாதாந்தப் பத்திரிகையின் முதல் இரண்டு ஸஞ்சிகைகளைப்படித்துப் பார்த்தேன் இதற்கு விஷயதானஞ் செய்ய முன்வந்திருப்பவர்களையும் இதனை ஆதரிக்க முன்வந்துள்ள கனவான்களையும் நோக்கும்போது தன்பெயரைக்காப்பாற்றிக்கொண்டு இது நெடுங்காலம் நடைபெற்று விளங்கு மென்று எண்ணுகிறேன். இக்காலத்தவர்கள் தெரிந்து கொள்வதற்கேற்ற பலவிஷயங்கள் இதில் எழுதப் பெற்றுள்ளன. யாவரும் வருத்தமின்றிப் படித்துத் தெரிந்துகொள்ளும்படி வசன நடை அமைந்திருக்கிறது பொது ஜனங்களும், சிறுவர், சிறுமிகளும் ஓய்வு நேரங்களில் இதனைப் படிப்பார்களாயின் பல நீதிகளையும், நவீன சாஸ்திர முறைகளையும், இக்கால நடையையும் செவ்வனே அறிந்து பயனடைவார்கள். தமிழபிமானிகள் யாவரும் இதனை வாங்கி ஆதரித்து இதன் பதிப்பாசிரியருக்கு ஊக்கமளிப்பார்களென்று நம்புகிறேன்.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

சந்தாநேயர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

ஆறுமாதத்திற்கு சந்தா தொகைகட்டியிருக்கும் சந்தா நேயர்களுக்கு, இவ்வருட பாக்கி ஆறுமாத தொகையை நமது சஞ்சிகையின் முதல் தொகுதி, ஆறுவது பகுதி மூலமாய், வி. பி. யில் அனுப்பி வசூலிக்கத் தீர்மானித்துள்ளோம. ஆதலால் அச்சந்தா நேயர்கள் தங்களது சந்தா தொகையை மணியார்டர் மூலமாய் அனுப்பி விட்டாலும சரி, வி பி. யில சஞ்சிகையை பெற்றுக் கொண்டு தொகையை கட்டி விட்டாலும் நல்லது தான். மணியார்டர் மூலமாய் அனுப்பவதாலுள்ள இலாபத்தைக் கருதவும். மணியார்ட்ர் செய்வோர் நமக்கு ஒரு கடிதம் வரைந்து, தங்களது பூரணவிலாசத்தையும், சந்தா நெம்பரையும் அறிவிக்கவேண்டும். நமது "பைந்தமிழ்" சந்தாநேயர்களது உதவியாலேயே வாழ்கிறுள் என்பதைக்கருதி ஒவ்வொரு சந்தாநேயரும ஒரு புதிய சந்தாநேயரை சேர்க்குமபடி கேட்டுக்கொள்ளுகிறோம். எல்லாம் வல்ல சச்சிதானந்த சொரூபியான பரமபொருள் பாதுகாக்கவே பிரார்த்திப்போம். சுபம! (முதல் பகுதி 51-ம்பக்கமும், 52-ம்பக்கமும் பாரக்க.)

K. ஜகதீசன், பீ. ஏ.
"பைந்தமிழ்" பத்திராதிபர்.

முக்கிய குறிப்பு.

"பைநதமிழ்" சாநதாதாரர்கள ஒவவருவருக்கும் 7-ம் சஞ்சிகை யனுபபும காலத்தில 8-அணு விலையுள்ள ஒரு தேசிய புத்தகம பரிசாக அளிக்க எண்ணியிருக்கிறோம. 7-ம் சஞ்சிகை காலத்தில் முன் பணம் அனுப்பி சந்தாதாரராக யிருப்பவர்களே அந்த உரிமை யடைவாரகள்.

இன்னும் சநதாதாரராக இருப்பவர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சந்தாதாரரை சேர்த்துக் கொடுப்பாரானல் அவர்கள் உதவி நன்கு பாராட்டுவதுடன் அன்னவர்களுக்கு 8-அணு விலையுள்ள புத்தகம் பரிசளிக்கப்படும்,

சிவத்தியானம்.

தியானந்தன்னிற் சிறப்புற்றோங்கிய
சிவத்தியானத்தின் சிறப்பினைச் செப்புவோம்
உலகிற்றோன்றிய உயிர்களெல்லாம்
இன்பமொன்றையே யென்றும் விழைவுறூஉம்
சிற்றின்பத்தைச் சிறியோர் விரும்புவர்
பேரின்பத்தைப் பெரியோர் விரும்புவர்
முக்தியொன்றே முடிவிலா வின்பமாம்
இதனையடைதற்கியற்று முபாயமே
சிவத்தியானமென்று செப்புவரான்றோ
திரிகாரணங்களாற் செயலெல்லாம் நிகழும்
மனத்தின் நினைவால் மற்றவை நிகழும்
ஆதலால் மனத்தை யடக்கவேவேண்டும்
மனமடங்காவழி வாய்ப்பது நரகே
மனமடங்கியவழி வாய்ப்பது கதியே
தீமையதனில் சிந்தனை யோடுமேல்
தீமைமயமாத் தீமனம் மாறிடும்
நன்மையதனில் நாடுமனமெனில்
நன்மைமயமா நலமுறு மனமே
மனத்தின் நினைப்பு வலிமையால் தோன்றும்
உருவமதனை யுருவெளியென்பர்
இதற்கோருதாரணம் இயம்புதுங்கேண்மின்
சீதாதேவியின் றிருவழகதனைச்
சூர்ப்பநகைதான் சொல்லக்கேட்ட
தசமுகன் சதா ஜானகி நினைவால்
பார்த்தவிடமெலாம் பார்மகளுருவெனக்
கண்டுதன் றங்கையைக் கடிதிலழைத்துச்
சீதையோவிவளெனச் சீறமனென்று
தங்கையும் தமயனும் தங்களில் வாதமிட்
டுரைத்துக் கொண்டதுரு வெளித்தோற்றமே
நினைக்கும் பொருளும் நினைப்பும் வேறின்றாய்
ஒன்றுமென்று முணர்ந்தாருரைப்பர்
செய்யுளிலக்கணந் தேருமாணாக்கன்
கிம்பதயிலமும் செய்யும் வேறின்றாய்
உணர்ந்த தன்மையை யுணரார்யாரே
மனமெனும்பானை காமாதிமதத்தால்
பிரபஞ்சமென்னும் பெருங்காடடைந்து

தருமமுதலாந் தருக்களை யொடித்துத்
துயாக்கடலிற் றுளைநதழியாமலே
அறிவெனு மங்குசத்தாலேயடக்கி
நலவொழுக்கென்னும் நற்றளையிட்டுத்
தியானகூடததிற செவவிதாய் நிறுததின்
அருளெனும நீரை யன்புடன பருகி
யின்புறறமரும் இது செய்விததல
ஞானமுடை பாகன் நற்றொழிலாகும
தன்றொழில் தன்னைச் சரிவரச செயானேல்
ஞானமாம்பாகனை நடுங்குறக்கொல்லும்
இதயமடக்குதல எளிதோவன்றே
கல்லிலும் வலிதாம் காற்றினும் கடிதாம்
தீயினுங் கொடிதாம திரைகடற் பெரிதாம்
யமனைப்பார்க்கினு மஞ்சத்தக்கதாம்
சும்மாவிருந்து சுகம்பெற லரிதாம்
பூாவமியற்றிய புண்ணியபாவததால்
இன்பதுனபங்களை யாவரும நுகர்வர்
செம்பொனாலை கருமபொனால் செய்விலஙகென்றே
நல்வினை தீவினை யென நவிலுவரே
ஆதலாலிரண்டையும அழிததவனடிகளைச்
சிந்தனை செய்தால் சிவமாந்தன்மை
கூடுமென்று கூறுவா பெரியோர
மரணகாலத்தில மனமெதிற்பற்றோ
அதன்பயன்றனே யடுத்த பிறவியாம்
ஆதலினுலக வாசையை யொழித்துச்
சிவபிரான அடியையே சிந்தனைசெய்க
உள்ள நாளெல்லாம் உலகிலுழன்றே
யிறுதிக்காலத திறைவனடிகளைச்
சிந்தனைசெய்தல தேவாக்குமரிதாம்
பனனாட்பழக்கப் பண்பேநனிமிக
ஆசைபபடுகுழி யதனிலமிழ்ந்து
கண்ணீா விழ்ந்துக் கதறுவதல்லது
சிவசிவவென்று செப்பவுமபோமோ
மனைவி மக்களாம் வான்பொருளோடு
பிறநது வளர்நது பெருகியதன்றும்
நெடுநாட்பழக்க நேசமேகாரணம்
உடல்விடுமுன்ன ருலகவாசையைச்
சிறுகசசிறுகவிட்டுச சிவத்தின்
அடிமலாதனி லாசையைப்பெருக்குக

இவ்வாறொழுகின் எம்பிரான்பற்றே
யோங்கியுலகவா வொழியுமென்க
கள்ளப்புருடன்மேற் காரிகையன்புபோல்
எந்தத்தொழிலினும் ஏகாந்தியானமே
முற்படநின்று முனைந்து முதிரவுறும்
உண்ணும் உணவும் உடுக்கு முடையும்
சிவார்ப்பணமாகவும் செய்யுஞ் செயலெலாம்
சிவசெயலாகவும் தேர்ந்து கடைப்பிடிக்க
இன்பமெய்தினும் துன்பமெய்தினும்
சிவவெனும் மொழியைச் சிந்தைமறவாது
கூறிபேவரும் கொள்கையில் உயர்க
இங்ஙனம் பழக்கமேறின் இறுதியில்
சிவசிந்தனையே சிந்தையில் நிலையுறும்
இதனை பல்ல தெவ்வித உபாயமும்
பயன்றாதென்று பகருவர் மேலோர்
அவாவே பிறவியை அடுக்காய் கொணரும்
"மரிக்கும் போதுன்னும் வடிவினையாவி
பரிக்கும் நினைவி பரிநதெனப" பகன்றார்.
ஆதலிற் "சுற்றத்தாரை நினையாதான்
பாதநினைக பரிநதெனப்" பகன்றா
"சிவாயநமவெனச சிந்தித்திருப்போர்க்
கபாய மிலலையென" அறைந்தனர் மேலோர்
பாலினுள் நெய்போலிருக்கும பரம்பொருள்
தயிரினில் நெய்போற்றான் வெளியாகிய
பேரின்பமுத்திப் பேற்றினையளிக்கும்
சங்கராசாரியார் தன்மனக் குரங்கைப்
பிக்ஷாண்டவரொடும் பெருமானே நீ
ஏற்கவேண்டுமென்றியம்பிய ரகசியம்
அறிவுடையோரே யறிவா அனைவருள
கூடினலன்றிக்கூடவும போமோ
ஆதலாலிடையறா அன்புகொண்டே
சிவத்தியானஞ்செய்து சிவகதியடைக

ஜி. சதாசிவம் பிள்ளை,
"நீலலோசனி" நாகை.

வேதாந்த வசனம்.

(111-ம பக்கத்தின் தொடர்ச்சி.)

மேற்கூறியதற்குப பொருள கிழ்க்கூறுகிறா,

8. இவ்வுலகங்கள் இதனுள இருக்கின்றன. இப்பிரபஞசம் எல்லாம் உள்ளேஉள்ளன. கண்ணாடிக்குள் பிரதிபலிக்கப் பெற்றது போல் உள்ளேயுள்ள இப்பிரபஞ்சமானது மாயையினல் புறம் பாகத் தோற்றுகிறது.

[இநதச சுலோகமானது "மாயை என்பது பரமாத்மாவிற்குள் ளேயே அடங்கியிருக்கிறது" என்பதைக்குறிக்கிறது. இதனுள் என்றதனல் உலகம் ப்ரஹ்மமான ஆத்மாவினிடத்துள்ளது என் றும், அப்ரஹ்மத்தைவிட்டு புறமாக இல்லாது அகமாக உள்ளது என்றும் பொருளபடும். இபபிரபஞசம, அபாரசக்தியும், பிறப பிறப்பிற்கு காரணமாயும், இபபிரபஞசப பற்றிறகுக் காரணமாயும், உள்ள மாயையினல், பிரஹ்மததிற்கு புறமபாக உள்ளதுபோல் தோன்றுகிறது. ஆதலின் மாயை நீங்கினல உலகம் ப்ரஹ்மமான ஆத்மாவினிடத்துள்ளது என்றது எளிதில் அறியப்படும். இதனு லேயே மாயை பரமாத்மாவி லடங்கியது என்பது புலப்படுகிறது. அதற்கு அத்தாக்ஷியாக, ஒருவன் கண்ணாடி ஒனறின எதிரில் போய் நின்றால் அவன் உருவம அதில் பிரதிபலிக்கின்றது; கண் ணாடியில விழும் அவன் சாயல உண்மையோ?—உண்மையில்லை. ஆனல் கண்ணாடியில் உருவம் தெரிகிறது என்ற சந்தாப்பத்தில் அது உண்மையே தவிர்தது, உருவம ஒன்று கண்ணாடிக்குள் இருக்கிறது என்பது பொய்—நாம கண்ணாடியின் எதிரில நின்றாலொழிய அதில் நம் உருவம் தெரியாது. அங்ஙனமே பரமாத்மா என்ற ஒரு நிலைப் பொருள இருந்தாலொழிய மாயை என்பது இருக்காது.]

9. கனவிலே பிரபஞசமானது ஆத்மாவினுள் உள்ளதாயினும் எப்படித்தூங்குகின்றவனுககுப புறமபாக உள்ளதுபோலக் காணப் படுகிறதோ, அப்படியே விழிப்பு சமயத்திலும் இப்பிரபஞ்சத்தை ஆராய்க.

[இதனுள், கனவும், பிரபஞ்சமும் ஒன்றெனக்கூறுகிறார்.

" தேன்முகம் பிலிற்றும் பைந்தாட் செய்யபங் கயத்தின் மேவு
நான்முகத் தேவே நின்னால் நாட்டிய வகில மாயை
கான்முயற் கோட்பே யென்கோ கானலம் புனலே யென்கோ
வான்முக மலரி யென்கோ மற்றென்கோ விளம்பல்வேண்டும்."

என்று தாயுமானவரும்,

" மந்த விருளிற் கயிற்றரவின் மாறுபாடாய்த் தோன்றுதல் போல்
இந்த வுலகு முயிர்களுமவ் வீசன்றனு முயிரடையும்
பந்தம் வீடு மீசனசெய் பஞ்ச கிருத்தி யங்களுமே
அந்த நமது சொரூபத்தி லாரோ பிதமாய நின்றிலங்கும்."

என்று குமாரதேவரும், மற்றும் பல புலவர்களும், கானல்நீர், கயிற்றரவு, கனவு முதலியவறறைப்போலும் உள்ள பொய்த்தோற்றம் என வருளியுள்ளனர். உதாரணமாக ஒருவன் தான் பின்வருமாறு கனவு காணுகிறான். தான் சென்னையிலிருந்து கையில் ரூபாய் நான்காயிரத்துடன் ஸெகண்ட் கிளாஸ் (SECOND CLASS) வண்டியில் ஏறி ராமேச்வரத்திற்கு மெயிலில் செலவதாயும், அங்கு தான் வழிதப்பி ஒரு காட்டில சென்றுவிடுவதாகவும், அப்பொழுது திடீரென சில திருடர்கள் தன்னை வளைத்துக்கொண்டு, அடிக்க தஙகள் கையிலுளள ஆயுதங்களை ஓங்குவதாகவும்..............அதே சமயத்தில் தான் விழித்துக்கொண்டு விடுகிறான். இவன் இம்மாதிரி கனவு காணுகையில உண்மையாக சென்னையிலிருநது ரயிலேறி செல்கிறானா? இல்லை; உறங்குகிறான். ஆனால அவன் அம்மாதிரி கண்டதன் காரணம் என்ன? எல்லாம் மாயையினால்தான்! (இதன் காரணம் 11-ம் சுலோகத்தின் வசனத்தில் விவரமாகக் கூறப்படுகிறது) பிறகு நனவிலும் இப்பிரபஞ்சம் அவனுக்குப புறம்பாகத் தோற்றும். இவனுக்கு கனவில கண்டபொருள, நனவில் எப்படிப பொய்யாகததோற்றுகிறதோ, அமமாதிரியே நனவில (ஜாகரத வஸ்தையில்) இவ்வுலகம புறமபாகி, பரஹ்மத்தை அறிநததும் பொய்யெனவிளங்கும். இவைகளெல்லாம் ப்ரஹ்மத்தின் பிரதி பிம்பமே].

10. கனவில் காணப்படும் பொருள்களின் உண்மையானது ஆத்ம உண்மையேதான், அதைத்தவிர வேறன்று; என நிச்சயிக்கப் பட்டுள்ளது. ஜடமாய், விரைய அழியுந்தன்மையனவாய் நனவில் காணப்படும் பொருள்கட்கு வேற்றுமை என்ன?

[நாம் கனவையும், உலகத்தையும் முன்பத்தியில் ஒப்பிட்டுக் கூறினோம். ஒருவன் கனவுகாணும்பொழுது அந்தக்கனவிற்காணப் படும் பொருள்கள் திடீரென மறைந்துவிடுகின்றன. ஆனால் நாம் அது மறைந்துவிடும் என்று எதிர்நோக்கவில்லை. எப்பொழுது நாம் கனவையும், நனவையும் ஒன்று என்றுகூறினோமோ அதே காலத்தில் கனவு திடீரென மறைவதுபோல இப்பிரபஞ்சமும் அழியக்கூடியதுதான்.* இப்பொழுது மாயை என்பது பரமாத்மாவின் குணமாகும். ஆதலால் பரமாத்மாவானவர் தனது குணமாகிய மாயையை உபயோகிக்கும்பொழுது நமக்கு இப்பிரபஞ்சம் பல விதமாகத்தோற்றுகின்றது. அவர் அதை உபயோகிக்காவிட்டால் இவ்வுலகம் நமக்குத்தோற்றாது. ஆதலால் உலகம் அழிவுள்ளது.]

11. கனவில் காணப்படும் பொருள்களின் விளக்கமானது ஆத்ம ஒளியினால் விளக்கமாகிறது; மற்றையவேறொன்றாலும் விளங்காது; அப்படியே ஆத்மாவினால் தான் விளங்குகின்றது என்று அறிவுடையோர்கள் துணிகிறார்கள்.

[கனவில் தோன்றும் பொருள்கள் தாமாக சுதந்திரமாய் விளங்கவில்லை. ஆத்ம ஒளியினால் சந்திரன்போல் விளங்குகின்றன. எப்பொழுது நாம் கனவையும் நனவையும் ஒப்பிட்டுக்கூறினோமோ, அதன் பிரகாரம் நனவுப்பொருள்களும் ஆத்ம ஒளியினால் விளங்குகின்றன. சகலமும் ஆத்ம ஒளியினாலேயே நடைபெறுகின்றன. ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் "மனிதன் ஒளிவான ஆத்ம சகாயத்தினாலேயே உட்காருகிறான், போகிறான், தொழிலைச் செய்கிறான்,

* தெய்வத்தன்மை பொருந்திய திருவள்ளுவ நாயனார் திருவாய்மலர்ந்தருளிய ஞானவெட்டியான் ஈஸ்வரசிருஷ்டியில் பாடல்கள் 575, 576, 577, 578, காண்க.

திரும்பி வருகிறான் என்று கூறியிருக்கிறது. கீதையில், "எந்த ஒளி ஸூர்யனைச் சார்ந்து நின்று, உலகை யெல்லாம் பிரகாசிக்கச் செய்கின்றதோ; எது சந்திரனிடத்தும் உள்ளதோ; எது அக்னியினிடத்தும் உள்ளதோ; அந்த ஒளியை என்னுடையதாகத் தெரிந்துகொள்" என பகவான் உபதேசிக்கிறார். ஆதலால் நித்தியமான ஆத்ம ஒளியினால் எல்லாம் விளங்குகிறது. ஆதலின் உலகம் அநித்ய வஸ்து வென்பது விளங்குகிறது.]

12. எழுந்திருந்தவன்—உறக்கத்தால் காட்டப்பெற்ற பொருள்களைக் காணாதவாறுபோல, ஒருவனுக்கு ஞானம் உதித்ததும், தன்னை யறிந்ததும், பிரபஞ்சத்தை காணமாட்டான்.

[ஒருவன் உறக்கத்திலிருந்து விழித்துக்கொண்டவுடன் அவன் கனவிலதான் கண்ட பொருள்களை நனவில் அறிகிறான் இல்லை; நாம் கனவை அக்ஞானம் என்றும் நனவை ஞானம் என்றும் வைத்துக்கொள்வோம். அப்பொழுது கனவாகிய அக்ஞானத்திலிருந்து, எவனொருவன், நனவாகிய ஞானத்தை அடைகிறானோ, அப்பொழுது அவன் கனவைக்காண்கிறான் இல்லை. நாம ஏற்கனவேயே கனவை, நனவிற் கொப்பிட்டோம்; அதன்படிக்கு நனவு அக்ஞானம்; ப்ரஹ்மம் ஞானம். ஆதலால எவனொருவன் அக்ஞானமாகிய உலகத்திலிருந்து ப்ரஹ்மமாகிய, மெய்ப்பொருளென்ற, எல்லாவற்றிற்கும ஆதியாயுள்ள ஆத்மாவான பரப்ரஹ்மத்தை அறிகிறானோ அவனுக்கு உலகந்தோன்றாது, அவனே மாயையைக்கடந்தவன்.]

13. அநாதி மயக்கத்தால உறங்கிக்கொண்டிருக்கும் ஜீவன் எப்பொழுது விழித்துக்கொள்கின்றானோ; அப்பொழுது—பிறவாததாயும், உறக்கமில்லாததாயும், கனவில்லாததாயும் உள்ள அத்வைதத்தை அறிகிறான்.

[அநாதி மயக்கமெனில்—தொடக்கமின்றித் தொடர்ந்துவரும் உண்மையினை உணராமையும்—கயிற்றரவாகவும், கானல் நீராகவும் துணிதலாம். சம்சார பந்தாதிகளிலே கட்டுண்டும், மாயையால் மறைக்கப்பட்டும், ப்ரஹ்மத்தை அறியாதும, கூண்டில் அடை

பட்ட கிளிபோல் உள்ள ஜீவனானவன் ஞானத்தை யடைந்ததும், அத்வைதமாகிய நானே சிவம் என்ற ஐக்ய நிலையை அறிகிறான். ஆதலால் ஜீவபரஹ்மைக்யமே சிறந்ததாம்.

குறிப்பு:—நமது "வைரத்தமிழ்" 68-ம பக்கத்தில் வினவிய முதல வினாவிற்கு 10—11-ம் சுலோகங்களால் விடை கூறப்பட்டது.

(தொடரும்)

பக்தன்.

ஒழுக்கம்.*

நமது நடைவுடை பாவனையே ஒழுக்கம் எனப்படும். நமது ஐச்வரியம், மேன்மையாகவும் அதிககாலம் நீடித்திருப்பதற்கும் முக்கியச் சாதனம் ஒழுக்கமேயாகும். மானிடர்களாகிய நமக்கு ஒழுக்கம் இன்றியமையாதது. ஒழுக்கமில்லாத கல்வி ஒரு போதும் வாராது. நம வாழ்க்கைப்போரில் வெற்றியடைய முக்கிய காரணமாயிருப்பது ஒழுககமாகும நல்லொழுக்கமுடையவரே மேன்மைப பெறுவர். இந நல்லொழுகக முடையவர்கள பெருமையை நாட வேண்டுவதில்லை. ஆனால் பெருமைத் தானகவே அன்னவர்களிடம் வந்துசேரும். இவ்வொழுக்கம் தன்னையுடைய யாவருக்கும் இன்பத்தைக் கொடுக்கும் கற்பக விருக்ஷமாகும்.

இவ்வொழுக்கம் ஒருவனை மனம்போன போக்கெல்லாம் போகவிடாது. மனசசாக்ஷிக்கு விரோதமில்லாது நடத்தக்கூடியது. மனத்திற்கு சந்தோஷத்தை உண்டுபண்ணி மேலோர் நட்பைக் கூட்டுவிக்கும் இயல்புடையது. இது நாம் இறந்தபிறகும் பரலோகத்தில் புகழுடன் வாழச்செய்கின்றது செல்வவந்தன் பல பட்டங்களையும் பெற்று ஒழுங்கீனனாயிருப்பானாயின் அவனைக் கடவுள் தண்டியாதொழிவனோ? ஒழியான் என்பது சந்தேகமற நாம் நன்கு அறியலாம ஆதலால் ஒழுக்கமே யெங்குஞ் சிறந்தது யென்பது தெற்றென விளங்காநிற்கும்

* அற நெறியென்றும், விதி விலக்குயென்றும் பொருள்படும். அவரவர் கடைமையினின்றும் பிறழாது யிருத்தலே ஒழுக்கமாம்.

நல்லொழுக்க முடையவன் பிறர் துன்பப்படும்போது தனக்கு வந்ததாக வெண்ணி, அத்துன்பத்தை தனக்கே வந்ததாக வெண்ணி, அதை தவிர்க்க முயற்சிக்கின்றான். நல்லொழுக்க முடையவன் தாழ்ந்த குலத்தில் பிறந்தாலும், அவனை அவ்வொழுக்கம் மேலானவனாகவும், கீர்த்திபுள்ளவனாகவும் செய்கின்றது. இங்கு ஸ்டான்லி (Stanley) என்பவர் ஜீவிய சரிதம் கேட்கத் தக்கது.

" தக்கவின் தகாதன வின்னவென்
றொக்கவுன்ன லாராயினு யர்ந்துள்
மக்களும் விலங்கேமனு வின்னெறி
புக்கவே லவ்வலகும் புத்தேளிரோ" (கம்ப ராமாயணம்.)

மேலும், நரை மூதாட்டியார

" நல்லாரைக் காண்பதும் நன்றே நலமிகக,
நல்லார் சொற் கேட்பதுவு நன்றே—நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றே யவரோ
டிணங்கி யிருப்பது நன்று "

என்று நம் மேலோர்கள் பலமுறைக்கூறியிருக்கின்றனர். இந் நல்லொழுக்கமுடையபெரியோர்களை இவ்வொழுக்கம் நாளுக்கு நாள் விருத்தியாக்கி வருமாயின் அஃதுடையானை எஞ்ஞான்றும் உண்மை பேசும்படி தூண்டும், தைர்யத்தைப் பயக்கும், பொறுமையை வளர்க்கும், மரியாதை வந்தடையும், தரும சிந்தனையுண்டாக்கும். பெரியோர்களாலும், ஞானிகளாலும், வெறுத்துத் தள்ளப்பட்ட களவு, காமம், வஞ்சகம், கர்வம், கோபம் முதலிய இத்தீக்குணங்கள் பகலவன் முன் கண்ட பனிபோல் ஒடியொளியும்.

"வெள்ளைக்கில்லை கள்ளச் சிந்தை" என்றவாறு இவ்வொழுக்க முடையவனுக்குப் பயங்கிடையாது. யாவராலும் நன்கு மதிக்கப் படுவான். ஒழுக்கமுடையவன் தனவந்தனாக இருப்பினும் தன் பொருளை சத்விஷயங்களில் செலவிடுவான். அவ்வொழுக்க மில்லாதவன் பல காலங்களில் அழிந்து பிறரால் அதிகத்துன்பப்படுவான். இதனால் ஒழுக்கம் உடையவன் இவ்வுலகிலும், அவ்வுல

கிலும் மேன்மை பெறுகின்றான் என்பது வெள்ளிடை மலைபோற் தோன்றும் இரண்டாவதானவன் இங்கு மங்கும் கஷ்டப்படு கின்றான். 'ஒழுக்கமில்லான் கல்வியில்லான்', ஒழுக்கமில்லாதவன் செய்யும் எக்காரியமும் பயன்படாது. இதை நோக்கியே ;

" ஆர்கலி யுலகத்து மக்கட்கெல்லாம்
ஓதலிற் சிறந்தது ஒழுக்கமுடைமை"

என்று பொய்யா மொழியார் கூறினர்போலும் இவ்வொழுக்கம் இருவகைப்படும் ஆதாவது நல்லொழுக்கம், தீயொழுக்கம் எனப் படும். இதுவரையில் நல்லொழுக்கத்தையும் தீயொழுக்கத்தையும் கவனித்து வந்தோம். நல்லொழுக்கம் உண்டாவதற்கு முக்கியக் காரணம்; பால்ய வயதில் (1 முதல் 22 வயதுவரை) பெற்றோர் களும், பின்னர் நண்பர்களும், பிறகு தன்னடக்கமும் ஆகும் " நூலைப்போல் சேலை, தாயைப்போல் பிள்ளை " யென்பதினால் பெற் றோர்கள் எவ்வழியோ அவ்வழியே பிள்ளைகளுமாகும் நல்ல சிநேகதர்களாயின் நன்மை யுண்டாகும், தீய சிநேகிதர்களாயின் தீமையே யுண்டாகும்.

இந்நல்லொழுக்கம் நமயிடம் திடீரென்று வந்து சேராது. ஆனால் நம் அபாரமான முயற்சியினாலும், பழக்க வழக்கங்களினாலும் வருமேயன்றி தானாகவும், வெகு சீக்கிரமாகவும் வாராது யென்பது திண்ணம். ஒவ்வொரு மதத்தினரும் தத்தம நிலையினின்றும் பிற ழாது நிற்பதே நல்லொழுக்கமாகும். அதாவது பிராமணர்களுக் குரிய கடமையாகிய வேதமோதுதலை பிழறாது ஓதிவரவேண் டும். "ஓதலினன்றே வேதியர்க்கொழுக்கம்", வேதமோதும் வேதி யர்க்கோர் மறையென்று அவர்கள் கடமையை வரையறுத்துக் கூறியதினால் அவர்கள் செய்யவேண்டியக் கடமையை செய்து வரவேண்டும். அதுவே அவர்களது முக்கிய ஒழுக்கமாகும். இம் மாதிரியே எனைய மூன்று வர்ணத்தாரும் 'தத்தம் கடமைகளை' நாடோறுஞ் செய்து வரவேண்டும்.

தாழ்ந்த குலத்தில் பிறநதவனாயினும் உலகுடன் கூடிவாழ் தலே சிறந்த ஒழுக்கமாகும்.

"ஓதநீர் வேலை யுலகுளோ ரிவண
துளதெனி லுள்ளதா முன்னதி
யாதொரு பொருளை யில்லையென் றுரைக்கி
லில்லையா மிதுவல கியற்கை"

என்றும்,

"உலகத்தோ டொட்டவொழுகல் பலகற்றும்
கல்லா ரறிவிலாதார்"

என்றும் "உலகத்தோடொத்துவாழ்," "ஊருடன் கூடிவாழ்" என்றும கூறியவாறு, கற்றவனுயிருந்து பெரியோர் ஒழுகும் வழியறிந்து நடவாதவன் கல்லாதவனேயாவான். நல்லொழுக்கமே எல்லா நன்மையுந் தரக்கூடிய ஓர் கற்பகவிருக்ஷம் என்பதை மறக்காது யெல்லோரும் கருத்தில் வைக்கவேண்டும். இந நல்லொழுக்கம் நம்மை வந்தடையுமாறு எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளைத் துதிப்போமாக! சுபம்!

எஸ். என். ராமு,
கூறைநாடு.

பழம்பாட்டுத் தாத்தா.

இவர் ஒருவயது சென்ற பெரியவர், அறிவிலும் அனுபவத்திலும் முதிர்ந்தவர். யார்வந்து பேசினாலும் உதாரணமாக ஆன்றோர்கள் அருளிய பழைய பாடல்களையே யெடுத்துக் கூறிவருவதனால் இவரைப் "பழம்பாட்டுத் தாத்தா" என்ற பெயரினாலேயே யழைப்பார்கள். இவரைப்போலவே அநேகர் கிராமங்களில் அங்கங்கு இலைமறை காய்போல் வசித்து வருகிறார்கள். 'பூவேந்தர் முன் போற் புரப்பாரில்லையன்றிப்......பாவேந்தருண் டென்னும் பான்மையால்......' என்ற பொய்யாமொழிப் புலவர் வாக்கு பொய்யாகுமா? நிற்க, நமது தாத்தா சிலரைப்போல் அர்த்த ஞானமில்லாமல் வெறும் பாட்டை மாத்திரம் ஒப்பிக்கிறவரல்ல நன்றாய் இலக்கிய இலக்கண வேதாந்த, சித்தாந்த சாஸ்திரங்களை எல்லாம் குருமுகமாகப் படித்துத் தேர்ந்தவர். யாரிடத்தும் வேடிக்கை விநோதமாகவே பேசுவார். அருங்கலை விநோத ரென்பது நமக்

தாத்தாவுக்கே தகும். இவர் தான் பிறந்து வளர்ந்து கற்றுத் தேறிய சோழநாட்டைப்பற்றியே மிகவும் பெருமை பாராட்டிப் பேசி வருவார்

சோழநாட்டின் பெருமையைப் பற்றிக்கூறும் பழம்பாட்டில் ஒன்று பின்வருமாறு:—

" மன்றவாணன் மலர் திருவருளால்
தென்றமிழ் மகிமை சிவணியசெய்த
அடியவர்க் கூட்டமும் ஆதிச்சங்கமும்
படியின்மாப்புகழ் பரவுறு சோழனும்
சைவமாதவரும் தழைதகினி திருக்கும்
மைபறு சோழவளநாடென்ப"

என்ற அகவலை யடிக்கடி நமது தாததா பாடி பாண்டி நாட்டு மூன்று சங்கங்களுக்கு முன்பே ஆதியில் ஒரு தமிழ்சங்கம் நமது சோழநாட்டில இருந்ததாக இந்தப் பழம்பாட்டால் தெரிகிற தல்லவா? என்பார். அறுபத்து மூன்று நாயன்மார்களில் நாறபது நாயன்மார்கள அவதரிததிருநத்தும, மூவர் தேவாரங்களில இப பொழுதுள்ள 274-பதிகங்களில், 190-பதிகங்கள நின்றநதிருபப தும் நமது சோணாட்டிற்றேனே யெனபார். அன்றியும்

" அடியாரகெளியன் சிற்றம்பலவன் கொற்றங
குடியாரசெழுதியகைச்சீட்டுப்—படியின் மிசைப
பெற்றான் சாமபானுகருப் பேதமறத்தீககை செயது
முத்திகொடுககை முறை"

என்று பெததாங சாமபானுக்கு முத்தி கொடுக்கவேண்டுமென்று கொற்றங்குடி உமாபதி சிவாசாரியாருககு ஸ்ரீ நடராஜர் கவிராஜ ராய்த தமிழ் வெண்பா எழுதியதும, வாசகங்கோவை வளம் பெற வரைநத, அழகிய திருச்சிற்றமபல முடையார எனக் கைச் சாத்திட்டதும தொண்டர்கதொகையும் தொண்டர் புராணமும் நிறைவினை யெயத அடியெடுததுதவினதும ஆகிய இன்னோரன்ன செந்தமிழ் அருளிய மன்றவாணன் வீறறிருநதருளுமசிதம்பர மகா க்ஷேத்திரமிருபபது சோழநாட்டில் அல்லவா? என்பார். இம் மட்டா? நம் சடகோபனைப்பாடினையோ ...... என நம்பெருமாள் விஞ்சிய ஆதாரத்தால் கம்பரைக்கேட்டதும் கம்பர் தாம பாடி முடித்த இராமாயணததை அரங்கேற்றுங்கால் இரணியன் வதைப

படலததுக்குப் பொருள் கூறும்பொழுது மோட்டழகிய சிங்கப் பெருமாள் கலகலவென்று சிறித்துக் கர்ச்சிததும் மணவாள மாமுனிவரிடம நம்மாழ்வா ரருளிய திருவாய் மொழிக்குப பொருள் கூறும்படி பெருமாள கட்டளை யிட்டருளியதுமாகிய வெம்பெருமாள் வீற்றிருபபதாகிய ஸ்ரீரங்கமிருப்பது நமது சோழநாட்டில் தானே என்பார். மணவாள மாமுனி தன்னிடம் பெருமாள் பேசியதாகக் கூறும் கவி பின்வருங கவியென்பா

"காமார் பெரியதிரு மண்டபமார் நம்பெருமாள்
தாமாக என்னைத் தனித்தழைத்து—நீமாறன
செநதமிழ்வே ததநின் செழும்பொருளை நாளுமிஙகே
வந்துரையென றேவுவதே வாய்ந்து."

சிதமபர மகாக்ஷேத்திரமும், ஸ்ரீரங்க திவவியதேசமும சோழநாட்டிலிருக்கும் பெருமையைப்பற்றிய கவி

"இரவு நண்பக லாகி லென்பக லிருளா ருவிர வாகிலென்
இரவி யெண்டிசை மாறி லென்கட லேழு மேறிலென வற்றிலென்
மரபு தங்கிய முறைமை பேணிய மன்னர் போகிலென் ஞகிலென்
வளமை யின்புறு சோழ மண்டல வாழ்க்கை காரணமாகவே
கருது செய்பொனி னமப லத்திலோர கடவுள் னிறு நடககுமே
காவி ரித்தரு நிதியி லேயொரு கருணை மாமுகில் துயிலுமே
தருவு யர்ந்திரு புதுவை யம்பதி தங்கு மன்னிய சேகரன
சங்க ரன்றரு சடைய னென்றொரு தரும தேவதை வாழவே".

இக்கவி கண்டிதேசததை யாண்ட பராராஜ சிஙகன் என்ற சிங்களவ ராஜன் தனது கண்டி நாட்டில் ஒரு காலத்தில் பஞசம் புகுந்து குடிகளை வருத்த அதை நிவாரதி செய்யுமபடி நமது சோணாட்டு வெண்ணை நல்லூர்ச்சடைய வள்ளலுக்கு எழுதியனுப்பின கவி யென்று ஊகிக்கப படுகிறதாகத் தாத்தா சொல்லுகிறார். இதைப பார்த்தவுடன் சடைய வள்ளல் ஆயிரங் கபபலில் நெல்லையேற்றி யனுபபிப பஞ்சந் தீர்தத விஷயம பின்வருங கவியால விளங்கும் என்பார்.

தேனு ரலகைத் பராராஜ சிஙகப் பெருமாள் செழுந்தமிழ்க்குக்
கானூர் நெல்லின் மலைகோடி கண்டி நாடு கனைசோக
கூனூர் கப்பலா யிரத்தில் கொடுபோ யளித்த கொடைததடககை
மானூ பரன்சங் கரன்சடை யனவளஞ் சேர்சோழ் மண்டலமே.

(தொடரும்.)

ஜிதேந்திரிய சுவாமி சீடன்.

ஸ்ரீ சிதம்பர மகிமை.

1. இவ்வுத்தம ஸ்தலத்துக்கு "கோயில்" என்று பேர். மற்றை க்ஷேத்திரங்களில் சுவாமி இருக்கும் இடத்துக்குக் கோயில் என்று வழங்குகினும் இந்த ஸ்தலத்துக்கே "கோயில்" என்பது சிறப்புப் பேர்.

2. எந்தத் தேவாரம் ஆரம்பிக்கும்போதும் "திருச்சிற்றம்பலம்" என்று பாரம்பரையாய் சொல்வது வழக்கம்.

3. தேவாரங்கள் எல்லாம் சேமித்து வைக்கப்பட்டதலம் "சிதம்பரமே".

4. சைவ சித்தாந்த சாஸ்திரம் 14-ல் "சிவப்பிரகாசம்" முதலியன 8-சாஸ்திரம் செய்யப்பட்ட தலமும் "சிதம்பரமே".

5. சிவாலயங்களுக்குப் பிரபாவம் கல்பித்த நாயன்மார்களின் பெருமை கூறும் பெரியபுராணத்துக்கு "உலகெலாம்" என்று அடியெடுத்துக் கொடுக்கப்பட்டது "சிதம்பரமே".

6. தாயுமானவர் பாடலில், "சிதம்பர ரகசியம்" என்று கூறப்பட்ட தலைப்பில் இப்பாட்டு உள்ளது :—

"சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு
சமயசங்கே தப்பொருளுந்தானென ஒருகப்
பன்மார்க்க நெறியினிலுங் கண்டதில்லை
பகர்வரிய தில்லைமன்றுட் பார்த்த போதங்
கென்மார்க்க மிருக்குதெல்லாம் வெளியே யென்ன
வெச்சமயத் தவர்களும்வந் திறைஞ்சா நிற்பர்
சன்மார்க்க நெஞ்சமுள வெனக்குந் தானே
கண்டவுட னனந்தங் காண்டலாகும்."

இப்பொழுதும் பலமதஸ்தர்களும் தரிசிப்பதுடன், எவர்க்கும் எல்லா க்ஷேத்திர தரிசனங்களைக் காட்டிலும், அதிக பக்தியைக் கொடுப்பது "சிதம்பரமே".

தில்லைவாழந்தணர் பெருமை.

1. "தில்லைவாழந்தணர் தம் அடியார்க்குமடியேன்" என்று திருத்தொண்டத் தொகையில் முதலில் துதிக்கப்பெற்றவர்

2. 3000-ல் ஒன்று குறையக்கண்ட பதஞ்சலி வியாக்ரபாதர் ஆதியோர் கவலையுற்றபோது, கோயில் புராணத்தில் "அம்மை யப்பனும் மாவான் நாம் அவர்களில் ஒருவா என்றான்" என்று கூறப்பெற்றவர்.

3. சித்தாந்த சாஸ்திரம் 8 செய்த "உமாபதி சிவாசாரியார்" நடராஜப் பெருமாள் கடாக்ஷத்தினால் பக்தர்களுக்கு மோக்ஷங் கொடுத்ததன்றி "சந்தானசாரியார்" நால்வரில் ஒருவராக நன்கு மதிக்கப்பெற்றவர், தில்லைவாழந்தணர்களில் ஒருவரே.

4. "நீலத்தார கரியமிடற்றார்" என்பது முதலாகத் திரு ஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் துதிக்கப்பெற்றீவர்.

5. பெரிய புராணம தில்லைவாழந்தணர் புராணம், "செம்மணிம யாறணிந்த சிந்தைத் தெய்வ வேதியர்களானார்—மும்மையாயிர வர்" என்று கூறப்பெற்றவர்.

6. திருவிளையாடற் புராணம், மண்சுமந்தபடலம் 97-ம் பாட்டு "புத்தர் சிலா இலங்கையிலும போநது மூவாயிர மெய்ப்போத வேத—வித்தகர்" என்று கூறப்பெற்றவர்.

7. திருவிசைப்பா "காடாடுபல்கணம" என்றதில் "மூவா யிரஞ் செழுஞ்சோதியந்தணர் செங்கை தொழுநகோடா என்னுங் குணக்குன்றே" என்று கூறப்பெற்றவர்.

8. ௸, "கானேவருமுன்" என்பதில் "திருவாளர் மூவா யிரவர் தெய்வக்கோனே" என்று கூறப்பெற்றவர்.

9. ௸, "சேவேந்து" என்பதில் "பூவேந்தி மூவாயிரவர் தொழப்புகழேந்துமன்று பொலியநின்றகோவே" என்று கூறப் பெற்றவர்.

10. ௸, "வேறாக வுள்ளத்து" என்பதில் "வேதவென்றி மாறாத மூவாயிரவரையும் எனையும் மகிழ்ந்தாளவல்லாய்" என்று கூறப்பெற்றவர்.

11. ஷை, "கடியார் கணம்புல்லர்" என்பதில் "முடியா முத்திவேள்வி மூவாயிரவரொடுங் குடிவாழ்க்கைகொண்டு" என்று கூறப்பெற்றவர்.

12. ஷை, "களையா உடலோடு" என்பதில் "மூவாயிரவரொடு மகிளயா விளையாடு மம்பலம்" என்று கூறப்பெற்றவர்.

13. ஷை, "ஓவா முத்தீயஞ்சுவேள்வி" என்பதில் மூவாயிரவர் தங்களோடு முன்னாங்கேறி நின்றகோவே" என்று கூறப் பெற்றவர்.

14. ஷை, "முத்தியாளர் நானமறையா மூவாயிரவர் நின் ஞேடொத்தேவாழுந தன்மையாளர்" என்று கூறபபெற்றவர்.

15. தில்லைவாழநதணர் புராணம், 8-ம் பாட்டு "மும்மை யாயிரவர் தாங்கள் போற்றிட" என்று கூறப்பெற்றவர்.

16. திருநாளைபபோவாா நாயனாபுராணம "திருவுடைய தில்லைவாழ்ந்தணர்கள்" என்பது, 34-ம பாட்டில காணலாம்.

17. திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம், 170-ம பாட்டு "அண்டத்திறைவா் அருளால அணிதில்லை—முண்டத்திரு நீற்று மூவாயிரவர்களும்" என்று கூறுகிறது.

18. "முட்டாத முச்சந்தி மூவாயிரவர்க்கு மூர்த்தி யென் னப்பட்டானை" என்பது சுந்தரமூர்த்தி தேவாரம்,

19. திருவாசகம் "எண்டியவடியவரோடும்—பொலிதரு" என்பது, கீர்த்தித்திருவகவலில் கூறப்பட்டிருக்கிறது.

20 திருவாசகம், கோயின் மூத்த திருப்பதிகம், "உகந்தானே" என்பதில் "மகந்தான் செய்து வழிவந்தார் வாழவாழ்ந்தாய்" என்பது காண்க.

தில்லை வாழந்தணர் சபைச்சிறப்பு.

திருநீலகண்ட நாயனர் புராணம "நல்லொழுக்கம் தலைநின்றார் நான்மறையின் துறைபோனார்—தில்லைவாழந்தணாகள் வநதிருந்த திருவவையில" என்று கூறப்பட்டது.

(தொடரும்)

சைவன்.

தற்கால வித்தையின் நிலைமை.

(119-ம பக்கத்தொடர்ச்சி.)

இங்கிலீஷ் வித்தை அப்பியஸித்தவர்களிடத்தில் காணப்படும் சில தோஷங்களிலிருந்து எல்லாரும இங்கிலீஷ் படிப்பை விட்டு விட்டு வேதம், சங்கீதம் இவைகளில் தேர்ச்சி யடைந்தால் போது மென்று நாம் சொல்லவில்லை. இக்காலத்தில பொதுப்படையாக வேத சாஸ்திரம் படித்தவர்களும், சங்கீத வித்வான்களும் ஷை வித்தைகளின் பெருமையையும் யோக்கியதையும் அறியாதவர்களாய் பூர்ண பரிசிறமத்துடனும, விதிபபடியும் ஷை வித்தைகளை அப்பிய ஸிக்காமல் தாரித்திரிய தோஷததினுல் பணம் சம்பாதிக்க வேண்டிய நிமித்தம் தங்கள் எல்லையைத் தாண்டி வைராக்கியத்தையும், பெருமையும் விட்டுவிட்டு, ஆசாரததையும் ஒடுக்கிக்கொண்டு, இங்கிலீஷ் படித்து சர்க்காரில் உத்தியோகம் பெற்று அதிகாரத்தினுலும, பணச்செருக்கினுலும் புஷ்டியாயிருப்பவர்களை அண்டினவர்களாய் அங்கேயும் தங்கள் எண்ணம் பூறுவும் நிறைவேறுமல் கடைசியாய் இரண்டும் கெட்ட பிழைப்பில் காலங்கழிக்கிறுர்கள். வேதம் கறறவர்களை பார்க்கும்போது பெரும்பான்மையோர் தங்கள் சாகையையோ அல்லது அதில் சில பாகத்தையோ கேவலம் மனப்பாடம்செய்து அதின் அர்த்தத்தையாவது, தாத்பர்யத்தையாவது அறிந்துகொளளாததோடுங்கூட இதர சாஸ்திரங்களில் பரிசயமாவது சாமானியவியுத்பத்தி, ஞானமாவது இல்லாமல் வேதத்துக்கு அர்த்தமே கிடையாதென்றும் அர்த்தம் தெரிந்துகொள்ளக் கூடாதென்றும் சமாதானமும் சொல்லிக்கொண்டு உபாததியாயம், ஸிரௌதம் முதலிய விருத்திகளில் அமர்நது தங்கள் அக்ஞானதைப் பிறருக்கும் ஊட்டி அவர்களால் அநத பாமபரையான காலட்சேபம நடத்தப்பட்டு வருகிறது. அவர்களின் ஸிஷ்டாசாரமும் பெருமபான்மை விருததமாயும் தேசகாலபாத்திரங்களுக்கு உசிதமாயும் அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது. சங்கீத விததையின் ஆசாரணையைப்பாாத்தால் இன்னும் அதிகம் வியக்கத்தக்கதாயிருக்கிறது. குரு பாம்பரையில் யதோக்த விதிப்படி ஷை வித்தையைக்

கற்றுக்கொண்டு ஸ்தலத்துக்கு வருவோர் வெகு துர்லபமாக காணப்படுகிறார்கள். சாஸ்திரத்தின் அடியும், நுனியும் இன்னவிதமென்றே தெரியாமல் கேழ்வை ஞானம் என்ற புகழ்ச்சியைக் கொண்டு வெளிக்கிளம்புவோர் பலர். இவர்களின் சங்கீத சாஸ்திர முறையும் இவர்களின் ஆசாரமும் சொல்லவே வேண்டியதில்லை. பொதுவாய் ஹிந்து மதத்தில் எல்லா சாஸ்திரங்களும் ஐஹிக இச்சையைக்கருதாமல் ஈச்வர ஸ்துதியாகவும் ஈச்வரார்ப்பணமாகவும் செய்யப்பட்டிருப்பதால் அவைகள் எந்தகாலத்துக்கும், தேசத்துக்கும் யோக்கியமாகவும் அழிவே இல்லாததாயுமிருந்து வருகின்றன. ஷை பகவ தர்ப்பணத்தினாலும், சுத்தமான ஆசாரத்தினாலும் தியாகய்யர், மகா வைத்தியநாதய்யர் முதலிய சமீபகாலத்திலிருந்த பெரியோர்களும் களங்கமற்ற சாச்வதயசஸோடு கூடினவர்களாய் எங்கும் புகழப்பட்டு வருகிறார்கள். இப்போதுள்ள வித்வான்களில் அம்மாதிரியுற்றவர்கள் அகப்படுவது மிகவும் சந்தேகம். திரிகரண சுத்தமில்லாவிடினும் அல்பமான ஒரு கரண சுத்தம் காண்பதே அரிது அந்த சுத்தமே யில்லாமல் ஆடையாபரணங்களினால பாஹ்ய சுத்தியைக் காண்பித்துக்கொண்டு ஈச்வர பக்தியை முன்னிட்ட பல உபதேசங்களும் செய்கிறார்கள். ச்ரோதாக்களான ஸதஸ்யர்களும் பெரும்பாலும் ஷை வித்தையின் கோடியே தெரியாமல் எல்லாம் செவ்வையாயறிந்தவர்களைப்போல் நடித்து அதினால் தங்கள் சுத்த அக்ஞானத்தை உபதேசகருக்கும் காண்பித்து அவருடைய பரிசிரமத்தையும் பயத்தையும் நன்றாய் நீக்கி விடுகிறார்கள். சரியான பயிற்சியில்லாததாலும் ஆசாரமின்மையினாலும் தன் வித்தையிலும் கௌரவத்திலும் நம்பிக்கையற்று ஈச்வர பக்தியாவது, வைராக்கியபுத்தியாவது இல்லாமல் தனிகர்களை அண்டி அவர்கள் தோஷங்களுக்கு உடன்பட்டு கோபாதிகளை எல்லாம் பொறுத்துக்கொண்டு தங்கள் மனசசாட்சிக்கும் கௌரவத்துக்கும் விருத்தமாயிருந்தாலும் அவர்களிஷ்டப்படிக் கெல்லாம் நடந்து கடைசியில் தங்கள் மனோரதமும் பூரா நிறைவேறாமல் சங்கடப்படுகிறார்கள்.

ஆகையால் பொதுவாய் இக்காலத்தில் எந்த வித்தையிலும் பரிசிரமம் எடுக்கிறது குறைவாகவே யிருக்கிறது. தனம்மட்டுமே

மனிதனுக்கு சுகத்தைக்கொடுக்கிறது என்ற நம்பிக்கை உதிக்கிறபோது பணமிருக்கிறவர்களுக்கு வித்தையில் ஒரு அலட்சியமும் பணமில்லாதவர்களுக்கு அதை எவ்விதமாகவாவது சம்பாதிக்கவேண்டுமென்ற ஆதுரத்தினால் ஒரு அபிமானத்தையும் ஏற்படுகிறது. தாரித்திரியத்துக்கு எந்தகாலத்திலும் ஒரு லோபமிருந்து வந்தாலும் பணத்துக்கு இந்தகாலத்திலுள்ள செலவாக்கும், கௌரவமும எந்தக்காலத்திலாவது இருந்ததாகத தெரியவில்லை. வித்தையினிடத்திலும் வித்தையுள்ளவர்களிடத்திலும் அபிமானமில்லாததோடுகூட ஒரு அலட்சியமும் திரஸ்காரமும் ஏற்பட்டிருப்பது இக்கால தனிகர்களுடைய முக்கிய சக்தி. வித்தை கற்றவர்களும் பணம் சமபாதித்தபிறகு வித்தைக்குள்ள குணத்தை மறந்துவிட்டு தனிகாகளுடைய குணத்தை மட்டும் ஆச்ரயித்தவர்களாக ஆகிறார்கள். வித்தைக்கும் தாரித்திரியத்துக்கும் எந்தககாலத்திலும், எநத தேசத்திலும கொஞ்சம நேசமிருநது வருவதாகவே தெரிகிறது இருந்தாலும் முன்காலத்தில ஸ்வல்பம் வைராக்கியபுத்தியை ஆச்ரயித்துக்கொண்டு பணப்பெருமையை வித்தையின் கௌரவத்துக்கு மேலாக்கிககொள்ளாமல் வித்வான்கள் தஙகள் ஏழைத்தன்மைக்கு ஒரு மதிப்பைககொடுத்துக்கொண்டு வந்ததாயும் தெரிகிறது. இப்போது ஒன்றுக்கொன்று ஸ்தானம் மாறினதோடுகூட வித்தை பூர்ணமாக கற்றுக்கொள்ளவேண்டுமென்ற ஆசையே அழிந்து போகக கூடியஸ்திதியிலிருக்கிறது.

இனி யோஜனையை வெகுதூரம் விடாமல் பிரகிருதமான விஷயத்தில் நமக்குத தோன்றும் சில முககிய சீர்திருத்தங்களைச் சொல்லி இந்த வியாசத்தை ஒருவாறு முடிப்போம். தற்கால நாகரீகத்தையும் ராஜாங்கததையும் உத்தேசித்து இங்கிலீஷ் பாஷை எல்லோருக்கும் தெரியவேண்டியது அவசியந்தான. பாஷா ஞானம் செவ்வையாய் அறியும்வரை அதில் பரிசிரமம் எடுத்துக் கொண்டால் போதுமானது. ஷை பாஷாஞானம் வருவதற்கு தகுந்த குருவிடம் இரண்டு வருஷத்திய அப்பியாஸம் போதுமென்று சொல்லலாம். இபபோதுளள மாதிரியான அழகான கட்டங்களுள்ளதும் ஆயிரககணக்கான மாணாக்காகள் கூடினது மான காலேஜ்களிலும், பள்ளிக்கூடங்களிலும் எவ்வளவு வரு

ஷம வாசித்தாலும சாம்பலில் செய்த ஆஹுதிக்கு சமானம் தான. வித்தை சொல்லிக்கொடுக்கும் குரு அதிதீக்ஷ்ணிய புத்தியுடையு வனாயும் உததம குணங்களையுடையவனாகவு மிருக்கவேண்டும். ஒவ்வொரு குருவுககும் கீழ் 10-சிஷ்ர்களுக்கு மேல் அதிகமிருக்கப படாது. குரு, சிஷனுடைய வித்தையை எப்படி விருத்திசெய்ய வேண்டியதோ அப்படியே அவனுடைய குணாதிசயஙகளையும் மலாசசெய்யவேண்டும். வித்தியாபயியாசகாலத்தில் வித்தையில் தவிர இதர விஷயங்களில் பிறவிருத்தியாவது, கவலையாவது, யாருககும் இருக்கவே கூடாது. நமது தேசததுக்கு வேறு பொது பாஷை விருத்தியாகும் வரை இங்கிலீஷை நாம அநதஸ்தானத்தில் ஆதரிககவேண்டியது அவசியமாகவே ஏற்படுகிறது. கேவலம இநத பாஷை தெரிகிறவர்களுக்கு வேடி பாஷை தெரியாத பலர் களிடத்தில் அநீதியும் அகண்ணியமாயுமுள்ள விருத்திக்கும ஜீவனோபாயத்துக்கும் ஆதாரம் ஏற்படுகிறது. அடுததபடி இந்தியாவுக்கு தாய்பாஷையாயுள்ள ஸமஸ்கிருதம் எலலாருக்கும் தெரியவேண்டியது அவசியம். இது நன்றாய்த் தெரியும் பட்சத்தில் இந்தியாவில் வழங்கிவரும் பற்பல பாஷைகளையும அவைகளின உட்கருத்தும் முக்கிய கிரந்தஙகளும் அறியவிருப்பமுடைவர்களுக்கு கற்றுக் கொள்வது மிக எளிதாகும். அதற்கடுததபடி அவரவர்கள் பேசும் பாஷையில் முககியப்பயிற்சி எடுத்துக்கொள்ள வேண்டியது அதிக அவசியம எந்த பாஷையிலும அல்லது எநத வித்தையிலும அரை குறையாய் நுனிப்புல் மேய்வதுபோல் இரண்டொரு கிரந்தங்களைபபடித்து விட்டு எலலாந்தெரிந்ததாக பாவித்துவிடுவது சகஜமாயிருநதாலும் மிகவும பிரயோஜனமற்றதும் அபாயகரமுமான காரியம். எந்த பாஷையிலும, எநத வித்தையிலும் எல்லாராலும் ஒபபுக்கொள்ளபபடும சிலாக்கியமாயுள்ள கிரநதங்கள் சிலதுண்டு. அவைகள் எல்லாராலும மனப்பாடமாய் கற்கப்படவேண்டும். பிறகு அந்த வித்தையிலுள்ள பூர்வோததாங்களின் கோடிகள் நன்றாய் அறியப்படவேண்டும. இதறகுமேற்பட்டுத தான் வித்தியார்த்திக்கு எதில் விசேஷ ருசியிருக்கிறதோ அதில் சொநதத்திலே அபூர்வ முயற்சிகள் எடுக்க அபிலாஷையும் யோக்கியதையு முண்டாகி நூதன கிரநதங்கள் கவனம பண்ணுவதற்கு வேண்டிய சக்திக்கும்

வழி காட்டவேண்டும். ஒரு வித்தையில் விசேஷருசி கடைசியில் ஏற்படவேண்டுமேயல்லாது ஆரம்ப முதல் அதிலேயே பிறவிர்த்திக் கும்படி செய்வது அவ்வளவு சிலாக்கியமில்லை. வித்வானுக்கு சகல கலைகளிலும் கோடி தெரிந்திருக்க வேண்டும். சங்கீத சாஸ்திரத்தின் முக்கிய அம்சங்கள் எல்லாரும் தெரிந்துகொள்ளவேண்டியது அவ சியம். ஜீவனுக்கு சாந்தியையும் நிஷ்களங்கமான ஆநந்தத்தை யும் கொடுக்கக் கூடியதுகளில சாஸ்திர சம்மதமான சங்கீத அப் பியாஸம் முக்கியமானது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக காப் பாற்றப்படவேண்டியது ஆஸ்திக்கியபுத்தி, ஸ்வமதக்கொள்கை யில் அபிமானம், நாநடக்கை, நல்ல ஆசாரம், ஜீவகாருண்ணி யம் முதலிய உத்தமமான குணங்கள். இங்கிலீஷ் வித்தை துடங் கினது முதல் விருத்தியாகிவரும லாகிறிவஸ்து உபயோகங்கள் மத்தியபானுதிகள அகால அமத போஜனுதிகள் நித்தியதருமாக் களை விட்டுவிடுதல் ஆகிய இவைகள் எவ்விதத்திலும தீங்கைததரத் தக்கவைகள் என்று நன்கு தெரிநதிருந்தாலும அவைகளினின்றும் நிவர்த்தியை காண்பது அரிதாகவே யிருக்கிறது. மனிதனுக்கு சுகத்தை நாடவேண்டியதும துக்கத்தை நீக்கவேண்டியதும் சுபாவ மாயும் சாஸ்திர சம்மதமாயு மிருந்தாலும் சுகம் துக்கம் இதுகளின் உண்மையை அறியாமல் வைராக்கிய புத்தியை நிந்திப்பவனுய் தன் மனம் போனவழியில நடந்தும திருப்தியடையாமல் தபிக்கிறுன். மேற் சொல்லிய சீர்திருததங்களின் ஒவ்வொரு அம்சத்தையும் பற்றி பின்னுல் விரிவாய் எழுதி வித்தையின் நோக்கம் பணத்தை யும் அதிகாரத்தையும் மட்டுமே அண்டினதாயிராமல் பிறரைப்பழிக் கிற ஆசாரத்தை விட்டு ஈச்வரன தர்மம், நல்லொழுக்கம் இவை களை நாடும்படி செய்து ஒருவருக்கும் தீங்குக்கு இடமிலலாமல தனக்கும் மற்ற எல்லா ஜனங்களின் க்ஷேமத்துக்கும் விருத்திக் கும் உபயோகமுள்ளதாக பண்ணப்பட வேண்டு மென்பதை மட் டும் பொதுவாய் இப்போது சொல்லி இதை முடிக்கிறோம்.

(தொடரும்)

வி. பாலசுப்பிரமணிய சாஸ்திரியள்,
எம். ஏ. எம். எல.

அரசியின் அந்தரங்கம்

அல்லது

மர்மக்கள்ளர்கள்.

(104-ம் பக்கத்தொடர்ச்சி).

இரண்டாவது அத்தியாயம்.

சுநதர சிங்கம் பிரபுவிற்கு சுமார் முப்பத்திரண்டு வயதிருக்கும். அவர் நல்ல பலாட்டியரும், வீரதீரமும், வாட்போரில் கை தேர்ந்தவருமான ஒரு வீரர். மற்றவரான அவரது சகோதரர் வர்த்தகசிங்கர் முப்பது வயதுள்ளவர். அவர் தனது சகோதரரைப் போலவே திடதேகமும், தைரியமும், துணிகரமும் பொருந்தியவர் இவ்விருவரும் சொல்பதூரம் சென்றதும் சிறிது தூரத்தில் சிறு வெளிச்சமொன்று இவர்கள் கண்களுக்குப புலப்பட்டது. இருவரும் துரிதமாகவே அவ்விடததை நோக்கி நடந்தார்கள். சுந்தர சிங்கம் பிரபு, "இதோ குதிரைலாயம" என்று கையைச்சுட்டி தீபம் தெரிந்த இடத்தை நோக்கிக் காட்டினார். அங்கு அவர்கள் அடைந்ததும் மூத்த பிரபுவாகிய சுந்திர சிங்கம் பிரபு அங்கு தொங்கவிடப் பட்டிருந்த கயிறறை இழுத்தார. இரண்டு நிமிடங்கழிந்து ஒரு மனிதன் கதவின் துவாரத்தின் வழியாக இவர்களை நோக்கி என்னவேண்டுமென்றான.

மூத்த பிரபு :—"இரண்டு குதிரைகளகப்படுமோ?" என்று கேட்டார்.

சொந்தக்காரன் :—"குதிரைகளா.........எததனை?"

பிரபு :—"இரண்டு. எனக்கும், இதோ நிற்கும் எனது நண்பருக்கும்".

சொந்த :—"ஐயா, எனனிடம் தற்சமயம் குதிரைகளில்லை. தங்களை நோக்கினால பிரபுக்கள்........." என்றதே.

பிரபு :— "ஆம். நாங்களிருவரும பிரபுக்கள் தான்".

சொந்த :—"பிரபுககளே. இபபொழுதுதான் இராணியின் வீரர்கள குதிரைகளை வாங்கிச்செல்கிறார்கள். இன்னும் ஒரேயொரு குதிரை என்னிடம் மிச்சமிருக்கிறது" என்றான்,

பிரபு:—"ஒரு குதிரைதானா இருக்கிறது.........." என்று தன் சகோதரரை நோக்கினர். அவரும் இவரை நோக்கித் தலையை யசைத்தார். பிரபுவும் அதைத்தங்களுக்குக் கொடுக்கும் படிகேட்க, லாயக்காரன் உள்ளே செல்லத்திரும்பினன். அப்பொழுது மூத்த பிரபு அவரைக் கூப்பிட்டு, "ஐயா, இன்னென்று, தங்களிடம் யுத்தத்திற்கு வேண்டிய ஆயுதங்களிருக்கின்றனவா?" என்று கேட்டார். அதற்கவன் "இருக்கிறது. உங்களிருவருக்கும் வேண்டிய ஆயுதங்கள் தருகின்றேன்" என்று உள்ளே சென்றான்.

சென்றவன் பத்து நிமிடநேரத்தில் ஒரு உயர்ந்த புரவியுடன், இரண்டு கேடையம், இரண்டு ஈட்டிகள், ஒரு ஜதை வாட்களுடன் திரும்பி வந்தான். பிரபுக்கள் அவனுக்கு நல்ல பரிசளித்தவுடன் இருவரும் ஆயுதங்களுடன் ஒரே குதிரைமேலேறிக்கொண்டு இரத்னபுரியை நோக்கிச் சென்றார்கள்.

நேயர்கள் ஒரு விஷயம் இங்கு கவனிக்கவேண்டும். அதாவது அக்காலத்தில் மதககட்சியொன்று ஏற்பட்டிருந்தது. அதாவது பழைய மதத்தைவிட, அதில் புதிய சீர் திருத்தங்கள் சேர்க்கப்பட்டிருந்ததால், அந்த மதத்தை அக்காலத்திலுள்ள சபையார் ஏற்றுக்கொண்டார்கள். அக்காலத்தில் மகா சபையார் சொற்படி யாவும நடந்தபடியால் புதுமதமே யெங்கும் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனல் புதிய மதத்தைத் தழுவாதவர்கள் துரத்திப் பிடிக்கப்பட்டு சதியாலோசனைக்காரரென தூக்கிலிடப்பட்டார்கள். மற்றும் அக்காலத்தில் வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் ஜாஸ்தியாக இருந்தார்கள். சாலைகளில் இரவு செல்வது மிக்க அபாயமே. நமது பிரபுக்களிருவரும் சிறையிலிருந்து தப்பினவர்களாதலால் அவர்கள் தங்கள் பெயர்களை மாற்றிக்கொண்டார்கள். சுகுதா சிங்கம் பிரபு குண சிங்கம் பிரபுவென்றும், வர்ததசிங்கம் பிரபு, இரத்ன சிங்கம் பிரபு வென்றும் வைத்துக்கொண்டார்கள். இவர்கள் மிக்க ஜாக்ரதையுடன், ஆயுதபாணிகளாகச் சென்றார்கள்.

அக்காலத்தில் அரசியினுடைய புதிய சட்டங்களுக்கொவ்வாத சில பிரபுக்கள் இரகசியமாக பழைய சட்டங்களை யனுசரித்துக்கொண்டும், அரசியை அந்தரங்கததில் வெறுத்தும், அவளைக்

கொன்றேவிடுவதற்கான ஏற்பாடுகளை செய்துகொண்டிருந்தார்கள். இம்மாதிரியான ராஜத்ரோகிகளை கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்கு அரசி நல்ல பரிசளிப்பதாக விளம்பரம் செய்திருந்தாள். அக்காலத்தில் ஒருவரையொருவர் வெறுத்திருந்ததால் ஒவ்வொருவரையும் வீண் குற்றத்திற்காளாக்கி இராணியிடம் சதிக்காரரென ஒப்புவித்துவிடுவார்கள். அம்மாதிரி நடந்துவந்தவர்களில் வர்த்தக சிங்கரும் ஒருவர்.

பிரபுக்களிருவரும் குதிரையின் பேரில் செல்லுகையில் வானம் இருண்டு புயலடிக்கும்போலிருந்தது. அப்பொழுது அவர்களுக்குப் பின்னால் குதிரைகளின் காலடிச்சப்தங் கேட்டது. இருவரும் திரும்பி நோக்கினார்கள். ஒருவன் முதலில் வெகு வேகமாய் குதிரையின் பேரில் வருவதையும், அவன் பின் மூவர் வருவதையும் கண்டார்கள். முன்னால் வருபவனை பின்னால் வரும் மூன்று கள்ளர்களும் துரத்திவருகிறார்கள் என்று அறிந்து நின்றார்கள். முன் வருபவன் பிரபுக்களை அணுகியதும், "ஐயா......... ஐயா.......காப்பாற்றும். ....கொள்......கொள்ளைக்காரர்கள்," என அவர்கள் பின்னால் நடுங்கி நின்றான். பிரபுக்கள் தங்கள் வாட்களை யுருவிக்கொண்டு, அவனுக்குத் தைரியம் கூறி, திருடர்கள் அருகில் வந்ததும் திடீரென எதிர்த்தார்கள்.

எதிரிகள் மூவரும் பலசாலிகளாகவே இருந்தார்கள். பிரபுக்களிருவரும வாட்போரில கைதேர்ந்தவர்களாதலால் அவர்களுடன் தைரியமாய் எதிர்த்து நின்று தாக்கினார்கள். இருவரும் ஒரு குதிரையிலிருந்து சண்டை செய்ய முடியவில்லையாதலால இரத்ன சிங்கம பிரபு தட்டெனக் கீழே குதித்து எதிரி ஒருவனை அடித்துக் கீழே வீழ்த்தி அவன் பரிவைபக்கைப்பற்றிக்கொண்டு, மற்றவர்களோடு சண்டை செய்தார். கீழே விழுந்தவன் இரண்டு நிமிடத்தில் சமாளித்துக்கொண்டு எழுந்து யுத்தஞ்செய்ய முயன்றான். ஆனால பிரபுக்களை யண்டிய மனிதன் அவன் மார்பில் தனது வாளால் குத்திவிட்டான். அக்கள்வன் தட்சணமே உயிர் விட்டான். மற்ற இருவர்களில் ஒருவனுக்கு பலத்தகாயம் படவே, அவன் திடீரென திரும்பி ஓடிவிட்டான். மற்றவனும் ஓடமுயலவே

அவன் குணசிங்கம் பிரபுவால்முதுகிற்குத்தப்பட்டு, எமனுலகை யடைந்தான்.

பிரபுக்களிருவரும் வெவ்வேறு குதிரைகளிலேறிக்கொண்டு வந்த மனிதனுக்கு வந்தனம செய்தார்கள். அதற்கு அம்மனிதன் "பிரபுக்களே, தாங்கள் இன்று எனக்கு செய்த உதவிக்கு நான் எனது அன்பான வநதனத்தைச் செலுத்துகின்றேன். தாங்க ளிருவரும் எஙகு செல்கிறீர்கள்" என்று வினவ,

பிரபுக்கள் :—"இரத்னபுரிக்குச செல்கிறோம்."

அம்மனிதன் :—"தங்களது நாமதேயம........"

மூத்த பிரபு :—"எனது பெயர் குணசிங்.........இவர் பெயர் இரத்ன சிங்கம் பிரபு. இவர் எனக்கு சகோதரர் முறைவேண்டும் தங்கள் பெயர்யாது?"

அம்ம :—"எனது பெயர் பெரியநாயகம்".

பிரபுக்களிருவரும், "ஆ! பெரியநாயகமூ? ஜெகன்னுதம் பிரபுவின் அநதரங்க ஆள்" என்று ஆச்சரியத்துடன் கேட்டார்கள்.

அம்ம :—"ஆம்; பிரபுகூட சதிக்கூட்டத்திற சேர்ந்தவரென இராணியார் அவாகளை...........".

பிரபு :—"என்ன, பிரபு விடுதலடையவில்லையா?"

பெரிய :—"ஆம், மன்னிப்பு பெற்றார். அவர் இப்பொழுது பெரியாண்டியிடம் சிக்கி கிடககில சிறையாளியாக இருக்கிருர்" என்று முகம்மாறி கூறினன்.

பிரபு :—"அப்படியா! ஆனல் நாம் அவரை மீட்கவேண்டும். இல்லாவிடில் ஈமது குலத்திற்கே (ஹாநி) வந்துவிடும்".

பெரியநாயகம் :—"பிரபுக்களே. நானும் உங்களுடன் வரு கின்றேன், நான் உங்களுக்கு என்னுலாகிய உதவியைச் செய்கி றேன்" என்று சொல்ல மூவருமை இரத்னபுரி சாலைவழிச் சென்று, முக்காமைல் தூரததில திருமபும் நகரவழியாகச் சென்றுர்கள். அப்பொழுது மூத்த பிரபு. அவனுடன், "பெரியநாயகம்" "பிரபு வினது தஙகை மகள் ஜானகிக்கு இப்பொழுது என்ன வயதிருககும்" என்று கேட்டார.

பெரியநாயகம் :—" ஆம் இருபத்தி மூன்றாகிறது. நல்ல யௌவன பருவம். தாங்கள் பத்து வயதில் கண்டது தானே ?" என்றான்.

பிரபு :—" ஆம். நடுவில் இரண்டு, மூன்றுதரம் கனகாலயத்தில் சந்தித்திருக்கிறேன்".

பெரியநாயகம்: "அவளது தந்தையின் சரித்திரம் தாங்களறிவீரோ?".

பிரபு:—"ஆம்; அவரை யறிவேன். அவர் பெயர் கனகசிங்கம பிரபு!":

பெரிய:—"ஆம், அவர்தான். அவருக்குக்கூட ஒரு சகோதரி," என்றதே.

இளைய பிரபு:—"கனகாங்கி என்றவள் தானே........." என்றார். அவர் ஹிருதயத்தில காதற் குடிகொண்டது. உளம் சந்தோஷ மடைந்தது.

பெரிய:—"ஆம். அவளுக்கு இருபது வயதிருக்கலாம்........ தாங்களிருவரும் அவ்விரு பெண்களையும்........."என்றதே பிரபுக்கள் வெட்கத்தால் தலைகுனிந்துக்கொண்டார்கள். அப்பொழுது பெரியநாயகம், "பிரபுக்களே மன்னிக்க வேண்டும்........" என்றான் பிரபுக்கள், "இதில மன்னிப்பதற் கென்ன குற்ற முளது. உள்ளதைத்தான் சொன்னாய்," என்றார்கள்

பெரியநாயகம்:—"இராணியவர்கள் ஒரு சமயம் அவரது மாளிகைக் கேகினார். அப்பொழுது கொடுமழை பெய்ததால், இராணியவர்கள் ரதத்திலிருந்து கீழிறங்கும்பொழுது பிரபு, ராணியவர்களின் ராஜவிசுவாசத்தைப் பெறுவதற்காக தன் து மேல் பட்டு சால்வையை மழைககாக கீழே போட்டாரென்பது உங்களுக்குத் தெரியும். "அப்பொழுது இராணியவர்கள், அவரது இராஜ விசுவாசத்தை மெச்சி அவருக்கு ஸர்தாரபட்ட மளித்தார். அவர் இராணி போனபிறகு, ஜனங்கள், எக்காரணத்தாலோ அவர் இராணியின் கோபத்திற் குள்ளானா ரெனவும் அதனால் அவர் சிறையில் வைக்கப்பட்டா ரெனவும் சொல்லுகிறார்கள். அது உங்களுக்குத் தெரியும்."

பிரபுக்கள்:—"ஆம்; தெரியும்; அவர் கோட்டைச் சிறையிலிருக்கிறார்."

பெரியநாயகம்:—"ஆம; இருந்தார், இப்பொழுது அவர் இரத்னபுரி நகரச்சாலையில் செல்கிறார்." என்றதே, பிரபுக்கள் அப்படியே பிரமித்து நின்றார்கள். அப்படியே அவர்கள் அவர்காலில் வீழ்ந்தார்கள் "பிரபுவே, மன்னிக்கவேண்டும்" என்றார்கள். பிற்பாடு பிரபுக்களை நோக்கி, "நண்பர்களே! அந்தக் கள்ளர்கள் என்னைத் தூரத்தின பொழுது, அவர்களை நான் ஒண்டியே கொன்று விடுவேன். ஆனால் நீங்கள் சென்றதைக் கண்டதும் நான உங்களை யறிந்தேன். என்னைத் தேடிக்கொண்டு இராணியின் வீரர்கள் பின் தொடருகிறார்களாதலால் உங்களுக்கு எச்சரிக்கை செய்ய வந்தேன் நீங்கள் சிறையிலிருந்து தப்பினீர்க ளென்று நான் ஹோட்டல் வேலையாள் கோவிந்தன் மூலமாக அறிந்தேன்" என்றார்.

குண:—"பிரபுவே, அப்படியானால் தாங்கள் எதுவரை வருகின்றீர்கள்?"

கனகசிங்:—"ஏன் நமது மாளிகை இன்னும இரண்டு மைல் தூரத்தில் தானிருக்கிறது. நாம் மூவரும் அங்குபோய் விடுவோம் மற்றொன்று; மாளிகையில நீங்கள் சென்று பெரியநாயகம் என்று சொன்னால்த்தான் நான் வந்திருப்பதாக அவர்களறிவார்கள், வேறு ஏதேனும் எனது பெயரைக் கூறினால் அவர்கள் நம்பமாட்டார்கள்" என்றார்.

இரத்ன:—"தங்கள் மாமன் பெரியாண்டியிடம் சிக்கியிருப்பதைத் தாங்களறிவீரோ?" என்று கேட்டார்.

கனக:—"நான் அறிவேன், அதற்கான முயற்சிகளையும செய்து கொண்டிருக்கிறேன். எல்லாம் மாளிகையில் போய் பார்த்துக் கொள்வோம்."

இரத்ன:—"அது என்ன........,அது என்ன........? என்று பிரபு கையிலுள்ள ஒரு சாமானைச் சுட்டிக் காட்டினார்.

கனக:—"இதுவா. களவாடப்பட்ட கணையாழி. இஃது இல்லாவிடில் நான் நிச்சயம உயிர் துறந்திருப்பேன். ஆ! அந்தக்

கருணையுள்ள மிதனும்பாளுக்கு எனது வந்தனத்தைச் செலுத்த வேண்டுவதவசியம்" என்றார்.

இதற்குள் மூவரும பிரபுவின் மாளிகையை அடைந்து விட்டார்கள். இவர்கள் இபபொழுது மாளிகையின் கொல்லைப் புறத்திலிறங்கினார்கள். தோட்டத்தின் இருப்புக்கதவு திறக்கப்பட்டிருநதது. மூவரும திடீரென உள்நுழைந்து கதவைப் பூட்டிக்கொண்டு நடந்தார்கள். அங்கு நின்ற வேலைக்காரி கனகசிங்கம் பிரபுவையும் சகோதரர்களையும் கண்டதே அவளை முதலில் கள்ளரென நினைத்து விட்டாள் பிறகு பிரபுவென்றறிந்ததும், "எஜமானே!" என்று காலில்வந்து விழுந்தாள். பிரபு அவளை வேலைகளைப் பார்க்கும்படி சொல்லிவிட்டு சகோதரர்களுடன் கூடத்தை நோக்கி நடந்தார் அங்கு எதிரேவநத ஜானகியும், கனகாங்கியும் "அண்ணா" வென்று பிரபுவைக் கட்டிக்கொண்டார்கள். ஆனால் மறுநிமிடம் சகோதரர்களைக் கண்டதே வெட்கி நின்றார்கள். பிரபு நேரே கூடத்திற்குட் சென்றார். மறுநிமிடம், தாயைப் பிரிந்த சேயைப்போலும் நீரைப் பிரிந்த பாலைப்போலும், கன்றை யிழந்தை பசுவைப்போலும் தங்கள் காதலர்களைக் கண்டதே ஜானகி குணசிங்கம் பிரபுவையும், கனகாங்கி இரத்ன சிங்கம் பிரபுவையும் கட்டிக்கொண் டாலிங்கனம் செய்து கொண்டார்கள். அரை நிமிடத்தில் நால்வரும் தோட்டத்திற்குள் சென்றார்கள். சகோதரர்கள் தங்கள் காதலியை முத்தியளித்துக் கொண்டே அவ்வானநதத்தில் மூழ்கி பாவசமாகிப் பிரிந்து உலாவசசென்றார்கள். இவர்களிமமாதிரி சுமார் அரைமணி நேரம்பேசி, முத்தி யளித்த வானந்தத்திற் மூழ்கி, (அநதோ: உலகில் இவ்வானநதமும் ஒரு நிலையோ) நால்வரும பழைய இடத்தில் கூடுகையில், கலவரமான முகத்தோடு இவர்களிடம் தாதி ஓடிவந்தாள். அதைக்கண்ட இரண்டு பெண்களும் என்னவென்று கேட்கவே

தாதி:—"இராணியின் வீரர்கள் நமது பிரபுவைத்தேடிக் கொண்டு வந்திருக்கிறார்கள். பிரபு சகோதரர்களை அழைத்து வரும்படி கூறினார்," எனறாள

சகோதரர்கள் :—"ஆம்' மோசம்! பிரபு எங்கிருக்கிறாரோ அங்கு செல்வோம்" என தங்கள் காதலிகளுக்கு முத்தியளித்து

விட்டு, தாதி பின்னால் சென்றார்கள். தாதி அவர்களை கொல்லைத தாழ்வாரத்தின் வழியாக தோட்டத்தை யடைந்து அங்கு ஒரு சிறு கதவின் வழியாக ஒரு அறைகருள் கூட்டிச் சென்றாள். அங்கு ஸர்தார் கனகசிங்கர் சகோதரர்களின் வரவுக்காக காத்துக்கொண் டிருந்தார். அவர்கள் வந்ததும், "ஏ! பிரபுக்களே, நான் எச் சரிக்கை செய்தது உண்மை யாயிற்று" என்றார்.

பிரபுக்கள்:—"சர்தார்! தாஙகள் எஙகளுக்கு எச்சரிக்கை செய்தது நல்லதாயிற்று. தாஙகள உயிர் போவதாயின சொல் லுங்கள். உடனே இராணியின் வீரர்களுடன் சண்டை செய்து இரண்டு நிமிடத்தில் அவர்களை முடிவுக்கு கொண்டுவந்து விடு கிறோம்" என்று கோபமாய்க் கூறினார்கள்.

ஸர்தார்:—"ஆ! சகோதரர்களே. தங்களுடையை அன்பிற் காக நான் எனது நன்றியைச் செலுத்துகின்றேன். அதுவேண்டாம. நாம் நமது கட்டடத்தில் அவர்கள் திரும்பும்" வரையில் மறைந திருப்போம் ஆ! அவர்கள் கூடத்தை சோதிக்கிறார்கள். நீங்கள என்னுடன் வாருங்கள்" என்று அவ்வறையின் வழியாக சென்ற ஒரு மரச்சுவர் பாதைவழியாக கூட்டிப்போனார்.

நண்பர்களே! கனகாலயம் ஒரு பெரிய இரண்டடுக்கு மெத் தைகளுடன் கூடிய கட்டிடம். அந்த பழையகட்டிட மாதலால் அதில் கள்ள அறைகளும், வழிகளும் ஏராளமாக உள்ளன. சுவர்க ளெல்லாம் மாப்பலகைகளாலும், மதிலசுவா கருங்கற்களாலும் கட் டப்பட்டிருந்தன. சர்தார், பிரபுக்களை அம்மாதிரியான ஒரு கள்ள அறைக்கே அழைத்துச் சென்றார். அமமாதிரி யறைகள பிரபு விற்குமட்டும தெரியும். மற்றவாகளுககு அதிகமாகத தெரியாது.

(தொடரும்.)

ச. ப.

நீதி வெண்பா.

இஃது காப்புச் செய்யுளுடன் நூற்றொரு செய்யுட்களைக் கொண்டது. இதன் பாட்டுகள் முழுதும் "புலவர்க்கு வெண்பா புலி" யாக மிகச் சிறந்துள்ளன. இதிற் சில பாட்டுகள் வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. வடமொழி சுலோகங்களை ஆய்ந்து அவைகளைத் தமிழிலுஞ் செய்யுள் ரூபமாக இயற்றியிருக்குமிதன் ஆசிரியர் இருமொழியிலும் பயிற்சியுடையவராயிருத்தல் வேண்டும். நீதி வெண்பாவிற் சில பாட்டுகளை கா. நமசிவாய முதலியாரவர்கள் பாட புத்தகங்களில் வெளியிட்டிருக்கின்றார். அவரும் இந்நீதி வெண்பாவின் ஆசிரியர் இன்னாரென்று குறிப்பிடவில்லை. அவைகட்கான உரைப் புத்தகங்களிலும் ஆசிரியரை இன்னாரென்று குறிப்பிடவில்லை. ஆறுமுக நாவலர் (யாழ்ப்பாணம்) மூன்றும் பால பாடத்திலும் நீதிவெண்பா உரையுடன் அச்சியற்றப்பட்டுள்ளது. ஆனால் அப்பாடபுத்தகத்திலும் நீதிவெண்பாவின் ஆசிரியரின்னாரென்று தீட்டப்படவில்லை. நுண்ணிய கருத்தும், திரண்ட பொருளும், இனிய சந்தமும், இலக்கண அமைப்பும் பெற்ற இந் நீதிவெண்பாக்கள் வாசிக்குந்தோறுந் தமிழின் இன்சுவையைத் தோற்றுவிக்கின்றன. இவ்வரும் நூலை இயற்றிய ஆசிரியர் இன்னாரென்று அறியக்கூடாமலிருப்பது தமிழுலகத்திற்குப் பெரிய ஐயமன்றோ! இதைக் கண்ணுறும் அறிவான்ற பெரியோர்கள், எல்லோரும் வியக்கும் வண்ணம் இப் "பைந்தமிழ்" மூலம் வெளிப்படுத்துவாராக.

மு. மாணிக்க நாயகர்.

ஜீவன்-உற்பத்தி.

(153-ம் பக்கத் தொடர்ச்சி.)

நாம இங்கு தேவதா சிருஷ்டியைப்பற்றி சற்று கூறுவோம். தேவதைகளில் முதல் முதலாக ருத்ரர் அல்லது கௌரீநாதர் என்னும் சிவன் சிருஷ்டிக்கப் பட்டார். பிறகு, ஸ்திதிகர்த்தாவாகிய

விஷ்ணு என்பவ ருண்டாக்கப் பட்டார். சிவன், விஷ்ணு இவ் விருவர் மாத்திரம் தான் பரமாத்மா வாலேயே சிருஷ்டிக்கப் பட்டார்கள் மற்றெல்லாத் தேவதைகளும் சிவன், விஷ்ணு, இவ் விருவர்களாலும் நியமிக்கப் பட்டார்கள். தேவதைகளில், உத்தமம், மத்யமம், அதமம், என மூன்று வகை யுண்டு. அவ்வகைகளைப் பற்றி நாம் பிறகு கூறுவோம். உத்தம தேவதைகளெல்லாம் ஒவ்வொரு மஹா பிரளயத்திற் கொருதடவை புதிதாக நியமிக்கப் படுகிறார்கள். மஹா பிரளயமாவது, பிரம்மாவுக்கு நூறு வயதான வுடன் அவர் ஐக்யமாய் விடுகிறார். அப்படி ஐக்யமாய் விட்டவுடன் ஒருதடவை சமுத்திர ஜலம் பொங்கி, பிரம்மாண்டங்களை யெல்லாம் மூழ்கச் செய்துவிடும். இதற்கு மஹா பிரளயம் என்று பெயர். இதைத் தவிர தினப்பிரளய மென்றோர் பிரளய மிருக்கிறது. அப்பிரளயத்தில் ரஸாதலம் முதல் ஸுவர்லோகம் வரையில் பிரம்மாண்டம் மூழ்கிவிடும். ஒரு தினப் பிரளயத்திற் கொருதரம் மத்யமாதம தேவதைகள் புதிதாக சிருஷ்டிக்கப் படுகிறார்கள். இப்பொழுது, இததினப் பிரளயமானது பிரம்மாவுக்கு ஒரு வயதுக்குள் முன்னூற்று அறுபது தடவை யுண்டாகிறது. ஆக, பிரம்மாவுக்கு நூறு வயதாவதற்குள், முப்பத் தாறுயிரம் தடவை யுண்டாய் விடுகிறது. பிரம்மாவுக்கு ஒரு வயதுக்கு முன்னூற்று அறுபது நாளென்று கணக்கு. ஆகையினால் தான் இப்பிரளயத்திற்கு தினப்பிரளயம் என்று பெயர்.

இப்பொழுது நாம் தேவதைகளின் மூன்று வகையான பிரிவுகளைப் பற்றிக் கொஞ்சம் கூறுவோம்.

உத்தம தேவதை:—இஃது மோட்சத்தைச் சாதிக்கக்கூடிய ஆத்ம தர்சனம் என்பதைக் கொடுக்கக்கூடிய சக்தியை யுடைய ஒரு வகையான தேவதை. இந்த தேவதைகளில் மொத்தம் நூறு இருக்கின்றன. இந்த நூறு தேவதைகளுக்குள், சிவஸ்வரூபம் இருபத்து இரண்டும், அம்பிகா ரூபங்கள் ஐம்பத் தொன்பதும், விஷ்ணு ரூபங்கள் எட்டும், லக்ஷ்மி ஸ்வரூபங்கள் பதினொன்று மிருக்கின்றன. இவ்வுத்தம தேவதைகள் ஒவ்வொரு மஹா பிரளயத்திற் கொருதடவை புதிதாக சிருஷ்டிக்கப் படுகிறார்கள். இவர்களுக்கு மாத்திரம் தான ஆத்ம தர்சனம் கொடுக்கக்கூடிய சக்தி யிருக்கிறது

மத்யம தேவதைகள் :—பிறருக்கு ஆத்ம தீர்சனம் கொடுக்கக் கூடிய சக்தி யில்லாமலிருக்கும் தேவதைகளுக்கு மத்யம தேவதைகளென்று பெயர் இவைகளும் நூறு இருக்கின்றன. இத்தேவதைகளின் உபாஸனுதிகளுக்கு அதிக சக்திகிடையாது. இதில் சேர்ந்தது ஹநுமார், சுகச்யாமலா, தனதா முதலியவர்களாம். இத்தேவதைகள் நாம் முன் கூறியபடி ஒவ்வொருதினப்பிரளயத்திற் கொருதடவை நியமிக்கப் படுகிறார்கள்.

அதம தேவதைகள்:—இவர்களுக்கு அதிக சக்திகிடையாது. இவர்களை யக்ஷிணி என்றும் கூறுவதுண்டு. இவர்கள், தானும் ஆத்ம தர்சனம் பண்ணினதில்லை. பிறருக்கும் ஆத்ம தர்சனம் கொடுக்க முடியாது. இவைகளின் உபாஸனுதிகள் அவ்வளவு உசிதமல்ல. இவைகளின் உபாஸனைகளை அதிகமாக ஒருவரும் நடத்துகிறதில்லை.

ருத்ரர், விஷ்ணு, லக்ஷ்மி, லலிதா, முதலிய தேவதைகள், உத்தமத்தில் சேர்ந்தது. இப்படியாக நாம் கூறிய உத்தம மத்யமாதி தேவதைகளைத் தவிர மற்றும் சில தேவதைக ளிருக்கிறார்கள். அவர்கள் இம்மூன்று வகுப்புகளுக்குள் சேராம லிருக்கின்றார்கள். அவர்களைக்குறித்து மந்திர சாஸ்திரமில்லை. இவ்விதமாக தேவதைகளில் மொத்தமாக இருநூற்று முப்பத்திரெண்டு பேர்களும், இம்மூன்று வகுப்புகளும் சேராமல் அநேக தேவதைகளும் இருக்கிறார்கள். இப்படி இம்மூன்று வகுப்புகளுள் சேராத தேவதைகளுள், வியாஸர், தத்தாத்திரேயர், முதலியவர்களிருக்கிறார்கள். இதைத் தவிர சில யோகீச்வரர்கள், கர்மசரீரத்தை விட்டுவிட்டு, கொஞ்சகாலம் பிரம்மானந்தத்தை யநுபவித்துக்கொண்டு ஒரு மஹா பிரளயம், இரண்டு மஹா பிரளயம் வரையில் இருக்கிறார்கள். அப்படி யிருக்கிறவர்கள் மஹா சக்தீச்வரர்களாக விருக்கிறார்கள். அவ்விதமாக இருக்கிறவர்கள் ஹிமாசலம், விந்தியமலை, முதலிய பர்வத பிரதேசங்களில் வசிக்கிறார்கள். அவர்கள் அப்படி யிருக்கும் பொழுது மலைகளின்மேல் ஆச்ரமங்கள் கட்டிக்கொண்டு அநேக சிஷ்யர்களோடு வசிக்கிறார்கள். அவர்கள் அம்மலைகளில் யோகாப்பியாஸம் செய்து கொண்டும் ஜபங்கள், உபாஸனுதிகள், முதலியவை செய்து கொண்டும இருக்கிறார்கள். இது தவிர அவர

கள் இவ்வுலகிலிருக்கும் சில பக்தர்களுக்கு மந்திர ஸித்தி உபாஸனாதிகளின் உபதேசங்கள், வேதாந்த இரஹஸியங்கள், யோகத்தில உதவி செய்யக்கூடிய மந்திரங்கள் முதலியவைகளை யுபதேசித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுள், ஆத்மாராம யோகீச்வரர் ஒருவராம்.

(தொடரும்)

ஆத்மானந்த ஸாகர யோகீச்வரர்.

ஸ்ரீயுத சித்தரஞ்சன தாஸர்.

(145-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

பண சம்பாத்ய விஷயமாய் கவலையில்லாமற்போன காலம் வரவே சித்தரஞ்சனதாஸர் பொதுஜன விஷயங்களில் உழைக்க முன் வந்தார். ஆயினும் 1906-ம் வருஷம முதல் வங்காளத்தில் நேர்ந்த கலவரைகள கணக்கிலடங்காது. வெடிகுண்டும், கொள்ளையும், கொலையும் ஏற்படவே, கவர்ண்மெண்டார் இவைகளுக்கு வேண்டிய அடக்கு முறைச்சட்டங்கள ஏற்படுத்த ஆரம்பித்தார்கள். பொதுக்கூட்டங்கள் சரிவர நடத்த முடியவில்லை. இராஜீய உழைப்பு கொஞ்சம குறைவாயிருந்தது. விபின சந்திர பாலர் இங்கிலாந்துக்கு போயிருந்தார், அரவிந்தரோ புதுச்சேரிக்கு தத்தமாய் விட்டார், சுரேந்திர பாபுவும் பல்போன கிழ ஸிம்மம்போல மிதவாதியானார், மோதிலால் கோஷ் கிழத்தனம் அடைந்தார், மற்றும் உள்ள தேசிய உழைப்பாளர் யாரையும் காணோம்.

இவருக்கு வங்காளிப் பாஷையில ஒரு பத்திரிகை ஸ்தாபித்து அதன் மூலம ஜனங்களுக்கு தேசிய அறிவு புகட்டவேணுமென்ற எண்ணம் இருந்தது. அதற்காக "நாராயன்" எனப்பெயர் புனைந்த ஒரு மாதாந்தரப் பத்திரிகையை ஸ்தாபித்தார். இந்த பத்திரிகைக்கு நல்ல பேர் ஏற்பட்டது. சந்தாதார்களுக்கு குறைவு கிடையாது. நல்ல பாண்டித்தியமுள்ளவர்கள் வியாஸங்கள் நிறைந்தன. இப்பத்திரிகையின் அச்சும், சித்திரப்படங்களும் பார்த்தோர மனதையே கவரும். இப்பத்திரிகையின ஆசிரியர் பரேந்திர குமார

கோஷர். இவர் ஸ்ரீயுத அரவிந்த கோஷின் சகோதரர். 1880-ம் வருஷம் இங்கிலாந்தில் பிறந்தவர். பிறகு இந்தியாவிற்கு வந்தவர். ஒவ்வொரு ஜில்லாவிலும் தேசப்பயிற்சிக்கு ஸாதகங்களுள்ள கொடிக்கூடங்கள் ஏற்படுத்தியவர். யுகாந்தரென்னும் பத்திரிகையை ஸ்தாபித்தவர். அலிப்பூர் சதியாலோசனைக் கேஸில் எதிரியாயிருந்தவர். 1909-ம் வருஷம் தீவாந்தர சிட்சை ஏற்பட்டு அந்தமான் தீவுக்கு அனுப்பப்பட்டவர். பல ராஜத்ரோக கேஸ்களில் சம்பந்தப்பட்டு 1920-ம் வருஷத்தில் விடுதலையடைந்த கைதிகளில் ஒருவர். இவர் விடுதலையடைந்ததும் சித்தரஞ்சன தாஸர் அவரை மேற்கண்ட வங்காளப் பத்திரிகைக்கு பத்திரிகாசிரியராக நியமித்தார். இந்த பத்திரிகையால் வங்கதேசத்துக்கு உண்டான நன்மை வெகு அதிகம்.

சித்தரஞ்சன தாஸர் தமது தாய்பாஷையிலே வெகு அன்பு கொண்டவர். அப்பாஷையிற்றேர்ச்சி யடைந்த பல பெரிய பண்டிதர்களைத் தருவித்து அவர்களுக்கு வேண்டிய உதவி புரிந்துவருவர். வங்க பாஷையிற் பேசுவது அகௌரவமென்று எண்ணுவோர் வயிற்று உபாயத்துக்குத்தான் ஆங்கில பாஷையே யல்லாது வங்காள தேச சகோதரர்கள் ஒருவர்க்கொருவர் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த தாய்ப்பாஷையே நல்லதெனக்கருதி எடுத்தும் காட்டுவர்.

முன்னமேயே சித்தரஞ்சன தாஸர் வரையாது கொடுக்கும் வள்ளலென விளங்கினர் என்றோம். இவரது தகப்பனும் கொடுத்துக்கெட்டுக் கடனாளியாயினரென்றும் கூறினோம். கணவனுக்கேற்ற காதலியான தாஸரின் மனைவியார் வெகு குணசீலி. தர்மம் செய்யாமல் அன்னம் புசியாள். பசியுட னிருப்பவரை பார்க்க சகியாள். அநாதையர்க்கு உண்டி, உடை கொடுத்துதவுவாள். இவர்களது ஈகை இம்மட்டோ?

1914-ம் வருஷம் முதல் ஐரோப்பாவில் ஜர்மெனியை இங்கிலாந்து எதிர்த்து சண்டை நடத்தியது யாவர்க்குந் தெரியும். அந்த யுத்த காலத்தில் இந்திய பாதுகாப்புச் சட்டம் ஒன்று கவர்ண்மெண்டார் பிறப்பித்தார்கள். அச்சட்டம் இந்தியாவில் வெகு கொடுமையாய் உபயோகிக்கப்பட்டதென்று சொல்வது மிகையா

காது. அச்சட்டத்தின் ஆதாரவின பேரில் இந்தியா முழுவதும் பல்லாயிரக் கணக்கான பாரத மக்கள் சிறையிலடைக்கப்பட்டார்கள். சிறையிலிடுபடும் காரணமும் யாருமறியார். இவ்வாறான சட்டத்தால் வங்காள நாட்டில்மட்டும் நூற்றுக்கணக்கான சிறுவர்கள் சிறையிடப்பட்டனர். இச்சிறுவர்களில் பலர் தம் தம் குடும்பத்துக்கு போஷித்தது வந்தவர்களே யல்லாது வேறு சொத்து சுதந்தரங்களில்லாதிருந்தனர். ஆகவே, இச்சிறுவர்களை சிறைபடுத்தியதனுலும் கவர்ண்மெண்டார் அந்நாதியற்ற குடும்பங்களுக்கு யாதொரு உதவியும் புரியாததினுலும் அக்குடும்பங்கள் நிலை குலைந்தன. காலக்ஷேமத்துக்கு என்ன செய்வதென்று தெரியாமல் ஏங்கின. அவர்களது கஷ்டங்கள் சித்தரஞ்சனதாஸர் மனதில் தாக்கின. இவர் மனதும் புண்பட்டது ஒவ்வொரு குடும்பத்தையும் அறிந்து தன்னுற் கூடுமானவரை ரூபாய் கொடுத்துக் காப்பாற்றி வந்தார். இந்த விதமாக மாதாமாதம் சராசரி சுமார் ஐயாயிரம் ரூபாய் வரை கொடுத்து வந்தார் இவரது உதார குணத்துக்கும் காருண்யத்துக்கும் ஒப்புயர்வுண்டோ? ஐரோப்பிய யுத்தம் முடிந்த பிறகு நமது ஜார்ஜ் சக்ரவர்த்தி இராஜீய குற்றவாளிகளை விடுதலை செய்யவேண்டுமென விளம்பரம் செய்த பிரகாரம் இச்சிறுவர்களெல்லாரும விடுதலை செய்யப்பட்டனர். விடுதலையடைந்தவர்கள் தங்கள் குடும்பங்கள் நிலை நின்றனவோ, அழிந்தனவோ வென்று தெரியாது திரும்பி வந்தவுடன் ஒவ்வொரு இல்லத்திலும் சித்தரஞ்சனதாஸரின் உதார குணம் வாழ்த்தப்பட்டது. விடுதலையடைந்தவர்கள் சொல்லாமற் செய்த இந்நன்றிக்கு விச்வாசம் காட்ட சித்தரஞ்சன தாஸர் வீடுசென்று தொழுதார்கள்.

(தொடரும்.)

ஒரு தமிழன்.

அறிவிப்பு.

6-ம் சஞ்சிகை முதல இந்தியாவின் புராதன வியாபாரமும் தற்காலமாறுதலும் என்ற விஷயத்தைப்பற்றிய வியாஸங்களும், 'ஸ்திரீகள் பக்கம்' என்ற வியாஸங்களும தொடர்ச்சியாய் வரும்.

பத்திரிகாசிரியர்.

“ பைந்தமிழ் ” பஞ்சாங்கம்.

(All Rights Reserved.)

துந்தோத்காரிஹு ஆனிமீ 1923ஹு ஜூன்மீ-ஜூலைமீ இங்கிலீஷ் 1923, கலியுகஹு 5025, சாலிவாகனஹு 1846, கொல்லம் 1098, விக்ரமக 1980, ஹிஜரி 1341, பஸலி 1332, பிரபாவதி 57.

ஜூன் தேதி	ஆனி தேதி	கிழமை	திதி		நக்ஷத்திரம்		யோகம்		புண்யகாலம் விசேஷங்கள்.
15	1	வெள்	பிர	33-37	மிரு	6-39	கண்	32-59	ஷஷ்டசீதி, ஜேஷ்டாஷ்டகம், இஷ்டி, வித்தியா [ரம்பஞ் செய்ய, பு. கௌ. வி.
16	2	சனி	துதி	33-45	திரு	7-31	விரு	30-40	ஸ்ரீசவிக ஜயந்தி, சூன்ய திதி.
17	3	ஞாயி	திரு	32-37	புன	8-24	துரு	29-22	கதலீ விருதம், விவாகஞ்செய்ய.
18	4	திங்	சது	30-18	பூச	8-42	வியா	23-5	கரும்புகட, ஈாகை புண்டரீகழி உத்சவம், [கர்ஞபாரணம் பூண.
19	5	செவ்	பஞ்	26-57	ஆயி	7-37	அரி	17-58	ஜெபம் பூர்த்தி செய்ய.
20	6	புத	சஷ்	22-41	மக	5-35	வச்	12-6	சஷ்ட உபவாசம், கரிநாள்.
21	7	வியா	சப்	17-39	பூர	2-44	சித்	5 34	சித்திர மெழுத, ஸ்ரீமந்தம் செய்ய.
					உத்	56-36	விய	53-2	விதை விதைக்க, நடராஜ அபிஷேகம்.
22	8	வெள்	அஷ்	12-9	அஸ்	55-27	வரி	51-14	சுப முகூர்த்தம், கடகலக்னம்.
23	9	சனி	நவ	6-15	சித்	51-24	பரி	43-43	சாமகரணஞ் செய்ய.
24	10	ஞாயி	தசீ	0-10	சுவா	47-21	சிவ	36-7	மழை 9-க்குள், புத்தகம், பத்திரிகை [வெளியிட.
			ஏகா	53-56					
25	11	திங்	துவா	48-14	விசா	43-28	சித்	28-46	கூர்ம ஜயந்தி.
26	12	செவ்	திர	42-47	அநு	39-59	சா	21-37	பிரதோஷம்.
27	13	புத	சது	37-52	கேட்	37-2	சுப்	14-52	சூலை போட.
28	14	வியா	○பௌ	33-45	மூல	34-51	சுப்	8-38	காரைக்கால் மாம்பழ திருநாள்.

பண்டையுள கன்மமே கர்த்தா வெனும்பெயர்ப்
பசுநா னிச்சிப்பனோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.

வென்றுளே புலன்க ளைந்தார் மெய்யுணர் வுள்ளந் தோறுஞ்
சென்றுளே யமுதமூற்றுந் திருவருள் போற்றி யேற்றுக்
குன்றுளே யிருந்து காட்சி கொடுத்தருள் கோலம் போற்றி
மன்றுளே மாறியாடு மறைச்சிலம் படிகள் போற்றி.

"பைந்தமிழ்" வாழ்த்துக்கவி.

உலகுபுகழ் செகதீச னிடத்திருந்து பைந்தமிழ்தா னுதித்தாற் போன்றே
இலகுசென்னைச் செகதீச னிடத்திருந்தே பைந்தமிழ்தா னெழுந்த திந்நாள்
பலகலைதேர் பண்டிதரின் பணியணிந்து மதிதோறும் பவனி போந்து
நிலவுறவே திருவருளைச் சிந்தித்து வந்தித்து நிகழ்த்து வோமே.

ஜி. சதாசிவம் பிள்ளை,
(நாகை, நீலலோசனி)

இந்தியாவின் புராதன வியாபாரமும் தற்கால மாறுதலும்.

(All Rights Reserved.)

குறிப்பு:—இதனை கீழ்கண்ட வியாஸமும் அதன் தொடர்ச்சிகளும் ஒருவரும் பிரசுரிக்கவும் மொழி பெயர்க்கவும் கூடாது.

ஆயிரக்கணக்கான வருஷங்களுக்குமுன்பே, ஐரோப்பா கண்டமுழுவதும் ஜனங்கள் குடியேறுவதற்கு முன்னதாகவும், மத்தியதரைக்கடற் பக்கம் ஓங்கி வளர்ந்து அரசாட்சியும் பெருமையும் அடைந்த ஐரோப்பிய நாகரீகத்தின் பிறந்தவிடமெனக் கொண்டாடப்படும் கிரேக்கிய, ரோம, எகிப்து நாடுகள் தங்களது பேரை நிலைநிறுத்துவதற்கு முன்னதாகவும், அஸீரியா, பாபிலோனியா முதலிய தேசங்கள் செழித்தோங்கும் காலத்துக்கு முன்னதாகவும், நமது பிரிட்டிஷ் ஜனங்கள் இங்கிலாந்து தீவுக்கு குடியேறுவதன்முன் இருந்த அநாகரீகத் தன்மையிலேயே அழுந்

திக்கிடந்த காலத்திலும், நமது தாய் நாடான பாதகண்டம் தனது குறைவற்ற செல்வத்தாலும் நீர்வள நிலவளங்களாற் செழித்த தன் வயல்களாலும் தான்யத்தாலும் வெகு உன்னத நிலையடைந்திருந்ததென்பது சகல தேசிய சரித்திரர்களும் ஒப்புக்கொள்ளும் உண்மையான விஷயமே. பாதகண்டத்தின் குறைவற்ற செல்வத்தாலும் இணையற்ற உயர் சாக்குகளினாலும் அநநிய நாட்டார்கள் தத்தம் நாடுகளுக்கு நம்நாட்டின் விளைவுப்பொருள்களைக் கொண்டு போய் வர்த்தகம் செய்வதிலேயே ஈடுபட ஆரம்பித்தார்கள்.

இப்பாதகண்டவாஸிகளது உத்தம உண்மைக்குணமும், அவர்களது சிறந்த ஆசார பழக்க ஒழுககங்களும், பல்லாயிரக் கணக்கான வருஷங்களில் உண்டான படையெடுப்பு, குழப்பம் முதலியமாறுதல்களாலும மாற்றலாகக் கூடாதபடி தங்கள் தேசாசாரங்களை உறுதிப்பாட்டுடன் நிலைபெறச் செய்திருந்த ஏற்பாடுகளும், சேர்ந்து பாரதமக்களை சுத்த நிஷ்கபடமான ஜீவனததோடு மேலான கல்வினானம் முதலிய தத்துவததை யடையச்செய்தன. ஒவ்வொரு பாகஙகளிலுள்ள சிற்றரசர்களும் அவரவர்களது தேகப் பராக்கிரமத்திற் பேரடையச்செய்தன. வறுமையென்பது சிறிது மற்று, வணிகர்கள் ஒவ்வொரு சரக்கும் உயர்ந்த மாதிரியிலிருக்குமாறு செய்து சேகரித்தும், கைத்தொழில் விர்த்தியடைந்தும், புலவர்கள் புகழ்க்காரணமும் ஏற்பட்டது

நாம் அறிநதுள்ள உண்மையானதும பாரபக்ஷமற்றதுமான சரிததிரஙகளில் ஆராய்ச்சி செய்யுங்கால, அக்காலத்தில உலகமேடையில் நடித்துததுலங்கிய ஜாதியார்களில பாரதமக்கள்தான் நாகரீகத்திலும் அரசாங்கநீதியிலும், கைததொழில வர்த்தகத்திலும் உயர்நத நிலைமையிலிருந்தார்களென வறிகிறோம்.

சில சரித்திராசிரியாகள பாதகண்டததில சில கைததொழில்களும் முக்கியமாய் சிற்பி சாஸ்திரம் எகிப்து தேசத்திலிருந்து பாதகண்டத்துக்குவந்து நிலை யடைந்ததெனக் கூறுவார்கள். அதற்குச் சாக்ஷியம் இப்பாதகண்டத்துடன் எகிப்து தேசத்தார்கள் முதன் முதல் வர்த்தக நிமிததம் போக்கு வரவு செய்தார்கள் என்பதாகக் கூறுவார்கள். ஆயினுமவாணிபம் சிறந்திருந்த கா

ணங்கொண்டே எகிப்து தேசத்தார்களுக்கு பாதகண்டத்துடன் சம்மந்தம் ஏற்பட்டதென்று அவர்களே யொப்புக்கொள்வதால் பாத நாட்டின் வர்த்தகப்பெருமைக்கு அவர்களது வாசகமே சாக்ஷியமாகும்.

பாத நாட்டில் முதன் முதல் வர்த்தகசம்மந்தமாய்ப் படையெடுத்து வந்தது எகிப்து தேசத்தில் அரசுபுரிந்த ஸிஸோஸ்த்ரிஸ் (Sesostris) என்னும் அரசன் காலத்தில்தான். பாத நாட்டின் நீர்வளம் நிலவளம் செல்வம் முதலியவைகளால் பொறுமையுற்றுக் கவர்ந்து செல்ல முன்வந்தது எகிப்து தேசத்தார்களே. இவர்கள் பாரத வருஷத்தின்மேற் படையெடுத்து கங்காநதிக்கரைவரையுள்ள சிற்றரசர்களை தங்கள தேசத்துக்கு கப்பம் கொடுக்கும்படி கட்டாயப்படுத்தின போதிலும் ஸிஸோஸ்த்ரிஸ் என்பவன் இறந்ததும் எகிப்து தேசாஜீய சம்மந்தம பாதகண்டத்தில் முடிவடைந்தது. அவனுக்குப்பின் வந்த அரசர்கள் பலக்குறைவாலோ அல்லது பிற நாட்டுக்குள் தலையிட்டுக்கொள்ள வேண்டாமென்ற சாந்த குணத்தாலோ, பாதகண்டத்தோடு வியாபார சம்மந்தம்மட்டுமிருந்தாற் போதுமென்ற எண்ணங் கொண்டிருந்தார்கள்.

அப்போது பாரதமக்கள் பிறநாட்டாரின் ஹிம்ஸையென்பது சிறிது மின்றி, நல்ல அறிவுணர்ச்சியால் ஏற்படுத்தப்பட்ட தருமநூலாம்சட்டங்களனுஷ்டித்தும் கலைஞானத்தின் பகுதிகளிலெல்லாம் உயர்ந்த தேர்ச்சியடைந்தும் வந்தார்கள். வரவர மற்ற தேசங்கள் முன்னுக்கு வரும்போதும் பாதகண்டத்து சுத்தநேர்மையான நீதிநூலனுஷ்டானமும், வித்தைப்பயிர்ச்சியும், வர்த்தகச்சிறப்பும், சரக்குகளின் உயர்வும் அத்தேசத்தார்களின் மனதைக் கவர்ந்தன.

பாதகண்டத்துடன் வர்த்தகம் செய்துதான் தங்கள் நாடு மேன்மை யடையவேணுமென்றும் ஒவ்வொரு தேசத்தார்களுக்கும் உணர்வுண்டாயிற்று.

இக்காரணங்கொண்டே சுமார் இரண்டாயிரத்தைந்நூறு வருடங்கட்குமுன் உயர்வடைந்திருந்த பாரசிகநாட்டு அரசர் டரையஸ் (Darius Hystaspes) என்பவர் பாதகண்டத்தை சாச்வதமாக கீழ்ப்படுத்தவேணுமென்ற அவாக்கொண்டு படையெடுத்தார்.

அவரது பராக்கிரமமும் ஸிந்துநதிக்குக் கீழ்புறம் பரவவில்லை. பாரத மக்களின் நடையுடைபாவனைகளை முற்றுமறிய காரணமேற்படாமற் போயிற்று. வருஷா வருஷம் கப்பம் கொடுக்குமாறு சிற்சில சிற்றரசர்களை தொந்தரவு செய்யப்பட்டது. ஆயினும் சில வருஷங்களுக்கெல்லாம் இச்சிற்றரசர்கள் கப்பம் கொடுப்பதை நிறுத்தியதுமல்லாமல் பாரசீகதேச பராக்கிரமமும் சீர்குலைந்தது.

இக்காலத்துக்கு இருநூறு வருஷங்களுக்குப் பிறகு மாஸிடோன தேசாதிபதியான அலெக்ஸாண்டர் (Alexander) பாரசீக தேசத்தைத் தன்வசமாக்கியபின் பாரதகண்டத்துச் சிற்றரசர்களின் கப்பம் தனக்கு வரும்படி ஏற்பாடு செய்யுமாறு நம் நாட்டின்மேல் படையெடுத்தான். ஸிந்துநதியின் மேற்கரை யடைந்ததும் இந்நாட்டின் செழுமையையும் செல்வத்தையு மறிந்தானாகி அவைகளைத் தானடைய எண்ணங்கொண்டு அந்நதியைக்கடக்கலானான். அப்போதுதான் அலெக்ஸாண்டர் தான் பாரதமக்களின் பராக்கிரமத்தையும் வீரியத்தையும் முற்றிலும் தன்மனதில் முன்னமே கருதவில்லையெனக் கண்டான். வீரசூரர்களைச்சேகரித்து அவனது போக்கைத்தடுத்து யுத்தஞ்செய்ய முன்வந்த புருஷோத்தமரின் காம்பீரியத்தைக்கண்டு சிந்தாகுலனானான். இப்புருஷோத்தமனையும் வென்று இன்னும் கிழக்கே வந்திருந்தால் கணக்கற்ற புருஷோத்தமர்கள் களங்கமற்ற கீர்த்தியுடன் கங்காநதிக்கரையில் தடுத்து மாஸிடோன் மன்னனின் இன்னுயிர் விண்ணடைந்திருக்கும். அவனது ஜீவனும் கங்காஜலத்தால் புனிதப்பட்டிருக்கும். அந்தோ! அவனது சைன்யங்கள் யுத்தநிலையில் வெறுப்படைந்து பாரசீகத்துக்குத் திரும்புமாறு கட்டாயப்படுத்தவே, அலெக்ஸாண்டரும் அதற்கு உடன்பட்டு பாபிலோ (Babylon) னில் தனது அரண்மனையில் தன் துன்மார்க்க நெறியாலுண்டான நோயால் உயிர்மாய்ந்தான்.

(தொடரும்).

துவேஷம் துவேஷத்தால் தீராது பொறுமையினுலும்
அன்பாலுமே தீரும்.

கவுதம புத்தர் கூறிய ஒரு கதை.

கங்கை பாயுங் காசிமா நகரில்
பிரமதத்தனும் பெருநில வேந்தன்
கீர்த்தியுடனே செங்கோல் செலுத்தினன்
கோசல தேசக குரிசிலாகிய
தீர்க்கேதி யென்பவன் சிறங்குதிகொள
பிறர்மனம நோவாப் பெற்றிமையுடனே
யவனியை யாட்சிசெய் யமயந்தன்னில்
காசிராஜன் கவுசல னெளிமையைக்
கண்டவனரசைக் கவரக்கருதியே
படையை யனுப்பிப் பாரைக் கொண்டனன்
கோசலத்தரசன் குடும்பத்துடனே
பலதேயத்தும பனுட டிரிநது
காசிபதியைக் கடிதினடைநதே
யுருவ மாறியோர் குலாலன் மனையில்
குடியாயிருந்து கூலிகொண்டு
வயிறுவளர்க்க மனைவியோர மகவை
யீன்று தீர்க்காயு செனப் பெயரிட்டனர்
பிறமதத்தனுற் பேரிடர் வருமென
வேற்றிட மனுபப வித்தையிற் றேர்ந்து
வளர்ந்து வந்தனன் மகனவன்றந்தையைப்
பழம்பதிதனிலிருநதோர் பரிகாரி
கண்டன னவனைக் காட்டிக்கொடுத்தால
காசிராஜன் கனகமீவா னெனக்
கோளுரை கூறிக கொற்றவனவனை
மனைவியுடனே வலிததுக் கொணர்ந்தே
கொல்லும வண்ணம கொலைஞர்பாற்கூற
அவ்வாறவரை யழைதது வரும்வழி

தற்செயலாகத் தனயன் காணவே,
ஆங்குளோர்யாரு மறியா வகையில்
புத்ர சோகத்தாற் புலம்புதல்போலத
" தாமதஞ் செயாதே யவசரப்படாதே
துவேஷம் துவேஷத் தாற்றீரா து
பொறுமையினுலும் பொருந்துமன்பாலுமே
தீருமே யன்றித் தீரா" தென்றான்
அன்னோன் றன்னை யவன் மனையுடனே
கொன்றனர் காசிக்குரிசில் சொற்படியே
மைந்தனே அந்த மயானம் புகுந்து
காவலாளர்க்குக் காசுகொடுத்துப்
பிணங்களை வாங்கிப் பிரேதச் சடங்கெலாம்
இயற்றின னதனையவ் வேந்த லறிந்து
சத்துரு மகனுற் றன்னுயிர் போமென
வேங்கியிருந்தன னிவ்வாறிருக்க
மைந்தனே காடு போய் வாய்விட்டலறிக்
காசிபபதியைக் கடிதினடைந்து
அரசனிக் கமைந்த யானை சாலையில்
வேலைக் கமர்ந்தவன் வேலைபார்க்குங்கால்
ஓர்நாளிரவி லுறங்குதல் முன்னர்
வீணையிற் பாட வேந்தன் கேட்டே
ஆனந்த மெய்தி யவனை யழைத்துத்
தன்னரண் மனையிற் றன்பொறுப்புள்ள
வேலையிலமர்த்தி மேன்மைப் படுத்தினன்
வணக்கமுங் கூர்மையும் மதிநலப் பெருக்கமும்
குறித்தகாலங் கோடா வரவும்
ஒழுக்கத் துயர்ந்த வுததம நடையும
பார்த்திபன் பார்த்துப் பாங்கினில் வைத்தனன்
வேட்டம் வேட்டுக் காட்டகம் புக்க
வேந்தனேடுமிவ் வேலையாள் சென்றனன்
மன்னன் களைத்தோர் மரத்தினடியில்
சத்துருமடியிற் றலைவைத் துறங்கினன்
பழியைத் தீர்க்கும் பான்மையனுகி
வாளையுருவினன் " மகனே குழந்தாய்
தாமசஞ் செய்யாதே யவசரப்படாதே
துவேஷம துவேஷத் தாற்றீராதே"
யென்றுதன் றந்தையன் றியம்பிய மொழிகளைக்
கருத்தினி லெண்ணினன கததியைப்போட்டனன்
அச்சமயத்தி லரசன் றக்கனவைக

கண்டு புலம்பிக் கண் விழிப்புற்றனை
அரசே நீயேன் அஞ்சினையென்னத்
தீர்க்காயுசுவால் ஜீவன போமென்றே
அஞ்சினே னென்ன வரசன் குடுமியை
யீர்த்துப்பிடித்தே யிராவாளுருவி
யவன்றான் யாரென றரசர்க் குரைத்து
நாடுகவர்ந்துநற் றாயைத்தந்தையைக
கொன்ற பழியின் குறை தீர்ப்பேனென
அரசனஞ் சினைய நின்னபயம்
பிராணபிக்ஷை பெருகத்தருகென
உன்னுயிரிருந்தா லென்னுயிர்போமே
யாதலாற் பிராணனை யருளுவதெங்ஙனம்?
என்றுகூற விருவரும சத்தியம்
செய்துகொண்டே சிநேக மெய்தினர்
தந்தைகூறிய தற்குத் தரும்பொருள்விளைவ
ஒருவனிடத்திற் றுவேஷ முறுங்கால
மனத்தை விட்டகனை மாறுவதற்குக்
தாமதம் வேண்டா மென்பது தருபொருள்
மித்திரரிடத்தில வெகுளிதா னேர்ந்தால்
விரைந்தவருடனே விரோதம வேண்டாம
மாதாபிதாவை மாளக்கொன்றனை
உன்னுயிர் வாங்கி யுன்னைச சேர்ந்தவா
என்னுயிர் வாங்கவும் என்னைச சேர்ந்தவா
உன்றன் றமர்களை யொழிக்கவு மெண்ணுவர்
ஆதலாற் றுவேஷம அடுக்காய் வளரும்
துவேஷம் துவேஷத்தா லறாது
எனக்கென் பிராணனை யீந்தாயாலும்
உன்றன் பிராணனை யுனக்கேயளித்தேன
நமமிருவருக்கும நாடோறும் வளர்ந்த
பகைமை தீர்ந்தது பழகும் நண்புடையோம்
பிரீதியும் பொறுமையும் பெருமையளிக்கும்
என்றனன் காசியிறைவன் களித்துத்
தீர்க்காயுசுக்குச செல்வியை யளித்துப
பட்டங்கட்டிப பாரையுந் தந்தனன்
ஆகையாலிதனை யாவருமறிந்து
வாழுமுன வாழுமின் வாழுமின்னீரே.

ஜி. சதாசிவம் பிள்ளை,
நீலலோசனி பத்திராதிபர்.

ஞான சாதனம்.

(98-ம் பக்கத்தொடர்ச்சி).

(2) இகமுத்திரார்த்தப் பலபோக விராகம். இகலோக பர லோகங்களிடத்துள்ள இச்சை யொழித்தல் என்பது இதன் பொருள்.

முதற் சாதனமாகிய நித்தியா நித்திய வஸ்து விவேகத்தால், "மெய்ம்மைச் சிவமே யல்லாது விரியுமுலகம் பொய்யென்பார், இம்மை மறுமை நிலையல்லவென்ன நிகழ்ந்த கருத்தினர்." (பிரபு லிங்கலீலை) என்றவாறு, எதையறிந்தால் எல்லாமறிந்ததாகுமோ, எதைக்கண்டால் எல்லாங் கண்டதாகுமோ, எதைபெற்றால் எல்லாம் பெற்றதாகுமோ அத்தகைய நித்தியமான—அழிவில்லாத—சத்தியமான வஸ்துவினிடத்தே விருப்புற்று, தாரசுத தன தான்யாதி இகலோக போகங்களினிடத்தும், ஆருத செல்வத்தரம பையர்கள் தற்சூழ வீற்றிருக்கும் சொர்க்கம் முதலாகிய பரலோக போகங்களினிடத்தும், அவை அழிவுள்ளவையாயும், துக்கக்கலப்புள்ளவைகளாகவும், பொய்யானவைகளாகவு மிருத்தலால் வெறுப்புங் கொள்ளல்வேண்டும்.

பிறவியே துன்பத்திற்குத் தாயகமானால் இன்பமடைதலெங்ஙன்? அசுசியிற் படுத்துப புரளுமேனம் அதையே மேலான இன்பமெனக் கருதியிருத்தற் போலவும், மலக்கிருமி அதையே மூவா மருந்தெனத் துய்த்துககளித்தல் போலவும் சாரமில்லாத சம்சாரத்தைச் சாரமெனககருதி அஞ்ஞானாந்தகாரத்திலழுந்திக் கிடத்தல் தகுமோ? அவ்விக பரலோக போகங்களோ

"அடுகரி தொடரவீழ வைந்தலை நாகக்கானை
இடிகிணற் றறுகின்வேரைப் பற்றினான் றிடவவ்வேரைக்
கடுகவோ ரெலியும் வந்து கறித்திட வதினின்றூறுக்
கிடைதுளித் தேனக்கின்பம் போலுமிப் பிறவியின்பம்."

என்னுஞ் செய்யுளின்படி, பயங்கரமான காட்டிற் பிரயாணஞ் செய்யுமொருவனை, யானையானது துரத்தத்தலைபபட, அவன்

அதைக்கண்டு வெருண்டோடி இடிந்த கிணற்றருகிற் சென்றதி லிழிந்து யானைக்குத்தப்ப நோக்கலும், அதனடியில் ஐந்தலை யரா விருக்க இருதலைக் கொள்ளி யெறும்பென வதிலிழியவுமாட்டாமல் மேலே நிற்கவுமாட்டாமல், அக்கிணற்றின் கரையிற் றொங்கிக்கொண்டிருந்த அறுகம் வேரைப்பிடித்து தொங்கிக்கொண்டிருந்தான். அவ்வமயம் ஓரெலி ஓடிவந்து அவ்வேரையுங் கடிக்கத்தொடங்கிற்று. என்ன செய்வான் ஏழை மனிதன்! மேலே யானை கோபத்தோடு நிற்கிறது. கீழே யிறங்குவமெனின் அங்காந்த வாயுடன் ஆவியைக்கொள்ள அரவம் அற்றம நோக்கிக்கொண்டிருக்கிறதே யெனத் துயருழந் தண்ணாந்து அலமருங்காலை அக்கூவலின் கரையிலிருந்த பாதபத்தினின்று காற்றலைப்புண்டு சிதறியதேன் அவன்றன் தோளின்மேற்படலும் அதனறவைத்தன் நாவால் நக்கி ருசித்து அடைந்த இன்பத்தையே யொக்கும்.

இத்தகைய, பசுத்தோல்போர்த்த புலியை யொப்பத்தன் உண்மையுருவை மறைத்துக்கொண்டிருக்கும (துன்பத்தை உள்ளீடாகக் கொண்டுள்ள) சிற்றின்பமும், தன்னிற்றோன்றுவதே யன்றி பிறபொருள்களினின்றுந தோன்றுவதின்றாம், ஏனெனின் ஆனநதத்திற் குண்மையான விருப்பிடம் ஆன்மாவேயாம். இங்ஙனம் நாமாகிய வான்மாவினின்று முதிக்குமானந்தத்தை அன்னிய வஸ்துக்களினின்றடைகின்றே மெனல் அநேக காலமாய் மண்ணிற் புதைந்து கிடந்த வென்பினைசுணங்கள் வருந்திக்கடிக்குங்கால், தன் பற்களிற்றோன்றுங் குருதியைச சுவைத்து அது அவ்வத்தியினின்றுந்தோன்றிய தெனக்கருதிக் களித்தல் போலாம். நிற்க.

நாம் எண்ணிறந்த பிறவிகளெடுத்திருப்போம் அவ்வப் பிறவிகடோறும் அளவிலா வின்பங்களனுபவித்திருப்போம். எதுவும் நிலையாக நின்றதில்லை. 'போற்றிப்புனைந்த வுடம்பும் பயனின்றே கூற்றங்கொண்டோடும் பொழுது" என்றபடி, போகநுகர்ச்சிக் காதாரமாகிய சரீரமே அழியுந்தன்மைத் தெனவறிந்தபோது வேறு பொருள்களைப்பற்றி விளம்புவதென்? ஆசையே துக்கப்பிறவிக்கு வித்து. "நிராசையின்றேல் தெய்வமுண்டோ"? என்றார் தாயுமானவர். எவ்வளவுக் கெவ்வளவு ஆசையற்று பாசவைராக்

யங்கொள்ளப்படுமோ அவ்வளவுக் கவ்வளவு துன்பமுங் குறையும்

ஆசையறு மின்கள் ஆசையறு மின்கள்
ஈசனே டாயினு மாசையறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வருந் துன்பம்
ஆசைவிடவிட ஆனந்தமாமே. (திருமூலர்)

பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது ; பின்னது
அற்றோ ருறுவது * * * (மணிமேகலை).

இந்திரன், குபேரன் முதலான தேவர்கள் இராக்கதரா லடைந்த துன்பங்களளவற்றன வென்பது புராணேதிகாசங்களாற் புலனும். நோய், பொறாமை, காமம், மரணம் இத்யாதி யின்னல் களு முண்டானல் அவர்களின்பம் நிலைபெற்ற பேரின்பமெனப் பேசுவதெப்படி ?

தியவசுரர் பகையுண்டு செற்றமார்வ மிகவுண்டு
நோயுண்டூனங்க ளுருண்டு நோய்கட் கெல்லாந் தாயான
காயமுண்டு கைதொழவேண் டினருமுண்டு கற்பகத்தே
மாயுந்தன்மை யுண்டானல் வானேர்க் கென்னே வாழ்வதே.

ஆதலின் அநித்தியத் தன்மையுடைய இகபர விஷயபோகங்களி னிச்சை யிம்மிமாத்திரையுமின்றி யிருத்தலின்றியமையா விரண் டாஞ் சாதனமாம்.

இங்ஙனங்கூறியதாலி யாவரும் வீடுவாசல் பெண்டுபிள்ளைகளைத் துறந்து, காட்டிற்குப்போய்விட வேண்டுமென்பது கருத்தன்று.

எத்தொழிலைச் செய்தாலு மேதவதைை பட்டாலும்
முத்தா மனமிருக்கும் மோனத்தே—வித்தகமாய்க்
காதிவிளையாடி யிருகைவீசி வந்தாலும்
தாதிமனம் நீர்க்குடத்தே தான்.

என்னுமாறு, எக்காரியத்தைச் செய்தாலும், எங்கேயிருந்தாலும் தாமரையிலை நீர்போல் பற்றற்று, வேடதாரியைப் போலிருத்தல் வேண்டும். சோக மோகங்களிற் கட்டுண்டிருத்தலாகாது என் பதே . கருத்தாமென்க. இதற்குதாரணமாக, ஸ்ரீ பாலபோதத் துள்ள மோகஜித் (மோகத்தை ஜயித்தவர்கள்) தாயிருந்தவர்களின் கதையைக் காட்டுதல் பொருத்தமா மாகலின் ஈண்டுச்சுருக்கிக் கூறுதும்.

அரண்யவாஸியாகிய யோகி யொருவர் ஆண்டுவந்த ஓரா ளிளங்குமாரனைக்கண்டு, 'நீயாரெ' ன வினவ, அவன் தன் பெயர் 'மோகஜித்' தென்றான். இதைக்கேட் டதிசயித்த முனிவரை நோக்கி அவ்விளங்கோ மீண்டும், 'யான்மாத்திரம் மோகஜித் தல்லன்; என் குலமுழுதும மோகஜித்தாம்' என்றான். அதைப பரீக்ஷிக்கக்கருதிய அவ்யோகீந்திரர் அக்குமாரனது அஸ்வம் வஸ்திரம் சஸ்திர முதலியவற்றைக் கொடுபோய் அவன தாண்மனைத்தா சியைக்கண்டு 'இளவரசன் காட்டிற் சிங்கத்தால் கொல்லப்பட் டிறந்தா' னென்றனன். அதனைக்கேட்டுத்தாசி, 'சுவாமி! அவ் விராஜகுமாரனுக்கு யானடிமையு மல்லேன் எனக்கவ னிறைவனுமல் லன். ஓடத்திலூம் பயன் கடலைக்கடத்தலே யன்றி வேறியாது,' என்று உத்தரஞ் சொன்னாள். மீண்டும், அந்த யோகி அவன் மனை வியிடஞ் சென்று கூறினர். அவளும், 'முனிவரே! அவருடைய சேர்க்கை எனக்கு இப்பிறவியில் இந்நாள் வரையுமே பொருந்துந் தன்மையதா யிருந்தது. அந்தோ! முனிவரே! தன்னுடைய தல் லாததைத் தனதென்னும் மமகாரவாய்ப்பட்டு மாழ்கி இதற்காக இவ்வளவு தூரம வந்தீர்களே' என்று விடை பகர்ந்தாள். பின்னர், அந்த யோகியானவர் அவன் தாயை யண்மி, அவ்வாறே யறைய வவளும் சிறிதும் சோகமோகமின்றிச் 'சுவாமின்! இரவில் விரு க்ஷத்தினிடம் வந்துசேர்ந்த பறவைகள் விடியற்காலையில் அத் தருவைவிட்டு நீங்குமன்றோ?' என்றாள். மேலும் அத்தவசி அர சனைக்கிட்டி விஷயத்தைக் கூறினான். அதைச் செவியுற்ற வாசன் பாதையினருகிலுள்ள தடாகக்கரையிற்றங்கிய வழிப்போக்கர் ஆண்டே தங்கியிருப்பரோ? தத்தம் நெறிபிடித் தேகுவான்றோ? இதற்காகக் கவல்வதேன்', என விடையிறுத்தான். முனிவர் மன மிகமகிழ்ந்து யாவரையும் விளித்து, 'இராஜகுமாரனிறந்தானெனப் பரீக்ஷார்த்தமாகப் பகர்ந்தேன் அவன் சுகமே யிருக்கிறான்' என்ன, அவர்களும் அதன் பொருட்டுக் களிப்படையாமல் 'அங்ஙனமாயி னும் நலமே' என்றுகூறிச சமத்தன்மையிலிருந்தனர். பின், அந்த யோகி ராஜகுமாரனைச் சேர்ந்து, 'உன்னாசை வேற்றாச னபகரிக்க கிஃபெற்றோர் சிறைப்பட்டனர்' எனக்கூற, அவனும் வருத்த மின்றி,' எத்தனை காலமாயினும் ஒருவரை ஒருவர் விட்டுப்பிரிய

வேண்டியதே. 'தந்தைதாய் தமர்தாரம் மகவென்னு மிவை சங்கைக் கூட்டமென்பதை யறிந்து, பற்றற்றிருக்கிறேனாகலின் யானுவக்தேன்' என்றனன். முனிவரும் அவனைச் சிலாகித்தார்.

இக்கதையால் நாம் மனைவி மக்களோடு இல்லற நெறியினின் றிருப்பினும் பற்றற்று இருத்தலத்தி யாவசியமென்பது பெற்றும். இஃதே விராகம். (விராகம்—ஆசையின்மை.)

இவ்விராகம (1) யதமானம் (2) வியதிரேகி (3) ஏகேந்திரியம் (4) வசீகாரமென நான்கு வகைப்படும்.

(தொடரும்).

பூ. ஸ்ரீநிவாசன்,
தமிழ்ப்பண்டிதர், இராணிப்பேட்டை.

ஸ்ரீயுத சித்தரஞ்சன தாஸர்.

(198-ம பக்கத்தின் தொடர்ச்சி)

இந்தியன் நேஷனல் காங்கிரஸ் விஷயத்தில் இவருக்கு மிக ஊக்க முண்டு. 1917-ம வருஷத்தில கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மகா கூட்டம் சிறப்பாய் நடைபெற சித்தரஞ்சன தாஸர் எடுத்துக்கொண்ட ஸ்ரமத்துக்கு அளவில்லை. செலவழித்த பணத்துக்கும் அளவில்லை. இந்தக் காங்கிரஸ் முதல் சித்தரஞ்சன தாஸர் பெயர் இராஜீய விஷயங்களில முதன்மையாக வெளி வாலாயிற்று. வெகு ராஜீய ஸம்மந்தமான கேசுகளில பணம் இல்லாமலே குற்றவாளிகளுக்கு ஆஜர் ஆகி அவர்களை விடுதலை யாகுமாறு செய்திருக்கிறார். இந்தியாவிற்கு வந்த மந்திரி மிஸ்டர் மாண்டேகு கல்கத்தா சென்றபோது, வங்காள மாகாண காங்கிரஸ் கமிட்டியின் தலைமையாக இருந்து தாஸர் ஒரு பெரிய யாதாஸ்து எழுதி மந்திரியிடம் கொடுத்தார். பம்பாயில் 1918-ம் வருஷம் நடந்த விசேஷ காங்கிரஸ் மகா நாட்டில் ஜனாப் ஹாஸன் இமாம் அக்கிராசனம் வகித்தபோது சித்தரஞ்சன தாஸர் வங்காளமிருந்து வந்து தமது அபிப்பிராயங்களை வெகு கம்பீரத்துடனும் ஆதாரவுகளுடனும் எடுத்துப்பேச லோகமான்ய திலகரும் கூட சித்தரஞ்

சன தாஸரிடம் வெகு வியப்பும் மரியாதையும் காட்டினரென்றால் நாம் கூறுவதென்? சித்தரஞ்சன தாஸர் லோகமான்ய திலகரிடம் அத்யந்த பக்தி விச்வாஸம் காட்டினர். அதே வருஷம் கடாசியில் இந்தியன் நேஷனல் காங்கிரஸ் மகாநாடு டில்லிமாநகரில் கூடிய போது இவர் ஒரு சிம்மமென விளங்கினர். அந்த காங்கிரஸில் நடைபெறக் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களில் . இளவரசர் இந்தியாவுக்குவரக் கேட்டுக்கொள்ளுவதென்பது ஒன்று. மிஸஸ் பெஸன்ட் இந்த தீர்மானத்தை சபையார் முன் கொண்டுவர, தாஸர் அத்தீர்மானத்தை எதிர்த்துப் பேசி காரணங்கள் ஒன்றன் பின் ஒன்றாய்க்கூறி கடாசியில் அத்தீர்மானம் நடைபெறாமல் போய் விட்டது.

மகாத்மா காந்தியால் கைகொள்ளப்பட்ட முறையான ஸத்யாக்ரஹத்தை தாஸர் மிகவும் ஏற்றுக்கொண்டு உழைத்தார். பஞ்சாபில் நடைபெற்ற சம்பவங்கள் அணியணியாக இங்கு எழுத வேண்டியது அவசியமில்லை யாயினும் சற்று குறிப்பில் கூறவேண்டுவது முக்கியமே. பாஞ்சாலத்தில் அதிகார வர்க்கத்தினர் செய்த முறைகளும், நிராயுதபாணிகளாயும் திக்கற்றவர்களாயு மிருந்த பல்லாயிரக்கணக்கான ஆண், பெண் இருபாலர்ளும சிறுவர், சிறுமிகளும் ஜாலியன்வாலாபாக்கில் வெடி குண்டால் உயிர் துறந்ததும், கல்னல் ஜான்ஸன், பாஸ்வெல் ஸ்மித் (Colonel Johnson, Boswell Smith) முதலியவர்களால் நடத்தப்பட்ட ராணுவச் சட்டத்தையும், அச்சட்டத்தை உபயோகித்த கொடூர முறையையும், அப்பிரதேசத்தில் இருந்த ஜனங்களை அவமானத்துக்கும், ஏளனத்துக்கும் உள்ளாக்கக் கூடிய விதமாய் நடந்துவரவும், தவழ்ந்துவரவும், உத்திரவு செய்யப்பட்டதும், அவ்விடம் உள்ளமனிதர் ஜீவஜந்துக்கள் என்று கூட மதிக்காமல் அதிகாரத் தலைவரான ஸர் மைக்கேல் ஓட்வியரும் அவர் சிஷ்ர் ப்ருகேடியர் டையரும் (Sir Michael O'Dwyer, Brigadier Dyer) ஹிம்ஸித்து நடத்தி வந்ததையும், பகிரங்கமாக பல பெரிய பாரதமக்களை சவுக்கடி யடித்ததையும், பிறகு விசாரணைக்காலத்தில் இந்த டையர் தன்கையில் குண்டுகள் இருக்கும் வரையில் சுட்டதாகவும் குண்டுகள் அதிகமா யில்லாததால் அதிகம் சுடப்படாமற் போனதற்கு துக்கித்ததையும், தலைமை வகித்த அதி

காரிகள் பூசிமெழுகினதையும், அந்த பாகத்து ஜனங்கள் அனைவரும் அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீருடனும், சிந்திய மூக்குடனும் இருந்ததையும் படியாதார் இல்லை.

இச்சம்பவங்கள் நடக்கும்போது தாம் நேரில் சென்று தன்னாலான சாதனம் ஜனங்கட்கு செய்யவேணு மென்ற எண்ணம் உண்டாகி பாஞ்சாலநோக்கி புறப்பட தாஸர் தயாரானார். அதிகாரிகள் இவரை போகவிடாமற் றடுத்து விட்டார்காள். இச்சம்பவங்களை யெல்லாம் விசாரணை செய்ய காங்கிரஸ் சபையார் ஒரு விசாரணை கமிட்டியை எற்படுத்தினார்கள். மகாத்மா காந்தி அதன் தலைமை வகித்தார். சித்தாஞ்சன தாஸர் அதில் ஒரு மெம்பர். சுமார் 1,700 ஜனங்களை விசாரித்து, சுமார் 650 பேர்களிட மிருந்து வாக்கு மூலங்களும் வாங்கப்பட்டது. இநத கமிட்டியின் குறிப்பு வெகு சவிஸ்தாரமாயும் ஆக்ஷேபிக்கத் தகாததாயு மிருக்கிறது.

1919-ம் வருஷம் அமிர்தஸாஸில கூடின இந்தியன் நேஷனல் காங்கிரஸில் சீர்திருத்த சம்மந்தமான தீர்மானம் விஷயமாக இவருக்கும் மகாத்மா காந்திக்கும அபிப்பிராய பேதம் உண்டாயிற்று. பிறகு கல்கத்தாவில் கூடிய விசேஷ காங்கிரஸ் மகாசபையிலும் மகாத்மா காந்தியால் கொண்டுவரப்பட்ட ஒத்துழையாமைத் தீர்மானத்தை அக்காலத்தில் எதிர்த்து நிறைவேறும விருக்கும்படி ஸ்ரமம் எடுத்துக்கொண்டார். ஆனாலும் அத்தீர்மானம் நிறைவேறப்பட்டவுடன் தமது அபிப்பிராயம் எப்படியிருப்பினும் அந்த மகா சபையில நிறைவேற்றப் பட்டதால் அதுடன் தாமும் ஒத்து நடக்கவேணும் என்று தீர்மானித்தார். இத்தீர்மானத்தின்படி தமது பாரிஸ்டா வேலையை விட்டுவிட்டார். இதுவரையில வீட்டிலும், வெளியிடங்களிலும் மேனாட்டு நாகரீகத்தைத கைக்கொண்டு அன்னிய தேச உடை அணிந்திருப்பதை விட்டுவிட்டார். அதிக லேசான உடுப்பணிநது வந்த இவர் கதர் உடைகளை அணியலானார். ஆங்காங்கு தமது உபன்னியாஸங்களைச் செய்து ஜனங்களுக்கு ஒத்துழையாமையின் அவசியத்தையும் இந்து முகமதிய ஐக்கியத்தின் இன்றியமையாததையும், சுதேசியத்தைக் கைக்கொள்ளும் முக்கியத்தையும் பரவச்செய்தார். வங்காளதது மாகாண காங்கிரஸ் கமிட்டியின் அக்கிராசனம் பூண்டார்.

(தொடரும.)

ஒரு தமிழன்.

மதுரா—Muttra.

இப்புவியின்கண் அவதரிக்கும் எல்லா ஜீவராசிகளினும், மிக மேன்மையானதென்றும், அடைவதற்கரிதென்றும் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது இம்மானிட ஜென்மமே. இம்மானிடப் பிறவியில் பல வருணத்தவர்களிருப்பினும், எல்லா மதஸ்தர்களாலும் ஒப்புக்கொள்ளக்கூடியது ஒரு பரம்பொருளே. ஆனால் அவரவர்கள் தங்கள் தங்கள் மதாசாரப்படியும், அனுஷ்டானத்தை ஒத்தும் அவ்வொன்றாகிய பரம்பொருளை ஒவ்வொரு ரூபமாகவும், வெவ்வேறு நாமமாகவும் போற்றி முத்தி பெறுங்கால் அப்பரம்பொருளையே அடைகின்றார்கள். இதற்கு திருஷ்டாந்தமாக ஒரு ஊருக்குச்செல்ல அநேக மார்க்கங்களிலிருந்து அவரவர்கள் தங்கள் தங்கள் மனதிற்கேற்ற பாதையை அனுஷ்டித்துக்கொண்டு இறுதியில், எல்லோரும் தாங்கள் முதலில் உத்தேசித்து புறப்பட்ட ஊரை அடைகிறார்கள். அதுபோல் ஹிந்து மதஸ்தர்கள் தங்கள் தெய்வமாகிய அப்பரம்பொருளை படைத்தல், காத்தல், அழித்தல் என்னு மதிகாரத்திற்கேற்ப ப்ரும்மா, விஷ்ணு, ருத்ரன் என்று நாமமிட்டு பஜித்து வருகிறார்கள். இதில் காத்தல் தொழிலுடைய விஷ்ணு புவியில ஜெனிக்கும் மானிடர்களின் சுபாவத்திற்கேற்ப துஷ்டர்களை நிக்ரஹித்து, பக்தர்களான சிஷ்டர்களை காக்கும் பொருட்டு, இப்புவியில், அத்துஷ்டர்கள் பெற்றிருக்கும் வரங்களுக்கு பங்கமேற்படாமல் சமயத்துக்கு தக்கவாறு ரூபத்துடன் அவதரிக்கிறார் என்பது எல்லோரு மறிந்ததே. இதனை நிரூபிக்கும் பொருட்டே தச அவதாரங்கள் விஷ்ணு எடுத்தாரெனக் கூறப்பட்டுளது. இதனையே பகவான் கிருஷ்ணாவதாரமெடுத்து அர்சுனனுக்கு கீதை உபதேசம் செய்த சமயத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார். அத்தகைய அவதாரங்களில் முக்கியமானதென்று கூறப்படும் ராமாவதாரத்தில் மனிதர்கள் அனுஷ்டிக்கவேண்டிய முறைகளைத் தானே அனுபவித்துக்காட்டியதாகவும், அவ்வவதாரத்தில் வாக்களித்ததை நிறைவேற்றுமாறு கிருஷ்ணாவதாரமெடுத்ததாகவும் புராணங்கள் கூறுகின்றன. ஒவ்வொரு அவதாரத்திலும்

தான் கொண்ட எண்ணத்திற்கேற்ப தக்க ஊரிலோ அல்லது அரச வம்சத்திலோ அவதரிப்பது வழக்கம். அதுபோல இக்கிருஷ்ணவதாரமும் வடக்கே மதுரா என்னும் ஊரில் தேவகி, வசுதேவர் இவர்களுக்கு புத்ரனாக அவதரித்ததாக சொல்லப்படுகிறது.

தேவகியின் சகோதரனான கம்சனால் சிறையில் அடைக்கப்பட்டிருக்கையில் பகவான் அச்சிறையில் கிருஷ்ணவதாரமெடுத்ததாகவும் தெரிகின்றது.

இப்புண்ணிய க்ஷேத்திரத்தை யமுனை என்னும் நதி ஓடிச் சிறப்பிக்கச்செய்கின்றது. இந்நதியில் வருஷம் பூராவும் ஜலம் ஓடிக்கொண்டிருக்கின்றது. இந்நதி ஓரங்களில் அநேக தர்மசாலைகள் (யாத்திரிகள் தங்குமிடம்) இருப்பதால் யாத்திரிகள் தங்கள் அநுஷ்டானங்களை சிரமமின்றி செய்து முடிக்க சௌகர்யமாகவிருக்கின்றது. நம்மூர்களில் கர்மாக்களை செய்து வைக்க சாஸ்திரிகள், புரோகிதர்களிருப்பதுபோல் அங்கிருப்பவர்களுக்கு பண்டாக்களென்று பெயர். புதிதாகப்போகும் யாத்திரிகர்களுக்கு இவர்கள் வேண்டிய உபகாரம் செய்து வருகிறார்கள். இந்நதியில் ஆமைகளதிகம். சாதாரணமான ஆமையின் முதுகு சுமார் இரண்டடிக்கு குறையாமலிருக்கும். இப்பட்டணத்தின் அமைப்பு புராதனமானதாகவேயே யிருக்கின்றதேயன்றி தற்காலத்திற்கேற்றவாறு அமைக்கப்படவில்லை. இது ஒரு முனிசிபல் ஊர்தான். இப்புண்ணிய க்ஷேத்திரத்திலிருப்பவர்கள் தெய்வபக்தியுள்ளவர்களாயிருப்பது ஓர் ஆச்சரியமல்ல. இங்கு குரங்குகளின் உபத்திரவம் சொல்லுதற்கொண்ணாது. யமுனா நதியிலிருந்து $1\frac{1}{2}$ மயில் தூரத்தில் பூதகி தடாகமென்று ஒரு பெரிய அழகான தடாகமொன்றிருக்கின்றது. இதை புண்ணிய தீர்த்தமென்று சொல்லுவதால் அநேக ஜனங்கள் அங்குசென்று அக்குளத்தில் ஸ்நானம் செய்து வருகிறார்கள். இக்குளத்திற்கு சமீபமிருக்கும் ஒரு சிறு குன்றின்மேல் விஷ்ணு அவதாரமெடுத்ததாகச் சொல்லப்படும் கோவில் ஒன்று இருக்கின்றது. இவ்விடத்தில் தேவகி, வசுதேவர் இவர்களுக்கு விலங்கிடப்பட்டும், ஸ்ரீ கிருஷ்ணபகவான் பால ரூபமாகவிருக்கும் ஐதிகத்தைக் காண்பிக்கக்கூடிய ஒரு கோயில் இன்னும் அங்கிருக்கின்றது. இதற்கு சமீபம் அதேகுன்றின் மீது மசூதி ஒன்று கட்டப்பட்டிருக்கின்

றது. இந்தியாவில் முன் மகமதியர் அரசாண்ட காலத்தில் இம்மூர்த்தி கட்டப்பட்டதாக சொல்லுகிறார்கள். பகவான் ஆயர் குலத்திலவதரித்து கோக்களை பரிபாலித்து வந்தார் என்ற விஷயம், இந்நகரிலிருக்கும் எல்லாவிதமான மாடுகளை நோக்குங்கால் நன்கு விளங்கும். இதனால் தயிர், பால், நெய் முதலியவைகளுக்குக் குறைவின்றியும், ஜனங்கள் நல்ல சுக ஜீவினர்களாகவு மிருக்கின்றார்கள். இந்நகரின் மத்தியில் துவாரகநாத் ஆலயமொன்றிருக்கின்றது. அலங்காரப்ரியோ விஷ்ணு என்பது இவ்வாலயத்தால் நிரூபிக்கப்படுகின்றது. நம்மூர்களிலுள்ள வழக்கம்போல் கோவிலுக்கு தேங்காய், பழம் முதலியவைகள் எடுத்துச்செல்லும் வழக்கமங்கில்லை. அவ்வாலயத்திற் குரித்தானது, தரிசனமும், பஜனையும்தான். ஒவ்வொரு காலங்களிலும், அப்பெருமானுக்கு ஒவ்வொரு அலங்காரம் செய்யப்பட்டு வருகின்றது. அவ்விடத்தில் ஜனங்களுக்கு ஜாதிவித்தியாசமே கிடையாது. எல்லோரும் ஒன்றாகச்சேர்ந்து தரிசனம், பஜனை செய்வது வழக்கம். இஷ்டமுள்ள ஜனங்கள் தங்களால் இயன்றளவு காணிக்கை செலுத்த ஓர் உண்டியல் அங்கு வைத்துளது. தெற்கே சில க்ஷேத்ரங்களிலுள்ளது போல் அவ்விடத்தில் இவ்வளவுதான் போடவேண்டுமென்றும், தரிசனத்திற்கு இவ்வளவு கொடுக்கவேண்டுமென்ற கண்டிப்புக் கிடையாது உண்டியல்போட்டவர்களுக்கும், போடாதவர்களுக்கும் வித்தியாசமே கிடையாது. இதனை நோக்குங்கால் ஈசன் எல்லோரிடத்தும பக்ஷபாதமின்றி ஒரேவிதமாக விளங்குகின்றார் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளங்கும். இவ்விடத்திலுள்ள ஜனங்கள் ராதையைத்தான் போற்றிவருகிறார்கள். ருக்மணி என்ற நாமத்தைக்கூட அவர்கள் மறுக்கின்றார்கள். சதா "ராதேசம்", "ராதேசம்" என்றுதான் பஜித்து வருகிறார்கள். இதனால் பக்தி குறைவென்று எண்ணுவதற்கில்லை. அவரவர்கள் தங்கள் தங்கள் அனுஷ்டானங்களை ஒத்து போற்றி வருகிறார்கள்.

பகவான தான் பால்யகாலத்தை கழித்த இடங்களாகிய கோகுலம், கோவர்த்தன், பிர்ந்தாவானம் என்னும் க்ஷேதரங்களைப் பற்றியும், கீதையை உபதேசித்த இடமாகிய குருக்ஷேத்திரத்தை பற்றியும், இனிவரும் சஞ்சிகைகளில் காணலாம்.

R. நாகராஜன்,
புதுக்கோட்டை.

கல்வி.

“அரிது அரிது மானிடராதல் அரிது” என்பது நம் தமிழ் மூதாட்டியின் வாக்கியம். இது அவள் முருகவேளுக்குக் கூறிய தாகும். அவளது வாக்கிற்கொப்ப, மக்கள யாக்கையில் பிறப்பது அரிதினும் அரிது என்பதை எவரும் மறுக்கொணாது. அரவம் பரிக்கும் இவ்வவனியின்கண் அரைவனால் ஆக்கப்பட்ட எண்பத்து நான்கு நூறாயிரம் ஜீவராசி பேதங்களுள், மூவகீற்றறிவுடைமாந் தர். பிறவியே சாலசசிறப்புடைத்தாம். ஆறறிவுடை மக்கள், தேவர் உயர்திணையின்பாற்படுவர். ஏனையவிலங்குகள், ஊர்வன, பறப்பன, நீர்வாழ்வன ஆகிய இவையாவும் அஃறிணையின்பாற் சேரும். உயர்திணைப் பொருள்களாம் மாந்தரும், அமரருமே, கைவல்யத்தை எளிதில் சாதித்துக்கொள்ளவேண்டியதற் கனுகூல மான சாதகங்களைப் பெற்றோர். உயர்பதவியாம் வீடடைவதற்கு உரியோர் அவரே என்பதை, அவர்கள் அகல்விசும்பை எளிதின் கண்ணுறக்கூடிய சக்தியுடையோர்களாயிருத்தலால் அறிக. இவ் வாறே மிருகமாதி அஃறிணை ஜீவவர்க்கங்கள தரையை நோக்கிய வண்ணம் அலைந்து திரிந்து உழலுவதால், பேரின்பவீட்டைப் பற் றிய ஞாபகமே அவைகளுக்குச்சிறிதும் கிடையாது என்பதையும் உணர்க. ஆனால் அவைகள் தம் நடக்கையில் தூய்மையை அனுச ரிப்பின், படிப்படியாய் உயர்ந்த ஜன்மங்களடைந்து, கடைசியில் பெறற்கரிய மானிடப்பிறவியை அடையும். நம் முன்னோர்களா கிய ரிஷீஸ்வரர்கள், மாந்தரும், இவைகளைக் கடைத்தேறும்படி செய்யவல்ல முறைகளை அனுட்டிக்கும் வண்ணம் பற்பல ஏற்பாடு களைச் செய்துளளார்கள். இவைகள் பெரும்பாலும் அந்தணருக் கும், சிறுபான்மை அன்னோரல்லாத மற்றையோருக்கும் உரியன. விப்பிரருள் ஆதிகால முதல்கொண்டு கையாடப்பட்டுவரும் ஆபோ ஜனம் முதலிய கிரியைகள், ஈ எறும்பு முதலிய ஈனஜந்துக்களை உயர்பிறவி அடையும்படி செய்யவல்லன. உண்டி கொண்டபின்பு ஒரு சிறு கவளம் அன்னத்தோடும், இலையை வெளியில்கொண்டு போய் எறியுமபடி, இன்றும நாளும ஆன்றோ கழுறுவதை நாம்

கேட்கலாம். இது எதற்காக?' இதன் உண்மையான இரகசியத்தைப் பெரும்பானமையோர் அறியார் என்பதே எமது துணிபு. அதன் உண்மையைச்சிறிது கூறுதும். மனிதன் உண்டு எஞ்சிய உணவில் அவனது ஜீவஜடசக்தி அணுக்கள் நிரம்பியிருக்கும். இதைத் தின்று ஜீவிக்கும் காகம், சுவானம் முதலிய பிராணிகளின் சரீரத்தினுள் சென்று பரிணமிக்கும். அப்பொழுது இவைகளுக்குத் தமக்கு அன்னமிட்டவனை மறவாதிருக்குமாறு செய்யவல்ல உணர்ச்சியொன்று தானாகவே தோன்றும். ஆகவே அவைகள் அம்மனிதனை மறவாது பிரதிதினமும அவ்வேளையில—உண்டபின் இல்லையைக் கொணர்ந்து வெளியில் எறியுந்தருவாயில்—அவனது வீட்டின் வாயிலில ஆவலோடும காத்திருக்கும். கடைசியாக அந்தய காலத்தில அவைகளுக்கு அன்னமிட்ட மனிதசொரூபமே மனதின் முன் நிற்கும். அவனையே நினைத்துக்கொண்டு அவைகள் உயிர் துறக்குமாதலின், அவைகள் மறுபிறப்பில மானிட ஜன்மத்தை அடையினும அடையும் எனெனில், அந்தியகாலத்தில் மனதில் எஞ்சியிருக்கும் நினைவே மறுபிறப்புக்கு வித்தாம். நாம் மிகவும் அற்பமாய்க் கருதும் "இச்செய்கை இத்தகைய அபாரமான பலனைக் கொடுக்குமானால், இன்னும் உள்ள பிறவும் எப்பேர்ப்பட்டவையாயிருக்கமாட்டா? "மறமொன்று விரித்தல்" என்பதின் பாற்படும் எனஅஞ்சி, இதை இதனோடு நிறுத்தி மேலே நாம் கூறவந்ததைப் பகர்வோம. மனித ஜன்மமே என்றும் அழிவில் பேரின்ப வீட்டை அடைவதற்குரிய முக்கிய சாதனமாகும் என்பது இது காறும கூறியவற்றால் இனிது விளங்கும். மனிதனின் உயர்ந்தோர் தேவர். அவர்கள் இன்பநுகர்ந்த வண்ணமே இறுதியில் மேன் மேலும் புரியும் புண்ணியச செய்கைகளினால் எளிதில் முக்தி அடைவோர். முக்தி அடைதல் எனின் தேஜோமயமான சரீரத்தைப்பெற்றுப பரம்பொருளினிடம இரண்டறககலத்தலேயாம்.

இனி, உலகில் உற்பவித்த ஒவ்வொரு படைப்புப்பொருளுக்கும், அதற்கேற்றபடி பழக்கவழக்கங்கள் இயற்கையாகவே அமைந்துள்ளன. அவ்வாறே வெவ்வேறு பாஷைகளும் அவற்றினிடையே விளங்குகின்றன. அவைகள் தத்தம் உணர்ச்சியைத் தம்மினத்த

வருக்குத் தமக்கேற்பட்ட பாஷையில் தெரிவித்துக் கொள்ளு கின்றன. ஆனால் அவைகளின் பாஷையை அறியாத மாந்தர், அவைகளுக்கு உணர்ச்சி சிறிது மில்லையென்று தம் பேதமை மேலீட்டால் கருதி, அவைகளை இன்னல்கள் பலவற்றிற்கு உள் ளாக்கு கின்றனர். முன்காலத்து அரசாண்ட மன்னரிற் பலர்—உதாரணமாக் விக்கிரமாதித்த அரசன்—பட்சி பாஷையும் மிருக பாஷையும கற்றுத்தேர்ந்திருந்தனர் என்பதே அஃறிணைப்பொருள் களுள்ளும் சம்பாஷணை மனிதரைபபோலவே நடந்தேறுகின்றது என்பதற்குப போதிய சான்றாகும. மானிடவர்க்கத்திடையே எவ்வாறு தனித்தனி பாஷைகள வழங்கிவருகின்றனவோ, அஃதே போல், நசனினும் தாழ்ந்த ஜீவராசிகளிடத்தும் பலவகைப்பட்ட வாசகப்போக்குகள் உள்ளன என்பதை மேதையர் ஒருவரும் மறுக் கத்துணியார். இது நிற்க, மானிடர் தத்தம் பாஷைகளில் காலஞ் செலலச்செலல நவநவமான சீர்திருத்தகளை "பழையன கழிதலும புதியன புகுதலும் வழுவலகால வகையினனே" என்றவாறு புக விட்டு ஒருவாறு ஏற்றத்தாழ்ச்சி பேதங்களை உண்டுபண்ணிக் கொள்ளுகின்றனர். இஃது அவர்கள் அறிவின் முதிர்ச்சியின் போக்கையே அனுசரியாநிற்கும். ஆனால் மிருகங்களுக்கோ, அன்றி எப்பேர்ப்பட்ட அஃறிணைப் பொருளகளுக்கோ இவவாறு செய்ய ஒருசிறிதும் இயலாது. ஏனெனில அவை ஐயறிவுயிர்களும், அதற் கும் கீழ்ப்பட்ட அறிவுடையவைகளுமாம். பகுத்தறிவு என்பது அவைகளுக்கு அணுவளவுங் கிடையாது. ஆகவே அவைகள் அனாதிகாலந் தொடங்கி, இறைவனால் தத்தமக்குக் கற்பிக்கப்பட்ட பாஷையை யாதொரு வேறுபாடுமின்றி அனுசரித்து தம்தம அலு வல்களைச் சாதித்துக்கொள்ளும் இயல்புடையவையாய் இலங்குகின் றன. என்றேனும் நாம் ஒரு குறிப்பிட்ட மிருகமோ, அன்றி பட் சியோ, புதிதான—அதற்கு எனவரையறுக்கப்பட்டதி னின்றும் மாறான—குரலில் சப்தம் செய்வதைச் செவியுற்றதுண்டோ? அவ் வாறே அவைகள் பழக்கவழக்கங்களிலும் ஏதேனும் மாறுபாடு கள் காணக்கண்டறிந்ததுண்டோ? தூக்கணாங் குருவி ஆதிகாலத் தில் எப்படிக்கூடுகட்டிக்கொண்டதோ அதுமாதிரியேதான் இப் பொழுதும் அமைத்துக்கொள்ளுகின்றது. கணையான் என்று

கூறப்படும் வெள்ளெறும்புகள் தலைமுறை தலைமுறையாக மண்ணினாலேயே வேற்றுமை சிறிதுமின்றி வீடுகட்டிக்கொள்ளுகின்றன. இவைகள் பகுத்தறியும் சக்தி இன்றி இயற்கையறிவுமட்டுமே கொண்டுள்ளதின் காரியங்களாம். இதுகாறும் கூறிப்போந்ததினின்றும் அறியக்கிடப்பது யாதெனில் மானிடன் ஒருவனே தன் பகுத்தறிவின் முதிர்ச்சியினால், காலத்திற்கேற்ற கோலப்படி தனக்கு வேண்டிய சௌகரியங்களை அமைத்துக்கொள்ளக் கூடியவனாயிருக்கின்றான் என்பதும், அவனினும் தாழ்பிறப்புடைய மற்றைய ஜீவன்கள் தத்தம் நிலை, பழக்கவழக்கங்கள், சம்பாஷணை ஆகிய இவற்றில் இம்மியளவும் வேற்றுமையின்றி வாழ்கின்றன என்பதுமே. ஆகவே ஈசுவரனால் சிருஷ்டிக்கப்பட்ட எல்லாவித ஜீவராசிகளும் தத்தமக்கென ஒவ்வொரு பாஷையைக்கொண்டுள்ளன என்பதை விளக்குவதே எம்கருத்தாம். இனி நம் விஷயத்தின் நோக்கை அனுசரிப்போம். ஒருவனுடைய சுகத்தையோ, துக்கத்தையோ, அன்றி மற்ற எவ்வித உணர்ச்சியையோ பிறரொருவருக்கு அறிவிப்பதற்கு தகுந்த பாஷையொன்று இருத்தல் வேண்டுவது அவசியம் என்பது இனி தெள்ளிதின் விளங்கும். பாஷை இருவடிவமுடையவதாயிருக்கும். ஒலிவடிவுமட்டும் கொண்டது ஒன்று. மற்றொன்று ஒலிவடிவோடு, வரிவடிவுங் கூடியதாம். ஒலிவடிவோடுமட்டுமே கூடிய பாஷை முக்கியமாய் ஆறறிவுயிரினுங் கடைப்பட்ட ஜீவராசிகளினிடையும், நாகரீக வாசனை இன்னது என்பதே அறியாத காட்டு மிராண்டிகளிடத்துமே காணப்படும். இத்தகைய பாஷை மனிதனின் முன்னேற்றத்திற்கும் ஒரு சிறிதும் பயவாதொழியும். நாம் இந்த நோக்கிற்கனு குணமான வரிவடிவோடுங்கூடிய பாஷையே கொள்ளல் வேண்டும். இதுவே மனிதனின் முன்னேற்றத்திற்குரிய ஓர் உயர் அருஞ்சாதனமாம். ஆகவே வரிவடிவோடுங்கூடிய பாஷையே சாலச்சிறப்புடைத்து என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. வரிவடிவம் என்பது எழுத்துக்களே. தற்காலம், தண் கடலையே ஆடையாக உடுத்த இம்மாநிலத்தில் எண்ணிறந்த பாஷைகள் வழங்கிவருகின்றன என்பது பிரசித்தம். ஆக்கியோன் அறிவு முதிர்ச்சிக்கேற்ப அவ்வம்மொழிகளும் ஒன்றற்கொன்று இலக்கிய இலக்கண

நெறிகளிற் சிறந்தும் குறைந்தும் அமைந்துவிடக்கின்றன என்பதும் வெளிப்படை. பாஷாஞானம் சித்திப்பதற்குக் கல்வி இன்றியமையாதது என்பது எவரும் ஒப்பமுடிந்த தொன்றாகும்.

“கல்வி” என்ற சொல் கற்றல், அறிவு, வித்தை எனப்பலவாறாகப்பொருள்படும் கற்றல் என்று பயனளிக்கும் சமையம் தொழிற்பெயராகவும், அறிவு, வித்தை என்று அர்த்தந்தரும் அமையம் தொழிலாகு பெயராகவும் கருதப்படும். ‘பொருண் முதலாறோடளவை சொற்றானி, கருவிகாரியம் கருத்தனுதியுள், ஒன்றன் பெயரானதற்கியை பிறிதைத், தொன்முறையுரைப்பன ஆகுபெயரே” என்று ஆகுபெயரின் இலக்கணத்தை நன்னூல் கூறுநிற்கும். “கல்வி” என்னுந் தொழிற்பெயா “கல” என்ற பகுதியினடியாகப்பிறந்தது. பகுதி பெரும்பான்மையாய் எப்பொழுதும் ஒருமை ஏவல்வினை முற்றாகவே இருக்கும். “கல்லு” என்பது “கல்” என்பதின் பேதமே. கல்லுதலாவது தோண்டுதல், பறித்தல் எனப்பயன்தரும். இஃது தோண்டுவது விஷயங்களைக்கூர்ந்து ஆராய்தல் எனவே அர்த்தம்படும் ஆகவே, “கல்வி” என்னும் தொழிற்பெயர், யாதொரு விஷயத்தை ஆழ்ந்து ஆராய்தல் என்றும், தொழிலாகுபெயர், இவ ஆராய்ந்தறியபபட்டது ஒன்று என்றும் பொருள் பயவா நின்றன. “கல்வி” என்ற தமிழ் மொழிக்குச் சரியான வடமொழிப்பதம் “விதயா” எனபது. இதனின்றும் ஏற்படுவது யாதெனில் விஷயங்களைச் சரிவரத தெள்ளிதின் ஆராய்ந்தறியும் ஞானமே “கல்வி” எனபபடுவதாம். நம்முன்னோராகிய வடமொழிவாணர் இத்தகைய ஆராய்ச்சி ஞானத்தை அறுபத்துநான்கு கலைஞானங்களெனப் பகுத்துள்ளார்கள். இவ்வறுபான் நான்கினுள் பலவகைப்பட்ட கலைகளும், கைத்தொழில்களும் அடங்கும் கைத்தொழிலும கல்வியேயாம் என்பது தேற்றம். அவ்வக்கலைகளின் இலட்சணங்களை விவரித்து உரைப்பது நூலாகும். கற்றற்குரிய விஷயங்களை இது செவ்விதின் புலப்படுத்தும் “மரக்கோட்டம் தீர்க்குமதுபோல் மாந்தர், மனக்கோட்டம தீர்க்கும் நூல் மாண்பு”, அதாவது நூல் மரக்கோட்டம் தீர்ப்பதுபோல், இவை மாந்தர் மனதைச் சீர்திருத்தலால நூல் எனவே பெயரிடபபட்டன. ஆகவே “நூல்” என்பது உவமையாகு பெயர் என்பது போதரும்.

நனனூலார் நூலின் பயனைக் கூறவந்தவிடத்து "அறம்பொருளின்பம் வீடடைதல் நூல் பயனே" என்றும், மற்றும் அதற்குரிய இலக்கணங்களையும் கூறிப்போந்தான். "நூல்" என்பதே "கிரந்தம்" என்று வடமொழியில் வழங்கப்பெறுவது. இவ்வாறே "ஆக்கியோன்" என்ற தென்மொழியாக் தமிழ்ப் பதத்திற்கு "கிரந்த கர்த்தா" என்பது வடசொல். சான்றோரால் ஆக்கப்பட்ட நூல்கள் "பொதுவில் இலக்கியம்" எனப்பெயர்பெறும் எதைக் குறித்து இலக்கணம உரைக்கப்படுகின்றதோ அது இலக்கியமாகும. அவ்விலக்கியத்தின அமைதியை விவரித்து விளங்க உரைப்பது இலக்கணமாம். ஆகவே இலக்கியம் என்பது இலக்கண நூற்படி முன்னோர் தந்தசெய்யுள் என நன்குபெறப படுகின்றது இதையே ஆங்கிலம் வல்லார் "Classical writings" எனப் புகல்வர். இதனின்றும முற்காலததில் யாவும் செய்யுள் நடையிலேயே எழுதப்பட்டுவநதன என்பதும், வசனநூல் சமீபகாலத்திலேயே தோன்றியது என்பதும் விளங்கும்.

(தொடரும்).

தமிழன்.

ஓர் வேண்டுகோள்.

பின்வருவனவற்றை நம "பைந்தமிழின்" மூலம் நமக்கு மேதையோர் எவரேனும் விளக்குவாராக.

"வீமனுக்கு மைந்தனார் வேதனாகும்
வேதனுக்கு மைந்தனார் ஈசனாகும்
காமனுக்கு மைந்தனார் வீமன்தம்பி
கந்தனுக்கு மாமனார் காமன்றானே
மாமனுக்கு மூன்றமையன் தந்தைகாவன்
ஆகிய இம்முறை உலகத்தில் வழங்கலாலே
இராமனுக்குத் தங்கை சீதையாகவேண்டும்
இராவணனுக்குத் தகப்பன் இராமன்தானே."

S. V. RAJAN.

மாருதிவிஜயம்,

அல்லது

அநும வரலாறு.

மாருதி வணக்கம்.

அஞ்சிலே யொன்று பெற்றான்
அஞ்சிலே யொன்றைத்தாவி
அஞ்சிலே யொன்றாக
வாரியர்க்காகவேகி
அஞ்சிலே யொன்று பெற்ற
வணங்கைக் கண்டயலாரூரில்
அஞ்சிலே யொன்றை வைததான்
அவனன்மை யளித்துக்காப்பான்.

கலைமகள் துதி.

பெருந்திருவுஞ்செய மங்கையுமாகியென் பேதைநெஞ்சில்
இருந்தருளுஞ் செஞ்சொல் வஞ்சியைப்போற்றி லெல்லாவுயிர்க்கும்
பொருந்திய ஞானந்தருமின்பவேதம் பொருளுந்தரும்,
திருந்திய செல்வந்தருமழியாப் பெருஞ் சீர்தருமே.

முதற் கடவுள் வணக்கம்.

வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகியானெனதென்றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே.

அத்தியாயம் 1.

[பிறப்பும் பாலலீலையும்].

முன்னீராடை யணிதாக்கொண்டு நிலைகுமிப்பூமண்டலத திற்கேயொருதிலகம் போன்றதும, எக்காலும் சீருஞ்சிறப்பும் மல்கி நின்றுலவுவதுமாகிய நம்பிரதிய வளநாட்டிலே, முன்னம ஒரு கால் கேஸரி என்னும் பெயர் கொண்ட வானரனொருவன் தன் னருமைப் பாரியையாகிய அஞ்சனை யென்பாளுடன் இனிதே

வசித்து வந்தான். அவ்வாறு வசித்து வருநாளில் ஒரு நாள், அவ்வஞ்சனை வாயுதேவனைக்கண்டு காமுற அத்தேவனும் தன்னுற்றலால் அவளுக்கு ஒரு புத்திரனை யனுக்கிரஹித்துப்போயினன். பின்னுட்சென்ற பின்னர் அவளுக்கு ஆஞ்சனேயனென்ற ஒரு புத்திரன் பிறந்தான். அக்காலை அவனது பேருருவையும் அதற்கியையுமாறிருந்த திடத்தையுங்கண்ட வானோர், தம்மை யாக்கர்களின் துன்பத்தினின்றும் விடுவிக்கவல்ல அற்புத பானு அவ்வஞ்சனை வயற்றி லுதயமாயினனென்று ஆனாதித்துப் பேராவாரத்துடன் மலர்மழை பொழிந்தனர். துந்துபி முதலிய பலவித விசைக்கருவிகளையும் இசைத்தனர்.

நிற்க, அஞ்சனாதேவியின் அருமைப் புதல்வனாகிய ஆஞ்சனேயன் பிறந்தவுடனே பசிப்பிணி பொறுக்கலாற்றாது, கூகாவென்று கதறலாயினன். அது கண்ட அஞ்சனாதேவியும் சிவந்த நிறம்வாய்ந்த பலவிதக் கனிகளைக் கொணருவதாகச் சொல்லிப் போயினள். இதற்குள், முழுமுதற் கடவுளே பூவுலகமாக்களின் அஞ்ஞான விருளைப்போக்க வந்தாலென்னக் கீட்டிசையிற் பகலவன்தன் வெய்ய கிரணங்களைப் பரப்பி வரலாயினன். சூரியனது சிவந்த கிரணங்களைக் கண்ணுற்ற வாயுபுத்திரன், அச்சூரியனையும் தந்தாய் சொல்லிய கனிவகைகளிலொன்றுக்கொண்டு, குரீலெனப்பாய்ந்து, அவ்வுதயபானுவை பிறுகப்பறறினர்.

இஃதிவ்வாறாக, கிரகணகால மணுகியும் சூரியனை விடாதொழிந்த மாருதியின் செயலைக்கண்ட இராகு, தேவர்கோனிடம் ஓடோடியுஞ்சென்று, அவனது அடியிணைகளைப்பற்றி, "எவ்வளவே, தேவர்க்கிறையே! தாமிதுகாறும் சூரிய சந்திரர்களைக் கிரகண காலத்திற் பிடிக்க எனக்கன்றோ உரிமையளித்திருந்தீர். இப்பொழுது அவ்வுரிமையை விலக்குமாறு யான் செய்த குற்றந்தானென்னோ? ஐயனே பொறுத்தருளும். அடியேனைக் காத்தருள்வீர்" என்று இரங்கிக் கூறுவாராயினன். கூறுதலும் வாசவன் தனது ஈரிருமருப்புடைய ஐராவதத்தைக் கொணருமாறு ஆஞ்ஞாபித்துப் பின்னர் அஃதூர்ந்து சூரியனிருக்குமிடஞ் சேர்ந்தான். ஆஞ்சனேயனைக் கண்டதும் இந்திரனுக்குச் சீற்றம் மிகுத

லாயிற்று. கடைக்கண்கள் சிவக்க, மிகுந்த கோபக்குறியுடன் இராகுவை நோக்கி, "நீ இப்பொழுது போய்ச் சூரியனைப்பிடி. நான் உன்னைக்காத்து நிற்கிறேன்" என்றனன். அவனும் அப்படியே சூரியனைப் பிடிக்கச்செல்வதைகண்ட ஆஞ்சனேயனும் இராகுவின் கவுளில் ஓங்கி யறைந்து அவனையனுப்பி, பக்கத்தில் திரும்பிப்பார்க்க, அழகிய சிந்தூரத்திலகம் தீற்றிய இந்திரனது சுவேதவாரணத்தைக் கண்டு அதன திலகத்தையும் ஒரு கனியாக வெண்ணி அதன்மேற் பாய்ந்தான். அதுவே தக்கவமய மெனக்கொண்டு அம்மகவான் ஆஞ்சனேயனின் கவுளில் தனது வச்சிராயுதத்தினால் ஓங்கியடித்தான். அது பொறாது அனுமான (ஹநு-கவுள்; கதுப்பு) மூர்ச்சையடைந்து அடியற்ற மரமபோற் பூமியிற சாய்ந்தான்.

இந்தசசெய்தி சீக்கிரத்திலேயே வாயுதேவனுககெட்டியது. அது கேட்டவுடன், அவர் மென்மையான தேகம படைத்த புழுவைப்போற் துடித்துப் பதைப்புடன் தேவேந்திரனிடம் சென்று, "ஓ. இந்திரா! உனது ஆயுதச செருக்கினாலோ, அன்றி உனது படைத்திறத்தினாலோ நீ யென்றனருமை மைந்தனைக்கொன்றனை? உனது கருவத்தை அடியுடன் போக்குகினறேன்; கணத்துள் பார் என்றன் வீரியத்தை:" என்று சினந்து மொழிந்து, ஆஞ்சனேயனைக்கையிலன்புடனேந்தி, மூவுலகத்துயிர்களும் நாசமாம்படி தமது சுவாசத்தைத் தம்முள்ளேயடக்கி இமாசலததிலமைக்கப் பெற்ற பெரியதோர் பிலததுட்புகுந்தான். அபபோது சகல ஜீவப் பிராணிகளும சுவாஸிப்பதற்கின்றி வயிறு வீங்கி உயிா துறக்கவாயின. சில நாழிகைகட்குள் ஹோமம வேள்வி முதலிய கிரியைகள் யாவும் நின்றுவிட்டன.

இவையெல்லாங்கண்ட தேவர்களும் இருடிகளும் ஒருங்கே மறைமுதற்கிழவன் திருமுன்னர்ப்போந்து, "ஏ சர்வேசா! அகில புவனங்களைச் சிருட்டித்தவற்புதத்தேவனே! நின்னையன்றி எங்கட்கு அடைக்கலம வேறுண்டோ? தேவாதிதேவனே! நாங்கள் யாவரும் துன்புறுவதையறியீரா? வாயுதேவன் மைந்தனாகிய ஆஞ்சனேயனை, இந்திரன குலிசததினாலடிக்க, அசசிறுவன் மூர்ச்சையுற்

றுக் கீழேவிழுந்தான். அதனால் வாயுதேவன் கோபங்கொண்டு எங்கும் அணுவளவு வாயுவும் இல்லாமற்செய்து இமயமலைக்குகை யொன்றனுட் புகுந்துள்ளனன். இன்னும் சிறிதுநேரம் காற்றில்லாதிருந்தாலும் உலகத்தின்கண் ஹோமம் வேள்வி முதலிய நற்கிரியைகளொன்றையுங் காணவியலாது. தவிர, அமரரும் துன்புறுவர்" எனச்சொல்லி முறையிட்டனர்.

அதுகேட்ட வப்பிரமனும் சிறிதுநேரதாமதியாது பூவுலகஞ் சேர்ந்து, வாயுவிருந்த குகையுட்புகுந்து மூர்ச்சையாயிருந்த ஆஞ்சனேயனை யன்புடன் தடவிக்கொடுத்துத் துயிலெழுந்தவன்போலெழச்செய்து, தேவர் கோனுதியாயுள்ள எல்லாத் தேவர்களையும் அவரவர்க்கியன்ற வரங்களை யனுமனுக்களிக்குமாறு கட்டளையிட்டனன்.

அவ்வாறே இந்திரன் முன்னர் வந்து, "எனது வச்சிராயுதத்தினாலும் மற்றெவ்வகைப்படைக் கலத்தினாலும் இவனுக்கு மரணம் நேரிடாதிருக்கக்கடவது. என் வச்சிராயுதத்தினாற் கவுள்முறிந்த இவனுக்கு இனி 'அனுமான்' எனும் பெயர் உண்டாகக்கடவது. இவன் உலகில் மிகுந்த புகழுடன் வாழ்ந்துவரக் கடவன்" என்று சொல்லி ஒரு பொற்றாமரை மலரையும் அவனுக்களித்தனன். பின்னர், சூரியன், இவனுக்கு என்னுடைய கிரண வொளியிலே நூற்றிலொருபாகத்தை யான் கொடுத்தேன். இன்னும் யான் அவனைத்தக்க காலம் வருங்கால் சகல சாத்திரங்களிலும் நிபுணனாக்குவேன்" என்றும், வருணன் தனது ஒப்பற்ற பாசம் அனுமானைப் பிடிக்காதென்றும் இயமன் தனது காலதண்டம் அவனை மரணத்திற்குள்ளாக்காதிருக்கக் கடவதென்றும், குபேரன் தனது கதையாலவனுக்குச் சாவுநேராதென்றும், பின்னும் போரில் இளைப்பும் நோயும் ஏற்படாதிருக்கக்கடவனவென்றும், உருத்திரமூர்த்தி தம்முடைய சூலம் அவனுக்குத் தீங்கு செய்யாதென்றும், அசுவினி தேவர்கள், ஒருவிதமான நோயும் அவனை யணுகாதென்றும், சொல்லித் தத்தமுலகுக்கேகினர்.

இறுதியாக, பிரமதேவன் இவன் எனது பிரம தண்டத்தினால் நாசமடையாதிருக்கக் கடவன். இவன் எந்த அஸ்திரத்தினாலும்

மாணமடையாதிருக்கக்கடவன். இவன் தீர்க்காயுளையும் பேரியல் வையும் பெறட்டும் "என்றருளிப் பின்னர் வாயுதேவனை நோக்கி" ஏ தேவனே! இனி இவனால் உலகத்துக்கே பெரியதோர் நன்மை யுண்டாக விருக்கிறது. இவன் ஆதியந்தமற்ற வற்புதக்கடவுளாகிய ஸ்ரீ ராமமூர்த்தியின் சிரடியிணைகளைப் போற்றி அவருக்கு எவருஞ் செய்தற்கரிய தொண்டியற்றி, இரவி யுள்ளளவும் மாறாப் புகழ் பெற்றுச் சிரஞ்சீவியாய் வாழ்ந்து வருவன். யான் சென்று வருகிறேன். நீமனச் சமாதானம் அடைவாயாக" வென்றுசொல்லித் தம்முலகு மீண்டனன். வாயுதேவனும் அனுமானை அஞ்சனையிடஞ் சேர்த்து நடந்த செய்திகளை அவளிடம் நிகழ்த்திப் போந்தனன்.

இவ்வாறு பிரமதேவனாதியாயுள்ள தேவர்களிடம் வரம்பெற்ற வனுமான் தனக்கு நிகரொருவருமிலரென்ற செருக்குப்படைத்து, நெறிதவறாது கடவுளை யேற்று வழிபட்டுவரும் முனிவரர்க்கு இடையூறு செய்யத் தொடங்கினன். தபோதனர்களாகிய முனிச் சிரேட்டரின் ஆச்சிரமங்களிலும் யாக சாலைகளிலும் புகுந்து, யாகத்துக்கென்று தயாரிக்கப்பட்ட ஹோமத்திரவியங்களையும் கந்தமூல பலவர்க்கங்களையும் திருடித் தின்று, பல பால லீலைகளைப் புரிந்து வந்தான்.

இவ்வாறு செய்துவரு நாளில் ஒருநாள் அம்முனிவர்களுட் சிலர், "இவன் நமது பகவத் கைங்கரியத்தைப் பாழ் படுத்து கின்றனன். இவனால் நமது தவத்துக்கே விகாதம் நேரிடும் போற் றோன்றுகிறது. இவனையாம என் செய்தலாகும்? பிரமதண்டத்தினாலும் மாணமில்லாத இவனை எப்படியும் அடக்குத லவசியம். ஆனால் ஒன்று செய்தலாகும். இவனது வன்மை யிவனுக்கே தெரியாதொழியின் இவன் சேட்டைகள் ஒருவாறு ஒடுங்கும்," என்று தம்முள்ளே யெண்ணிக்கொண்டு, அனுமானைப்பார்த்து, "ஏ, துஷ்டச் சிறுவனே! இக்கணமுதல் உனது வன்மை யுனக்கே தோன்றாதிருக்கற் பாலதாகுக. உன்னைப் பலர் சேர்ந்து பலவாற்றாலும் தூண்டித் தூண்டி யுனது வன்மையையும் உன்னையும் தோத்திரம் செய்தால் அது உனக்குப் புலனாகக்கடவது" என்று ஒரு தலையாகச சபிததனர்.

இவ்வித சாபத்தை யேற்றவனுமானும் கணநேரத்துள் பற்கள் பிடுங்கப்பட்ட நாகம் போன்று தமதாணவம் அறவே யொடுங்க, அம்முனிவர்கள் அடிமிசைச் சாட்டாங்கமாய் வீழ்ந்து வணக்கத்துடன், "ஓ, தபோதனர்களே! நான் செய்தவையாவும தப்பிதம். அறியாப்பாலன் இயற்றிய துன்பங்களை மறநது சிறியனைக் காக்கவேண்டும். தயையுடன அடியேனை யேற்று எனக்கு வேத வேதாங்கங்களை போதிககவேண்டும. யானும் தங்கட்கு வேண்டிய பணிகளை யியற்றிப்பதம்பெற வுன்னி யுள்ளேன்" என மொழிந்தான் அதுகேட்ட அம்முனிவர்களும் அனுமானது பணிவைப் புகழ்ந்து அவன வேண்டியபடியே வேத வேதாங்கங்களை யவனுக்குக் கற்பித்தனர். மாருதியும தனது அதிதீக்ஷண்யமான அறிவினாலும் கோசர சக்தியாலுைம் சில நாட்களுக்குள் அவையாவும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தான்.

(தொடரும).

மதிப்புரை.

ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்.—இப்பெயர் புனைந்த ஓர் மாதாந்தரப் பத்திரிகை ஆங்கிலத்திலும தமிழிலும விஷயங்கள் உள்ளதாய் திருநெலவேலியிலிருநது செனற வப்பிரலமாதம் முதல் வெளிவருகிறது. தற்காலததில் நமது தென்னிந்தியாவில் சிசுக்கள் மாணங்கள் கணக்கற்றனவாய் இருபபது யாவரு மறிந்த விஷயம். பெற்றோர்கள் அறியவேண்டிய விஷயங்களும் தாயது வேலைகளும் சிசுக்கள் பாதுகாககும் முறைகளும் தெள்ளிய நடையில் யாவரும் படித்து பயனடையுமாறு செவ்வனே எழுதப்பட்டுள்ளன. தமிழ் இல்லங்களில இத்தகைய பத்திரிகைகள் இருப்பது வெகு பயனையளிக்கும். மிஸிஸ் அன்னு தாமஸ் என்னும் வைத்திய அன்னையார் இதன் பதிப்பாசிரியர். வருட சந்தா ரூ. 3. யல்லோரும் வாங்கி பயன அடைவார்களென நம்புகிறோம.

ஜீவானந்தபோதினி :—இம்மகுடம் வாய்ந்த பத்திரிகையின் முதல் இதழ் நமது பார்வைக்கு வந்தது. அதில் கதைகள் நவீன விஷயங்கள் எழுதப்பட்டுள்ளன. முதற்றெகுதி 20 பக்கங்கள் உள்ளது. வருட சந்தா ரூ. 1 அதிக சந்தாவாயினும் நல்ல காயிதத்தில் அச்சிடப்பட்டால் பலகாலம் பத்திரிகையை வைத்துப் பயனடையக்கூடும். சென்னை தங்கசாலைவீதி 176-ம் நெ வீட்டிலிருந்து வெளிவருகிறது.

பேராசிரியன் :—சென்னை முத்தியாலுபேட்டை புத்தகவியாபாரிகளான N. வெங்கட்டராயலு அண்டு சன் என்பவர்கள் இம்மாதப்பத்திரிகையை வெளிப்படுத்துவோர்களாவர். இதில் சிறுபிள்ளைகளுக்கு கல்வி பயிற்றும் முறைகளையும் மற்றுமுள்ள சிறுவர் சிறுமியர்க்கான கதைகளையும் பாலபோத சம்மந்தமான பாடங்களையும் செவ்வனே எளிய நடையில் வெளியிடுகிறார்கள். ஆரம்ப ஆசிரியர்களுக்கு இப்பத்திரிகை நற்பயனளிக்கும் என்பது திண்ணம். வருடசந்தா ரூபா 1.

கற்பகம் :—மாதமொருமுறை புதுவையிலிருந்து வெளிப்படும் ஓர் செந்தமிழ்ச்சஞ்சிகை. கல்வி, சாஸ்திரம், விவசாயம் முதலிய பொது விஷயங்கள் நன்றாக இதில் பதிப்பாகின்றன. பக்கங்கள் குறைவாகயிருந்தாலும் விஷயங்கள் படிக்கத்தக்கன வருடசந்தா ரூபா 1.

ரஞ்சித போதினி :—இப்பெயருடன் சென்னை அருணாசல முதலி தெரு மாணிக்க விலாசம அச்சுக்கூடத்திருந்து இப்பத்திரிகை வெளிவருகிறது. நமது பார்வைக்கு வந்துள்ள ஒரு சஞ்சிகையில் புராணக்கதை, கட்டுக்கதைகள், வேடிக்கைக் குறிப்புகள மலிந்திருக்கின்றன. உயர்ந்த காயிதத்தில் இன்னும் அதிக பக்கங்களுடன் வெளிவருமாயின் வெகுநலம். பத்திரிகைகள் குறைந்த சந்தாவைக்கருதுவதைப பார்க்கிலும சந்தாவை யதிகரித்து நல்ல காயிததத்தில் அதிக விஷயங்களை வெளியிடுவது நன்றென நாம என்னுகிறோம். இதன் வருடசந்தா ரூபா 0-14-0.

வேதம் :—நாஸ்திகம் அதிகரித்து தொன்னூன் முறைகுன்றி நவீன நாகரீகத்தில் அழுத்தப்பட்டிருக்கும் இக்காலத்தில்

இப்பத்திரிகையின் ஆசிரியர் ஸ்வாமி சிவத்யாநாநந்த மஹரிஷி இவ் "வேதம்" என்ற சஞ்சிகையை வெளியிட முன்வந்தது நந்தமிழ் நாட்டின் நற்காலமே. பலலாயிரந்தமிழ் மக்களுக்கு வேதவாக்குகளின் அருமையும பெருமையும வெளியிட்டு நமமதத்தின் மாக்ஷிமையைக்காட்டும் இம்மஹரிஷியின் ஊக்கத்துக்கு ஒப்புயர்வில்லையேயாகும். இம்மாதாந்தர சஞ்சிகைகளை வாங்கிப்படித்துப் பயனடைவது நம் தமிழ் நாட்டார்களது முதற்கடமையாகும். விலை முதலிய விஷயங்களுக்கு ரங்கூன் 31-32 பார்வீதியிலிருக்கும் வேத பிரோ மானேஜா அவர்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

ஞானசூரியன்:—வானப்பிரத்தம் சன்னியாசம் சுதந்தரம் வறுமை முதலிய விஷயங்களை பல தமிழ் நேயர்கள் எழுதியிருக்கிறார்கள். இப்பத்திரிகையும் உயர்ந்த காகிதத்தில் அதிகமான பக்கங்களுடன் வெளிப்படின் தமிழுலகுக்கு மிக நன்மையே. வருட சந்தா ரூபா 1—8—0. தஞ்சை ஜில்லா திருவாரூர் விஜயபுரமிருந்து மாதமாதம் வெளிவருகிறது.

ஜனரஞ்ஜனி:—இதன் முதல் இரண்டு பகுதிகளும் நமது பார்வைக்கு வந்தன. ஜனசமூகம் கல்வி, தேசசரித்திரம் மதம் சாஸ்திரங்கள் நாவல வேடிக்கை விநோதங்கள முதலிய விஷயங்களை வெளிப்படுத்துவதாக இபபதிப்பாசிரியர் வெளியிட்டிருக்கிறார். முதல் இரண்டு சஞ்சிகைகள போலவே எப்போதும் எல்லா பகுதிகளும் இருக்குமாயின் இதனை பயன் நனிதாகும். வருட சந்தா ரூபா 2. மதராஸ் கொண்டிசெட்டி தெரு 4-ம் நெ. வீட்டிலிருந்து வெளிவருகிறது.

தாருல் இஸ்லாம்:—நமது மகமதிய சகோதரர்களது மத சம்மந்தமான விஷயங்களும நபிநாயகரது திவ்விய வாக்கியங்களும் தமிழ்ப்பாஷையில் உயர்ந்த நடையிலும் சிறந்த அச்சிலும் வெளிவரும் இனிய மாதாந்தரப் பத்திரிகை—தமிழ் நாட்டு மகமதியர் ஒவ்வொருவரும் இபபத்திரிகையை வாங்கிப்படித்துப பயனடைவது அன்னவர்களின் முதற் கடமையாகும. இத்தமிழ் நாட்டில் இஸ்லாம் விஷயமாக வெளிப்படும் பத்திரிகைகளில் இத் "தாருல் இஸ்லாம்" போன்ற பத்திரிகை கிடையாது என்றே சொல்லி

னம். வருட சந்தா ரூபா 3. வெளியிடுவோர் தஞ்சை ஜில்லா நாச்சியார் கோவில் முஸ்லிம் சங்கத்தார்.

பிரஜாநு கூலன் :—இதன் பதிப்பாசிரியர் இந்நாட்டுக்குப் புதியவரல்ல. ஸ்ரீரங்கம் எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடுவின் கல்விப் புலனும் தமிழ் நடையும் வெகு உயர்ந்ததென்று சொல்வது மிகையாகாது. இதன் வயதும் 18-ஆய்விட்டது. மெஜாரிட்டிப்பருவ மடைந்ததால் வெகு ஊக்கத்தோடு இன்னும் பல் காலம்தமிழ் நாட்டில் இருந்து நன்மை புரியுமென்று வேண்டுகிறோம். வருட சந்தா ரூபா 2.

ஆயுள்வேதம் :—இவ்வருஷம் சித்திரை மாதமுதல் வேலூரிலிருந்து வெளிவரும் வைத்திய சுகாதார சம்மந்தமான ஒரு தமிழ் வைத்திய சஞ்சிகை. வருட சந்தா ரூபா 1. இதில் வெளிவரும் சிகிச்சைகள் வெகு சுலபமும் நிச்சயமுமானவையென்றே நம்புகிறோம். தமிழில் சிறந்த வைத்திய சஞ்சிகையில்லாத இக்காலத்தில் இப்பத்திரிகை வெளிவருவது மிகு அவசியமே.

குறிப்பு :—அடுத்த பதிப்பில் மற்றுள்ள மாதாந்தர வாரப்பத்திரிகைகளின் மதிப்புரைகள் வெளிவரும்.

பத்திரிகாசிரியர்.

ஜீவகாருண்யம்.

" ஜீவகாருண்யமுள்ள சகோதர சகோதரிகாள்!

" மோக்ஷமது பெருவதற்கு சூக்ஷமம் சொன்னேன்
மோகமுடன் பொய்களவு கொலைசெய்யாதே".

என்று அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றனர். ஆகலின் "கொலை, களவு, கள், காமம், சூது" (பொய்) என்னும் பஞ்சமா பாதகங்களிலும், கொலை பாவமே எல்லாவற்றினும் கொடியது.

அன்பர்களே! அக்கொடிய பாதகத்தை அகற்றினலன்றி "சர்வஜீவ காருண்யமுடைய சர்வேசன்" அருளைப் பெற முடி

யாது. இங்ஙனம், நெடியகடல் சூழ்ந்தப் பிரபஞ்சத்தின்கண் பெறுதற்கரிய மானிட தேகத்தைப்பெற்ற சகோதர சகோதரி களே!

“வேதநூல் பிராயம் நூறு மனிதர்தாம் புகுவரேனும்
பாதியு முறங்கிப் போகும் நின்றதில் பதினை யாண்டு,
பேதைபா லகனதாகும் பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகருளானே”

என விளம்பியபடி நாம், இந்நிலவுலகின்கண் ஜீவித்திருப்பது நூறுண்டாயினும், அவற்றுள் நித்திரையில் ஐம்பதாண்டும், பால் யத்தில் பதினைந்தாண்டும் போக, மிகுதியுள்ள வாழ்நாளில், “பிணி, பசி, மூப்பு, துன்பம்” முதலியவைகளை யநுபவித்து, மறுமையி லடைய வேண்டிய மோக்ஷப்பதவியைத் தேடிக்கொள்ள வேண்டி யவர்களானபடியால் முத்தியடைவதற்கு காரணமாயுள்ள “ஜீவ காருண்ய” ஒழுக்கத்தை நம்முயிருள்ளபோதே வாழ்நாளை வீணா ளாகக் கொள்ளாமலும், ஒரு “ஜீவன்” களையும் கொலை செய்யாம லும், தன்னுயிர்போல் மண்ணிற் பிறந்த உயிர்களனைத்தையும் பாதுகாத்தும், வருவதோடும் அச் “சீவன்” களை வதை செய்யாம லும் “ஜீவகாருண்ய” ஒழுக்கமுடையவராயிருத்தல்வேண்டும் இஃதைப் பார்க்கிலும் வேறொன்றும் சிறந்த தருமமில்லை யென் பதே வேதத்தின் சம்மதம். (இதுநிற்க).

மனிதனுக்கு “மாமிச உணவு” தேவையில்லை யென்றும், காய், இலை, கிழங்கு, பருப்பு மிதலிய பதார்த்தங்களே ஆயுளை விர்த்தி செய்தும், பாதநில் முத்தியைத் தருகுமென்றும், அவர் களே “ஜீவகாருண்யம்” உடையவர்களென்றும் இதிகாச புரா ணங்களெல்லாம் முறையிடுகின்றன. மேலும், வேதநாயகம் பிள்ளையவர்கள் கூறிய நீதி நூலிலும்,

“காய் இலை கிழங்கே தக்க கறியதாம் அதனை உண்போர்
ஆயுள்நாள் வளரும் வாழ்த்தல் அருந்துவோர் உயிர்கட்கெல்லாம்
தாயெனும் ஒரு கருத்தன் சாபத்தைப் பறிப்பாரென்னில்
பேயெனும் கொடிய அன்னோர் பிழைக்குமாறு என்கொல் அம்மா!”

என்று கூறியிருக்கிறபடியால், கந்த மூர்த்திகளை விட்டுவிட்டு “ஜீவவதை” செய்து மாமிசத்தை உண்டு, மீளா நரக துன்பத்திற் காளாவது உத்தம சென்மமாகிய மானிடர்கட்கேற்ற ஒழுங் கல்லவே ;

சகோதர சகோதரிகாள்! மனதை அங்குமிங்கும் அலையு விடாது கவனியுங்கள்! ஒவ்வொரு ஜீவாத்மாவுக்கும் நம்மைப் போலவே, இன்பதுன்பங்களைக் கண்டறியும் சக்தியை “ கடவுள் ” தந்தருளியிருக்கின்றார் என்பதை ஒவ்வொருவரும் ஆழ்ந்து யோசித்துப் பார்க்குமிடத்தில் மனதிற்குப் புலப்படாமற்போகாது.

அன்பர்களே! நம்முடைய தேகத்திலே ஒரு முள்ளாவது அல்லது, வேறுயாதேனுமொரு ஆயுதங்கள் பட்டு புண்செய்துவிட்டால் நமக்கு எவ்வளவு அவஸ்தையையும், மனதிற்குத் துன்பத்தையும் தருகிறது. இப்படியிருக்க, நம்மைப்போன்ற ஒரு “ஜீவனை” ப்பிடித்து அதை வதை செய்யும்போது அச்சீவனின் “ஜடம்” துடிதுடிப்பதைப் பார்த்தும். அப்பிராணி அவஸ்தை யடைகிறதென்பதை உணராமலும், அஃது கூச்சலிடுவதைத் தனக்குப் பொறுக்க முடியாத துன்பத்தைத் தருகிறதென்பதைக் கூறிற்றென்பதை அறியாமலும் மூர்க்கத்தனத்தினால் அச்சீவனை கொலைபுரிபவன் மனதை எதற்கொப்பிடுகிறது, அந்தோ! கொலைபாதகர்களே! நீதித்துரோகிகளே! ஆஹா! உங்கள் மனமென்ன இரும்போ! கருங்கல்லோ! செவிகளிரண்டும் செவிடோ! கண்களிரண்டும் குருடோ? கொலைபாதகம் பெரிதே!

(தொடரும்)

எஸ். கே. கோவிந்தசாமி பிள்ளை.

பெண்கல்வி.

(68-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

இவர்கள் தங்களது வேலைக்காரர்களுக்கு அதிகத்துன்பங் கொடுக்க மாட்டார்கள். ஜீவகாருண்யம், தயை, தேசபக்தி, இராஜபக்தி, பெற்றோர்கள் பக்தி இவைகளிவர்களிடஞ் சேர்ந்து

விளங்காநிற்கும். இவர்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பாடங்களை கற்பிப்பார்கள். இதுவன்றி தெய்வபக்தியை பற்பல விதங்களாக அறிவிப்பார்கள். இங்கு (Spartans) ஸ்பார்ட்டன்ஸ் என்ற ஒருவகை ஆதிகிரேக்க ஜாதியின் பெண்களை கவனிக்கத்தக்கது. "நூலைப்போல் சேலை, தாயைப்போல் பிள்ளை" என்பதுபோல தாய் கெட்டவர்களாயின் பெண்களும் (பிள்ளைகளும்) கெட்டவர்களாகவே இருப்பார்கள். "தாயைத் தண்ணீர் துறையில் பார்த்தால் பெண்ணை வீட்டில் பார்க்க வேண்டுமா? என்ற மேலோர்கள் அமிர்தமான பழமொழியைச் சிந்தித்துப் பாருங்கள்.

பெண்களின் கல்வியால் புருஷர்களுக்குங் கல்வி பெருகும். ஏனெனில் பெண்கள் தங்களை (யாதாவது ஒரு கேள்வி கேட்டுவிட்டால் தங்களுக்குத் தெரியாது இயம்புவார்களாயின் ஏளனஞ் செய்வார்கள் என்று அஞ்சி) விட கல்வியில் மிஞ்சாதிருக்கும்படி, அவர்களுக்குக் கல்வியில் மனஞ் செல்லும். இங்கு தாய்ப்பாஷைக் கல்வியைக் கூறுவதால் பெண்கள் தாய்ப்பாஷையில் விருத்தியடைந்து தாய்ப் பாஷையிலே ஓர் கேள்வி கேட்டுவிட்டால்; உதாரணமாக:—முருகக்கடவுளுக்கு கந்தன் என என் பெயர் வந்தது? என்றால் புருஷன் அதற்குப் பதிலளிக்காவிட்டால் இவனுக்கு அவமானம் உண்டாகிறது. அதனால் இவன் அன்று முதற்கொண்டு கல்வியில் தேர்ச்சிபெற ஆரம்பிப்பான். ஆனதால் பெண்களின் கல்வியால் புருஷர்களுக்கும் கல்வி விருத்தியாகும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்காநிற்கும்.

புருடர்கள் அன்னியதேசம் போயிருக்கையில், கடிதம் போட்டால் பிறருக்குத் தெரியாது, தாங்களே படித்தறிந்து தன் புருஷன் மனதிற்கிசைந்தாற்போல் பதிலளிக்கலாம். பொருளுக்குத் திருடனைக் காவல் வைத்ததுபோலும், ஆட்டிற்குப் புலியைக் காவல் வைத்ததுபோலும், பாலுக்குப் பூனையைக் காவல்வைத்ததுபோலும், புல்லுக்குப் பசுவைக் காவல்வைத்ததுபோலும், கல்வி வாசனையேயில்லாத பெண்கள் கொழுநனுடைய கடிதங்களைப் பிறரிடங்காட்டித் துன்பப்படுகின்றனர். துன்பப்பட்டிருக்கின்றார்கள். இனி [illegible] என்பது திண்ணம். பெண்கள்

கற்றறிந்தவாகளா யிருப்பாாகளாயின. ஆகாரிதிகளை சுத்தமாயும், தேகத்தை சுத்தமாயும், காற்று வீசும்படி நல்ல சௌகர்யமான வீடுகளை சுத்தமாயும்; ஆடைகள் சுத்தமாயும், புனல் சுத்தமாயும் வைத்திருப்பார்கள். இதனால் யாதொரு வியாதியும் தங்களுக்காவது, தங்கள் காந்தனுக்காவது, சேய்களுக்காவது மற்றும் தங்களுடன் கூடிவசிக்கும் பந்துக்களுக்காவது வாாமற்றடுக்கும் ஓர் சஞ்சீவியாகும். கல்வி யில்லாதவர்கள் நோய்களுக்கு இடங்கொடுத்து, அதனால் தாங்களும், தங்களைச் சேர்ந்தவர்களுங் கஷ்டப்படுவார்கள் என்பதுண்மை. தற்காலத்திலும் கல்வி வாசனையேயறியாத சிறுசிறு கிராமங்களில் பெண்களென்ன, ஆண்களென்ன, சிறுவர்களென்ன முதலிய யாவருங் கஷ்டப்படுவது கண்கூடு.

கல்வியறிவுடைய பெண்கள் தத்தம குடும்பங்களில் தங்களால் ஆனவரையில் சண்டை சச்சரவில்லாது நீக்கி சமாதானமாயிருப்பார்கள் அவ்வாறு சண்டை சச்சரவுகள் ஏற்பட்டாலும் அதைவெளிக்குத் தெரிவிக்காமலிருப்பார்கள். கல்வியறிவடையாதவர்கள் எப்பொழுதும் சண்டை சச்சரவுடன் சமாதானமின்றி வசிப்பார்கள். இங்கு கல்லாத பெண்களின் இழிவை ஓர் பாடலால் நோக்குங்கள் :—

> "எழுத்து வாசக மறியாதவள மட்டி
> ஏது மறியாளவள் சாண்டுவாள் சட்டி
> கழுத்திலே யவளுக்குத் தாலியைக் கட்டி
> காரியமில்லை யதுகாசிக்கு நட்டி."

என்று மேலோர் கூறியவாறு, இதுவரையிலும் நாம் கல்வியறியாத பெண்களின் இழிவையும கற்றறிந்த பெண்களின் உயர்வையும் கூறினோம. இங்கு இருவாகளையும் சீர்தூக்கி நடுவு நிலைமையாக செப்புவோமாயின், கற்றவர்களுக்கு என்றும உயர்வுதான், கற்றறியாதவர்களுக்கு இழிவுதான் என்பது புலனாகும். இங்கு கமபன், ஒட்டக்கூத்தா முதலிய புலவோர்கள் காலத்தில மிகவும் கீர்த்திபெயறு விளங்காநின்ற நமது மூதாட்டி ஔவையாரைக் கவனியுங்கள். யாா எக்கொடுமை செய்தாலும் அதை சகித்துக்கொண்டு மிகவும் பொறுமையுடன் அவர்களுக்கு இன்பத்தை அளித்து வந்தாாகள். ஆனதால் பெண்களுக்குக் கல்வி அவசியமாகும என்பது விளங்குகின்றது.

நாம் இங்கு நமது பெண்களுக்குத் தற்கால கல்வியாகிய ஆங்கிலம், ஆங்கிலங்கலந்த தமிழ் இவைகளைப் போதிக்கலாமா? அதனால் அவர்களுக்கு நன்மை யுண்டாகுமா? அல்லது தீமையுண்டாகுமா வென்று சற்று ஆராய்வோம். தற்கால ஆங்கில பாடசாலைகளாகிய எலிமெண்டரி பாடசாலைகளாகினும், உயர்தர பாடசாலைகளாகினும் நம்மதத்தைப் போதிப்பதல்ல; ஆங்கிலர் மதத்தையும், அன்னவர்கள் பாஷையையும் கற்பிக்கின்றனர். இராஜாங்கப் பாஷை கற்கவேண்டியது அவசியம். பைபில் உமதும் அப்படியே போதிக்கின்றனர். பாதிரிமார்கள் வைத்திருக்கும் எலிமெண்டரி பாடசாலையில் ஒவ்வொருநாளும் வேதத்தைப் போதிக்கின்றனர். வேதத்திலுள்ள கதைகளையே போதிக்கின்றனர். பாட புத்தகங்களோ கர்த்தரின் ஜபத்தைப் பற்றியதாகும். (இங்கு அவர்கள் மதத்தைத் தூஷணஞ்செய்ய வந்தவனல்ல.) உதாரணமாக:—‘ பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக” ....இன்னும் பல சொல்லி கடைசியில் ஆமென் என்று சொல்லிக் கொடுக்கின்றார்கள். (இங்கு நான் ‘அவர்களை (பாதிரிமார்களை) ஏளனஞ்செய்ய வந்தவனல்ல, ஆனால் அவர்கள் செய்வதுபோல் ஏன் நாம் நமது மதத்தை போதிக்கலாகாதுயென்றும், அவரவர்களுக்குகந்த மதத்தை போதிக்கும்படி சொல்லிவருகின்றேன்.) பிறகு உயர்தரப் பாடசாலைகளில் மேனாட்டார் சரித்திரங்களை சொல்லிக் கொடுக்கின்றார்கள். கணக்கு, சைன்ஸ், பூகோளம், சரித்திரங்கள் எல்லாம் ஆங்கிலபாஷையிலேயே இருக்கின்றன. அவைகளே போதிக்கப்படுகின்றன.

(படரும்.)

எஸ். என். ராமு,

கூறை நாடு.

குறிப்பு:—சந்தாதாரர்களுக்கு நாம் பரிசாக (இனாமாக) அனுப்ப எண்ணிய புத்தகத்துக்குத் தபால்சார்ஜ் 1-அணாவும் ஒவ்வொரு சந்தாதாரரும் தபால் முத்திரை மூலம் அனுப்பவும். தபால் முத்திரை யனுப்பாதவர்களுக்கு புத்தகம் கிடையாது.

பத்திரிகாசிரியர்.

" பைந்தமிழ் " பஞ்சாங்கம்.

(All Rights Reserved.)

ருத்ரோத்காரி௵ ஆடிமாத 1923௵ ஜூலை-ஆகஸ்டுமாத இங்கிலீஷ் 1923, கலியுக௵ 5025, சாலிவாகன௵ 1846, கொல்லம் 1098, விக்ரமார்க்க 1980, ஹிஜரி 1341, பஸலி 1332, பிரபாவதி 57.

ஜூலை மாதம்.	ஆடி மாதம்.	கிழமை	திதி.		நக்ஷத்திரம்.		யோகம்.		புண்யகாலம், விசேஷங்கள்.
16	1	இங்	திரு	56-7	ஆயி	27-37	சித்	41-10	கடகரவி 24-10, தக்ஷிணாயனம்.
17	2	செவ்	சது	51-55	மக	26-46	வியு	35-25	கிணறு, குளம்வெட்ட.
18	3	புத	பஞ்	46-52	பூர	23-6	வரி	28-59	கணக்கு அப்யசிக்க.
19	4	வியா	சஷ்	41-21	உத்	19-46	பரி	22-42	கிருஷி ஆரம்பஞ்செய்ய.
20	5	வெள்	சப்	35-28	அஸ்	16-2	சிவ	14-47	பசு, எருமை, குதிரை, வண்டி வாங்க.
21	6	சனி	அஷ்	29-23	சித்	12-0	சித	7-16	குருவகார நிவர்த்தி.
22	7	ஞாயி	நவ	23-16	சுவா	7-54	சுப	52-8	உபாயனம், வித்தியாரம்பஞ்செய்ய
23	8	திங்	தச	17-22	விசா	3-54	சுப்	44-55	சாக்ஷுஷமனு.
24	9	செவ்	ஏகா	11-52	அனு	0-16	பிரா	38-5	கோபத்ம விரதம், நிலம் வாங்கிப்பயிரிட,
					கேட்	56-52			[பொன்னேரிகட்ட
25	10	புத	துவா	6-55	மூல	54-43	ம	31-45	கிழக்குநட
26	11	வியா	திர	2-39	பூரா	53-14	வை	25-57	களஞ்சியம்வைக்க.
			சது	56-37					
27	12	வெள்	○பௌ	57-6	உத்	52-48	விஷ்	21-25	காருணி கஜேந்திரமோக்ஷம், யஜுர்விரவ
28	13	சனி	பிர	56-4	திரு	58-31	ப்ரீ	17-7	வாகனமேற, தானியம்வாங்க. [ணம்.
29	14	ஞாயி	துதி	56-22	அவி	55 29	ஆயு	14-18	ஆபரணம்பூண, துண்வைக்க.
30	15	திங்	திரு	52-54	சத	58-12	சௌ	12-21	மாடு முதலானவை வாங்க.
31	16	செவ்	சது	60-0	பூரட்	60-3	சோ	11-24	பிரவாகபூர்த்தி.

ஆகஸ்டு மாதம்	ஆடி மாதம்	வாரம்	திதி		நக்ஷத்திரம்		யோகம்		புண்யகாலம், விசேஷங்கள்.
1	17	புத	சது	0-39	பூரட்	3-6	அதி	11-18	கிழமைகூட.
2	18	வியா	பஞ்	4-24	உட்	8-29	சுக	11-58	திருவை, தஞ்சா 18-ம பெருக்கு உத்சவம்.
3	19	வெள்	சஷ்	8-53	ரேவ	14-31	திரு	13-11	பொன்னேரிகட்ட.
4	20	சனி	சப்	13-43	அசு	20-53	சூல	14-45	காலாஷ்டமி.
5	21	ஞாயி	அஷ்	18-25	பர	27-14	கண்	16-11	சிவாலயங்களில ஆடிப்பூர உத்சவம
6	22	திங்	நவ	23-5	கார்	32-10	விரு	17-24	கிருத்திகை.
7	23	செவ	தச	26-53	ரோ	38-24	துரு	18-7	....
8	24	புத	ஏகா	29-38	மிரு	42-35	வியா	18-0	சர்வ ஏகாதசி, மாத்வஏகாதசி.
9	25	வியா	துவா	31-15	திரு	45-38	அர்	17-5	பிரதோஷம்.
10	26	வெள்	திர	31-37	புன	47-26	வச்	15-10	ஆலயபிரதோஷம.
11	27	சனி	சது	30-43	பூச	47-59	சித்	12-14	....
12	28	ஞாயி	● அமா	28-36	ஆயி	47-23	விய	8-20	ஆடி அமா, தீபஸதம்பபூஜை,
13	29	திங்	பிர	25-25	மக	45-43	வரி	3-31	விட்டுச்சபம்வைக்க. [அகஸ்தியோதயம்.
							பரி	54-25	
14	30	செவ்	துதி	21-17	பூர	43-12	சிவ	51-35	ஆடிபூரதீர்த்த [வாரி.
15	31	புத	திரு	26-26	உதர	40-1	சித்	44-42	ராகசதுர்த்தி.
16	32	வியா	சது	11-0	அஸ்	36-18	சாத	34-27	பிரயாணம்செயய

			சுக புத
கே	1-கட-புத 15-கட-சுக் 17-சிம்-புத		ரவி செ
			ராகு
		குரு	சனி

PRINTED BY SOLDEN AND CO., FOR K. JAC... ISAIYAR, B.A., EDITOR AND PUBLISHER, MADR...